SARINIHAR
சரிநிகர்

# சரிநிகர்

*சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி*

இதழ்-210 நவ.19-25,2000 விலை ரூபா 12/=

எப்போ வரும்?
கொன்று குவித்தும் கொல்லுண்டிறந்தும்
நின்று நிதமழியும் இந்நிலத்தில் - என்றுவரும்
சமாதானம் துளிர்விட்டு சந்தோசப் பூ மலர்ந்து
சுமை நீங்கி வாழுகிற சுகம்?

- ஈழமோகம்





## உங்கள் கேள்விகளும் ஆனந்தசங்கரியின் பதில்களும்


# தீர்வைக் குழப்புவது யார்?



## முஸ்லிம் காங்கிரஸ்: தேவை ஒரு கிழக்குத் தலைமை!



## காட்டிக் கொடுக்கும் இ.தொ.காவும் ஒத்தூதும் வீரகேசரியும்




## இரணியன்— திரைப்படம் வரவு வைக்கப்படாத இரத்தமும் கணக்கில் வராத வரலாறும்



## ஜே.வி.பி.: கோஷத்தில் சிவப்பு! கொள்கையில் கறுப்பு!!

# 43 ஆயிரமும் 3 நாட்களும்

## நலன்புரி நிலையங்களைச்சுற்றி குற்றச் செயல்கள் அதிகரிப்பு!

~ தர்மர்

இராணுவ நடவடிக்கைகள் யுத்தச் செயற்பாடுகள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் உள்ளேயும், அதன் சுற்றுச் சூழலிலும் பெருகியுள்ள கசிப்பு பாவனை, கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி மற்றும் பாலியல் குற்றங்கள், பாலியல் துன்புறுத்தல்கள் ஆகிய குற்றச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கும், பிரதம நீதியரசரின் உத்தரவுக்கமைய இப்பகுதிகளில் நீதி

நிர்வாகச் செயற்பாடுகள் நூறு வீதம் செயற்படுத்தப்படுவதற்கும் உரிய கடமைகளைச் செய்வதன் மூலம் வவுனியா நீதிமன்றத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன், இந்த நலன்புரி நிலையங்களின் பாதுகாப்பு மற்றம் சட்டம் ஒழுங்குகளுக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

நீதிமன்ற நிர்வாகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் சட்டச் செயற்பாடுகள், பொலிசாரின் கடமைகள் என்பன குறித்து, பூந்தோட்டம் நலன்புரி நிலையத் தொகுதியில் அமைந்துள்ள 9 நலன்புரி நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளையும் நீதிமன்றத்திற்கு அழைத்து மாவட்ட நீதிவான் விளக்கமளித்தார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் பிடிவிறாந்து நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய நீதிபதி, பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு பிடிவிறாந்து நடைமுறைப் படுத்துவதற்கு உரிய சந்தேக நபர்களைப் பிடித்து நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதற்கு வாகன வசதிகள் இல்லை என்பதைச் செவிமடுத்து, பிடிவிறாந்துகளை உரிய நபர்களுக்குக் கையளித்து அவர்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதுடன், அவர்கள் வெளியில் சென்று நலன்புரி நிலையங்களுக்குத் திரும்புகையில் நீதிமன்றத்திற்குச் சமூகமளித்ததை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

பாலியல் குற்றங்கள், பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது வேறு குற்றங்கள் தொடர்பாக நலன்புரி நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு விசாரணை செய்யும் அதிகாரம் இல்லையென்பதால், அத்தகைய குற்றங்கள் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவித்து மேல் நடவடிக்கை எடுப்பதற்குரிய வகையில் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

பாலியல் குற்றங்கள், பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக நலன்புரி நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உடனடியாகச் செயற்படாததன் காரணமாக அத்தகைய சம்பவங்களின் தடயங்கள் அழிந்து அல்லது மறைந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதையும் நீதிவான் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுமக்களின் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தவல்ல சமூகக் குற்றங்களான கசிப்பு, கஞ்சா, ஹெரோயின் இவற்றைப் பாவித்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் ஆகிய குற்றங்களுடன், பாலியல் குற்றங்கள், மற்றும் தொழில்நுட்பத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள், ஏமாற்றுதல், வஞ்சனை செய்தல், ஆள்மாறாட்டம் அத்துடன் பொதுக் குற்றங்களாகிய அடிபிடி, கொலைமுயற்சி, கொலை போன்ற பொதுக்குற்றங்கள் என்பன இந்த இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் இடம்பெறாத வகையில் தடுப்பதற்கும், இவ்வாறான குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விடயங்களை உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுப்பதற்கும் ஒத்துழைக்குமாறு நீதிவான் கேட்டுள்ளார்.

வவுனியா நீதிமன்றத்திற்கு வருகின்ற கசிப்பு காய்ச்சுதல், விற்பனை செய்தல், போன்ற குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள்,

நீதிமன்றத்திற்குக் கிடைத்துள்ள தகவல்கள் என்பவற்றின் மூலம் இந்த நலன்புரி நிலையங்களின் உள்ளேயும், சுற்றாடலிலும் கசிப்பு பாவனை, விற்பனை, கசிப்பு உற்பத்தி என்பன தாராளமாக இருப்பது தெரியவந்துள்ளது என்றும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இதன்படி, வவுனியா நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்யப்படுகின்ற கசிப்பு தொடர்பான வழக்குகளில் 70 வீதமானவற்றில் எதிரிகளாக நலன்புரி நிலையங்களைச் சேர்ந்தவர்களே ஆஜர் செய்யப்படுகின்றார்கள். கசிப்பு தொடர்பான குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அதிகாரிகள் கடமை தவறுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நீதிமன்றம் கருதுவதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

கசிப்பு தொடர்பான வழக்குகளில் நீதிமன்றத்தில் முதல் தடவை ஆஜர் செய்யப்படுபவர்களுக்குக் குறைந்த தண்டமே விதிக்கப்படுகின்றது. இதனைக் கட்டுவதற்காக நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற பிணை அனுமதியைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையில்

மீண்டும் கசிப்பு தொடர்பான குற்றத்தைச் செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டே தண்டம் கட்டப்படுகின்றது. நீதிமன்றத்தில் தண்டம் விதிப்பதும் தண்டனை வழங்குவதும் குற்றவாளிகளைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்காகவே. இரண்டாம் தடவை,

மூன்றாம் தடவையென குற்றத்தைச் செய்பவருக்கு கசிப்பு வழக்குகளில் கூடிய தண்டம் விதிக்கப்படுகின்றது. தண்டம் கட்டுவதற்கு வழங்கப்படுகின்ற அவகாசத்தில் கட்டாவிட்டால் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும்.


ஆனால், திருந்துவதற்குப் பதிலாக, இங்கு மீண்டும் மீண்டும் கசிப்பு தொடர்பான குற்றம் செய்யப்படுவதையே நீதிமன்றம் அவதானித்துள்ளது. கடந்த வாரத்தில் ஒரு வயோதிபப் பெண்ணுக்கு விதிக்கப்பட்ட 43 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை அவர் 3 தினங்களிலேயே கட்டியுள்ளதையும் நீதிமன்றம் அவதானித்துள்ளது. வருமானமற்ற நிலையில் அரசாங்கத்தின் நிவாரண உணவுப் பொருட்களில் தங்கியிருப்பவர்களுக்கு இவ்வாறு பெருந்தொகையான தண்டப் பணத்தைக் கட்ட முடிந்துள்ளது என்பதும், நலன்புரி நிலையத்திலும், அதன் சுற்றாடலிலும் நிலவுகின்ற கசிப்பு தொழிலின் ஆதிக்கத்தையே தெளிவுபடுத்துகின்றது என்று நீதிமன்றம் நம்புகின்றது என்றும் நீதிவான் சுட்டிக் காட்டினார்.

சமூகக் குற்றங்கள் பெருகுவதையும் அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதையும் நீதிமன்றம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டாது. இதேவேளை, இத்தகைய குற்றங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், பொலிசாரின் ஒழுக்கக் கோவை முறைமையின்படி, கடமையை உதாசீனம் செய்தமை குறித்து பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படும் என்பதையும் வவுனியா மாவட்ட நீதிவான் நினைவு படுத்தியுள்ளார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி தெரிவித்த நீதிவான், மது ஒழிப்பு பொலிஸ் பிரிவினரின் சிறப்பான செயற்பாடுகளைப் பாராட்டினார். இதேவேளை, பூந்தோட்டம் நலன்புரி நிலையங்களில் சிலவற்றின் செயற்பாடுகள் குறித்து நீதிமன்றம் திருப்தி கொண்டுள்ளதாகவும் சிலவற்றின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியும் கொண்டுள்ளதாக நீதிவான் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் பணி சிரமமான பணியென்ற போதிலும், நீதி நிர்வாகத்தைச் சரிவரச் செயற்படுத்துவதற்கு பொறுப்பதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் நீதிவான் வலியுறுத்தினார்.

இந்த முகாமில் பத்தாயிரத்துக்கும மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்த நிலையில் தங்க வைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒரு உரையாடல்

அலுவலகத்தில் ஏதோ வேலையாக இருந்த எனக்கு ஒரு டெலிபோன் அழைப்பு வந்தது.

பேசியவர் எனது சிங்கள நண்பர் ஒருவர். கிட்ட தட்ட ஏழு அல்லது எட்டு மாதங்களுக்குப் பிறகு அவருடைய அழைப்பு வந்திருந்தது.

"கனநாளைக்குப் பிறகு..." என்று கூறியபடி பேசத்தொடங்கினேன்.

'ஒன்றுமில்லை மச்சான்... ஒரு அவசரமான விஷயம். ஆறாம் ஆண்டு படிக்கும் மகளுக்கு தீபாவளி பற்றி ஒரு கட்டுரை எழுத வேணுமாம். எனக்கு அதுபற்றி ஒன்றுமே தெரியாது. அதுதான் கேட்க எடுத்தனான்" என்றார் அவர்.

"ஓஹோ, அப்ப இப்ப தவிர்க்க முடியாமல் நீங்களும் எங்கடை பண்பாடு கலாசாரம் பற்றியெல்லாம் அறிஞ்சுதான் ஆகவேண்டி வந்துட்டுதோ?" என்று கிண்டினேன் நான்.

"அதுதானே... பாரேன்.. நாங்கள் இவ்வளவு காலம் இருக்கிறம். தீபாவளிக்கு தமிழ் நண்பர்கள் வீட்டைபோய் 'திண்டு குடிச்சு'ம் வந்திருக்கிறம். ஆனால், அது என்ன என்று ஒரு நாளும் கேட்கத் தோன்றவில்லை. எங்களைப் பொறுத்தவரையில் அது உங்கடை ஒரு 'அவுருத்து" (வருஷம்), அவ்வளவு தான்!"

"அப்ப புதிய கல்வித்திட்டம் நிறைய வேலை செய்யுது எண்டு சொல்லுறீர்"

"அது என்ன இழவு செய்யுதோ தெரியாது. பெற்றோராகிய எங்களுக்கு நிம்மதியில்லாமல் பண்ணிறதிலை மட்டும் குறைவில்லை. ஆனால், இந்த தமிழ் படிக்கிறது அந்த கலாசாரத்தை அறியிறது எல்லாம் ஓரளவுக்கு நல்ல தெண்டு தான் நினைக்கிறன்...."

பிறகு தீபாவளியை பற்றி நான் அவருக்கு எனக்குத் தெரிந்தளவுக்கு புரிய வைத்தேன்! நண்பருக்கு நல்ல சந்தோசம். ஆனால், அதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது எனக்குள் ஒரு மெல்லிய சந்தேகம். இந்த விடயங்களை இவர் எப்படி எதிர்கொள்கிறார்? வெறும் கட்டுரைக்கான தவகல்களுக்கு அப்பால் இதுபற்றிய இவரது உணர்வு என்னவாக இருக்கும்? அவரிடம் கேட்டேன்....

"எனக்கு நரகாசுரன் கொல்லப்பட்ட சந்தோசத்தை மக்கள் கொண்டாடி மகிழ்கிறதிலை நல்ல சந்தோசம். உண்மையிலை அநியாயங்களை ஒழிக்கிறது என்பது எவ்வளவு முக்கியமான விஷயம்.. ஆனால்...."

"ஆனால், இப்ப நரகாசுரர்கள் பெருகிவிட்டார்கள். தெய்வங்கள் காணாமல் போயிட்டுது. மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற யாரும் இல்லை. இப்படியே போனால் அடுத்தடுத்த சந்ததிக்குப் பிறகு நரகாசுரர்களே தெய்வங்களாகி விடுவார்கள் போல கிடக்குது"

-அவர் பேசி முடிந்த போது நான் ஆச்சரியத்துடன் அவரிடம் கேட்டேன். "ஏன் யாரை நரகாசுரர் என்கிறீர்"

"ஏன் எங்கடை தலைவர் மாரைத்தான்.. சந்திரிகாவிலிருந்து பிரபாகரன் வரை..." நான் பிறகு பேசவில்லை. அதை மறுத்துச் சொல்ல ஏதாவது இருக்கிறதா என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

"என்ன பேசவில்லை" என்றார் அவர். "பிரபாகரனையும் சேர்த்தது பிடிக்கவில்லையோ?"

"இல்லை யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன் நான்.

அவர் ஒரு தமிழராக இருந்திருந்தால் சிலவேளை எனக்கு மறுக்க முடிந்திருக்கும். சிங்களவராக இருப்பதால், அவரது மனப்பதிவுகளை எப்படி மறுத்துரைப்பது என்று எனக்கு யோசித்து முடியவில்லை.

## இன்னொரு பூச்சுத்தலா?

மலையக இளைஞர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சாதாரண சட்டத்தின் கீழேயே கைது செய்யப்படுவர் என்பதை தாம் உறுதிப்படுத்துவதாக அமைச்சர் பட்டி வீரக்கோன் அமைச்சர் திசாநாயக்க ஆகியோர் தம்மிடம் கூறியதாக மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

அப்படியானால், மலையக இளைஞர்கள் இனிமேல் கைது செய்யப்படும் போது பிடிவிறாந்து பெறப்பட்ட பின்னரே கைது செய்யப்படுவார்களோ?

அவசர காலச்சட்டம் இருக்கட்டும். பயங்கரவாத தடைச்சட்டம் என்ன செய்யப் போகிறது? அதன்கீழ் கைதுசெய்யப்படுவர்களுக்கும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பின்னர் தான் கைது நடக்குமோ?

"அமைச்சர் சொன்னது இருக்கட்டும். சட்டமா அதிபர் திணைக்களம் இந்த அறிவித்தலை பொலிசுக்கு எப்படி அறிவித்தது? எப்படி நடந்து கொள்ளப் போகிறது என்பதை இருந்து பாருங்கள். ஒன்றும் நடக்காது! சந்திரசேகரனை சமாளிக்க இப்படிச் சொல்லியிருப்பார்கள். எல்லாம் அப்படியே இருக்கும். அவசரகாலச் சட்டம் இருக்கும். போர் சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறு பயங்காரவாதச் சந்தேகநபரை சொல்வது சிரிப்புக்கிடமானது என்கிறார் "எமது" நண்பர் ஒருவர்.

ஆக இதுவும் ஒரு பூச்சுத்தல் தானா?"

# மலையகத்தில் தீ!

## சில கேள்விகள்

~ சுனந்த தேசப்பிரிய

கடந்த ஒக். 29ம் திகதி ஆரம்பித்து மலையகம் முழுவதும் பரவிய இனக்கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பொழுதிலும் இங்கு கலந்துரையாடப்படாது அசட்டை செய்யப்பட்ட விடயங்கள் இரண்டு உள்ளன எனலாம். முதலாவது இந்த கலவரத்தில் சிங்கள அரசு ஆடிய நாடகம்.

கலவரத்தை ஆரம்பித்ததில் அரசின் பொறுப்பு உள்ளதென்பதை எவரும் குற்றம் கூறவில்லை. கலவரம் ஆரம்பித்த பின்னர் அரசு நிறைவேற்றிய பொறுப்புகள், கடமைகள் என்ன? இந்தப் பொறுப்புகளையும் கடமைகளையும் விளங்கிக் கொள்ள கலவரத்தில் இறந்து போன மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இறந்தவர்களில் சிங்களக் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட வயதான தமிழரை தவிர மற்ற அனைவருமே பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இறந்து போயுள்ளனர். சிங்களவர்களும் கலவரத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். உண்மையில் தமிழ் மக்களின் சொத்துக்களுக்கே அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டது எனலாம். இதன்படி அதிகமாக சிங்களவர்களே வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரியவருகின்றது. எனினும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் அகப்பட்டு எந்தவொரு சிங்கள மக்களும் காயங்களுக்குள்ளாகவும் இல்லை. கொல்லப்படவும் இல்லை. மாறாக கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் தமிழர்களாகவே உள்ளனர். அதுமட்டுமன்றி கைது செய்யப்பட்ட பெரும்பாலான தமிழர்கள் அவசரகாலச்சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் சொத்துக்கள் பொலிஸாரினதும், படையினரினதும் ஆதரவுடனேயே சம்ஹாரம் செய்யப்பட்டன எனலாம். இது 1983ல் தமிழர் விரோத செயற்பாடுகளில் சிங்கள அரசு பங்கெடுத்துக் கொண்ட செயற்பாடுகளுக்குச் சமமான செயற்பாடாகும். இவ்விடயங்கள் சிங்கள அரசின் முக்கியமான பண்பொன்றை எங்களுக்கு விளக்கப்படுத்துகின்றதெனலாம். அதாவது தமிழ் மக்களுக்கெதிராக மிகவும் மிருகத்தனமாக கொடூரமாக அரசு நடந்துகொள்கின்றது என்பதாகும். தமிழ் மக்களைக் கைது செய்யவோ படுகொலை செய்யவோ சிங்கள அரசு தயங்குவதில்லை. ஆனால் சிங்கள மக்கள் தொடர்பாக அவ்வாறில்லை. இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைய பிரதான காரணமாகியது அரசின் இவ்வியல்பு எனலாம். இன்றளவிலும் அவ்வியல்பில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதையும், அவ்வியல்பு சற்று எழுச்சி கொண்டுள்ளது என்பதையும் அண்மைய மலையகக் கலவரம் எடுத்துக் காட்டியுள்ளது. சிங்கள அரசைச் சீர்திருத்த இதுவரை எடுக்கப்பட்ட எந்தவொரு முயற்சியும் வெற்றியளிக்கவில்லை என்பதையும் இச்சம்பவம் சுட்டிக் காட்டியுள்ளது. அதேபோல் இந்த அசம்பாவிதத்தில் பொலிசினதும், படையினதும் பங்கு குறித்து எந்தவொரு விசாரணையும் இடம்பெற வாய்ப்பில்லை. இதனால் தமிழர் விரோத இயல்பு அவ்வண்ணமே சிங்கள அரசில் நிலவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. சிங்கள அரசின் மீட்பர்களாக உள்ள தமிழ் புத்திசீவிகள் இது பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?



இரண்டாவது விடயம் கூட கைது செய்யப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் குறித்தே எழுகின்றது. மலையகத்தில் பலதரப்பட்ட தொழிற்சங்கங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் உள்ளன. இந்த அசம்பாவிதச் சூழலின் போதும், அதன் பின்னரான சூழலின் போதும் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் தாம் என்ன? மலையக இளைஞர்களின் சினத்திற்கு வாய்ப்பளித்து விட்டு அவர்கள் மௌனம் காத்தனரா? தமிழ் இளைஞர்களும் வன்முறைகளில் ஈடுபட்டனர் என்பதை மறுக்க முடியாது. இவ்வன்முறைகள் குறித்து அவர்கள் என்ன தான் செய்யப் போகின்றார்கள்? மலையகத்தின் புதிய அரசியல் எழுச்சியைப் பற்றி விளங்கிக் கொள்ள, கற்றுக் கொள்ள அவர்கள் தயாரா? அல்லது இந்த வன்முறைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் எண்ணுகின்றனரா? அல்லது மௌனம் காத்தல் சிறந்தது எனக் கருதுகின்றார்களா?

2000 ஒக்டோபர் கலவரத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் குறித்தான மிகச் சரியான பதிவுகள் எவையும் இவ் அமைப்புகளிடம் இல்லை. சமீபத்தில் இரத்தினபுரியில் நடந்த தமிழர்களுக்கு எதிரான கலவரங்களின் போது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் குறித்தும் சரியான பதிவுகள் இல்லை. பலதரப்பட்ட அமைப்புகள் பல புள்ளிவிபரங்களை வெளியிட்டன. சரியான இறுதி அறிக்கையை வெளியிட எந்த அமைப்பும் முன்வரவில்லை. இன்றைய நிலைமையும் இதுதான். கொல்லப்பட்டவர்களின் பெயர்கள், விபரங்கள் கூட அவ்வமைப்புகளிடம் இல்லையெனலாம். மலையகத் தமிழ் மக்களை ஒருபுறம் பொலிஸார் படுகொலை செய்கின்றனர். எனினும், மறுபறத்தில் பிரதான தொழிற்சங்கங்களோ அவை பற்றி எதுவித அக்கறையுமின்றி இருக்கின்றன என்பது தெளிவாகின்றது. மலையக பல்லின அமைப்புகளின் நிலைமை இவ்வாறெனின் இளைய சமுதாயம் தமக்கும் பிறருக்கும் அழிவை கொண்டுவரும் அரசியலை நோக்கி பயணிப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இலங்கையின் ஜனநாயக அரசியல் குறித்து அக்கறை கொண்டுள்ள எந்தவொருவருமோ அல்லது அமைப்போ அல்லது சக்தியோ மலையக அரசியல் போக்குக் குறித்து ஆழமான அவதானத்தைச் செலுத்த வேண்டும். அழிவை ஏற்படுத்தக் கூடிய இளைஞர் கிளர்ச்சிக்கான அனைத்து சாதகங்களும் அங்கு வளர்ச்சி பெற்று வருகின்றது. அனைத்தையும் விட சிங்கள அடிப்படைவாத சக்திகளினால் மலையக சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மலையக தமிழ் மக்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் இக்கிளர்ச்சியை தூண்டுவதாகவே இருக்கும். இவ் அடிப்படைவாத சிங்கள சக்திகள் மலையகத்தில் மூட்டும் தீப் பொறிகள் பெரும் தீயை மூட்டும் வல்லமை படைத்தவை. இதனால் மலையகத்தில் அடிப்படைவாத இயக்கங்களை தோற்கடிப்பது சமாதானத்தை ஏற்படுத்த வழி வகுக்கும்.

---

# தீர்வைக் குழப்புவது யார்?

~ விவேகி

அந்தப் பெண் நான்கு குழந்தைகளின் தாய். யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கணவனை இழந்த நிலையில் சவூதி சென்று ஐந்து வருடங்களாகத் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்பியிருந்தார்.


யாழ். திருமலைக் கப்பல்பயணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது அவருக்குத் தெரியாது. கொழும்பில் தங்கியிருந்த தனது சகோதரன் முறையான இளைஞர் ஒருவரையும் அழைத்துக்கொண்டு நவம்பர் 12ம் திகதி காலை திருகோணமலைக்கு ரயிலேறினார். திருகோணமலைக்கு பஸ்ஸில் சென்றால் "செக்கிங்" அதிகம். இறங்கி ஏற வேண்டும். வெளி நாட்டுச் சாமான்களுடன் போவது சிரமம் என்று சிலர் ஏற்கெனவே அறிவுரை கூறியிருந்தார்கள்.

ரயில் பணத்தில் "செக்கிங்" குறைவு தான். கல்லோயாச் சந்தியில் மட்டும் தான் செக்கிங்.கல்லோயா வந்தது. பாதுகாப்புத் தரப்பார் "செக்கிங்" செய்து கொண்டு வந்தார்கள். இந்தப் பெண்ணின் வெளிநாட்டுப் பொருட்களைக் கண்டதும் மனம் தடுமாறி விட்டது. இருவருக்கும் சிங்களம் தெரியாதது. பாதுகாப்புத் தரப்பாருக்கு வசதியாகப் போய் விட்டது.

கடுமையான "செக்கிங்" விசாரணை. இருவரும் வண்டியிலிருந்து இறக்கப்பட்டனர். ரயில் புறப்படும் நேரமாயிற்று. தலா ஒவ்வொரு பவுண் எடையுள்ள இரண்டு மோதிரங்களை அப்பெண்ணிடமிருந்து பெற்றுக்கொண்டனர், இளைஞரிடமிருந்து ஐந்நூறு ரூபாவை அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டனர். கடுமை தளர்ந்தது. செக்கிங் முடிந்து போக அனுமதித்தனர். அபலையின் உழைப்பில் இவர்களுக்குப் பங்கு! எப்படி?

நோர்வே நாட்டு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெயிம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் வன்னியில் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொறுப்பு இப்போது இலங்கை அரசின் மீது திருப்பப்பட்டிருக்கிறது.





யுத்தவெறிபிடித்த மனநோயாளிகள் என்று விடுதலைப்புலிகள் அமைப்பை வர்ணித்தவர்களும், இராணுவ ரீதியில் அவர்களை ஒழித்துக் கட்டுவது ஒன்று தான் இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்று அரசியல் நடத்தியவர்களும், வேலுப்பிள்ளை பிரபாகரன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்ததைத் தொடர்ந்து மிரண்டு போயிருக்கிறார்கள்.

இந்த மிரட்சியின் வெளிப்பாடாக புலிகள் பலமிழந்து போகும் போது மட்டும் தான் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்பார்கள். அப்படியான ஒரு இடைக் காலத்தில் தாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதோடு ஆயுதங்களையும் சேமித்துக் கொண்டு திடீரெனத் தாக்கத் தொடங்கிப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்வார்கள் என்றெல்லாம் சிங்கள இனவாதிகள் அரசியல் பேசுவதை இப்போது காணக் கூடியதாக இருக்கிறது.

இப்படியெல்லாம் பேசும் இனவாதிகள் அரசு எந்தக் காலத்தில் இதயசுத்தியோடு விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல தமிழர்களுடனாவது பேசியிருக்கிறது என்பதைச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் என்று எழுதப்பட்ட ஒப்பந்தங்களையே அமுல்நடத்தத் தைரியமில்லாமல் தூக்கியெறிந்த கதைகளில் அரச தரப்பு நேர்மையீனத்தைத் தவிர தமிழர் தரப்பு நேர்மையீனம் எதுவுமே இனங் காணப்படவில்லை. தமிழர் தரப்பில் இருந்த இதய சுத்தி சிங்களத் தலைமைகளிடம் கிஞ்சித்தும் காணப்படவில்லை.

1948 தொடக்கம், இன்றுவரை ஒவ்வொரு நிகழ்விலும் சிங்கள இனவாதிகளாலும், அரசாங்கத்தாலும் தமிழர்கள் தாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிதவாதத் தலைவர்களுடன் அமைந்த பேச்சுவார்த்தையாக இருந்தாலென்ன, தீவிரமான போராளித் தலைவர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையாக இருந்தால் என்ன பொறிவைத்துப் பேசி மசிய வைத்துவிடலாம் என்ற இறுமாப்பு அரசிடம் காணப்பட்டதாலேயே பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தனவே தவிர தமிழர்கள் தரப்புத் தவறுகளாலல்ல என்பதை நடுநிலையாளர்கள் எவரும் ஏற்றுக்கொள்வர்.

நாளுக்கு ஒரு வரி எழுதினால் கூட, ஆறுமாதத்தில் முடிந்து விடக்கூடிய தீர்வுப்பொதியை ஆறுவருடங்களாக எழுதினார்கள். எழுதிய பின் ஏராளமான குறைபாடுகள் வேண்டுமென்றே திணிக்கப்பட்டிருந்ததை ஆரம்ப அரசியல்வாதிகள் கூடக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. தமிழரின் உயிர் நாடியான நிலத்தைக் கற்பனைத் தளமாகப் பிரித்தார்கள். பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பவற்றில் வடக்கு கிழக்கு மாநிலம் தமிழர்கள் தாயகமாக இருக்க இவர்கள் எழுதிய தீர்வுப் பொதியில் மட்டும் சூக்குமங்களையும் கடடச் சிக்கல்களையும் இணைத்து அரசியல் தலையிடியை விதைத்தார்கள். நாங்கள் தருகிறோம். தமிழர்கள் தான் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள் என்ற பாணியில் கதைத்தார்கள்.

➪ 7

## உங்கள் கேள்விகளும் தமிழ்க் கட்சித் தலைவர்களின் பதில்களும்

### இவ்வாரம் தமிழர் விடுதலைக் கூட்டணி இணைத் தலைவர் ஆனந்தசங்கரி பதிலளிக்கிறார்

# அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன்றி நாம் வேறு என்ன செய்ய முடியும்!

*○ நடந்து முடிந்த தேர்தலில் உங்களுக்கு கிடைத்த வெற்றிக்குக் காரணம் தமிழ்மக்கள் த.வி.கூ மீது நம்பிக்கை கொண்டிருப்பதா? அல்லது ஆயுதமேந்திய இயக்கங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருப் பதா? என்று கருதுகிறீர்கள்?*

*ராஜகுமாரன், யாழ்ப்பாணம்*

த.வி.கூட்டணி மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளமையினாலேயே எம்மால் சில ஸ்தானங்களைப் பெற முடிந்தது. எமக்கு அரசாலும் ஜனநாயகப் பாதைக்கு திரும்பியுள்ளதாகக் கூறும் அரசு ஆசிபெற்ற ஓர் ஆயுதக் குழுவினாலும் கொடுக்கப்பட்ட இடைஞ்சல்கள் பற்றி பொதுமக்கள் நன்கு அறிவர். வாக்கெடுப்பு முகவர்களைக்கூட நியமிக்கவிடாது மிரட்டியதும் அனைவரும் அறிந்ததே. இத்தகைய நெருடிக்கடியின் மத்தியிலும் நாம் மூன்று ஸ்தானங்களைப் பெற்றுள்ளோம்.

*○ கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கு உங்கள் கட்சியின் செயலற்ற போக்கே காரணம் என்று சொன்னால் அதை மறுப்பீர்களா?*

*திருச்செல்வம், மூதூர்*

அ. தங்கத்துரை அவர்களின் இழப்புகளுக்குப் பின் த.வி.கூட்டணிக்கு ஏற்பட்ட இடைஞ்சல் மக்கள் அறியாததல்ல. நீண்ட காலம் தமிழ் காங்கிரஸில் அங்கத்துவம் வகித்தவன் நான். தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் இப்படியான நிலை என்றும் திருமலைக் கேற்படக்கூடாதென அறிந்தே திருமலை தொகுதியில் தேர்தல்களில் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் சில குழுக்கள் போட்டியிட்டதனால் மேலும் சில பாதிப்புகள் ஏற்பட்டன என்பது தான் உண்மை.

*○ திருமலையில் ஒரு தமிழ்ப்பிரதிநிதி இருந்து செயற்படுவது அவசியம் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா? அப்படியானால் அதற்காக த.வி.கூ.என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது?*


*நவம், திருமலை*

திருமலை தமிழ் மக்களின் ஓர் கேந்திர ஸ்தானம் தமிழ் பிரதிநிதித்துவம் திருமலைக்கு அவசியமே. ஆகவே திருமலை சமந்பந்தப்பட்ட பிரச்சினைகளை தற்போதுள்ள புறமாவட்ட த.வி.கூட்டணி பா.உக்களே கவனிக்க வேண்டும். அதற்குரிய ஒழுங்களை த.வி.கூ. செய்யும்.

*○ வடக்கில் பத்திரிகையாளர் நிமல் ராஜன் கொல்லப்பட்டதற்கு எதிராக கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டீர்கள். குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவ தற்கு அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?*

*தேவராஜா, கொழும்பு*

பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்டதற்கு மக்களுடன் சேர்ந்து எமது ஆட்சேபனையைத் தெரிவித்தோம். குற்றவாளிகளைப் பல்வேறு குழுக்களிடம் ஆயுதங்கள் இருக்கும்வரை நேரடியாக பாதிக்கப்பட்ட அன்னாரின் குடும்ப உறுப்பினர்களே அடையாளம் காட்டத் தயங்குவார்கள். குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டுமென நாம் அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதன்றி நாம் வேறு என்ன செய்ய முடியும்?



*○ இனப்பிரச்சினைக்கோ யுத்தத்திற்கோ ஒரு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்கள் தொடர்பான அதன் போக்கை அண்மையில் நடந்த பண்டாரவளை சம்பவம் தெளிவாகக் காட்டி விட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலையில் நீங்கள் மக்களின் பிரதிநிதி கள் என்ற முறையில் என்னதான் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்?*

*சிவதாசன், வெள்ளவத்தை.*

யுத்த நிறுத்தம் அரசியல் தீர்வு ஆகிய இரு விடயங்கள் சம்பந்தமாக நாம் தொடர்ந்து போராடி வருவோம். நமக்குள்ள இடையூறுகளில் அரசுடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க்குழுக்களும் உண்டு என்பதை மறந்து விட முடியாது. மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ள வெளிநாட்டுப்பிரதிநிதி விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டது ஓர் முக்கிய சம்பவமாகும். வரவேற்கக்கூடிய விடயமுமே. மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ள நாட்டுக்கு வேண்டிய ஒத்துழைப்பை நாம் வழங்கும் அதேவேளை விடுதலைப் புலிகள் ஏற்கக்கூடிய ஓர் தீர்வுத்திட்டத்தை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு தொடர்ந்து அழுத்தத்தை நாம் கொடுப்போம்.

*○ பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சியிலிருந்து ஒருவர் பா.உ. பதவிவகிப்பதால் தமிழ்மக்களுக்கு என்ன பயன் என்று கருதுகிறீர்கள்? (பழைய புளித்துப்போன பதிலை. தமிழ்மக்களின் துயரத்தை உலகுக்கு எடுத்துக் கூறலாம் என்று கூறவேண்டாம்.)*

*மணி, மட்டக்களப்பு*

பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி வகிப்பதால், எத்தனையோ விடயங்களைச் சாதிக்க முடியும். அரசு நடவடிக்கைகளை தட்டிக் கேட்கவும் முடியும். பழைய புளித்துப்போன பதிலாக இருந்தாலும் உண்மையான நிலைப்பாடும் அதுதான். வேறு வழிகள் இருப்பின் அவற்றை அறியத்தரும் பட்சத்தில் நாம் பரிசீலிக்கத் தயார்.

*○ பயங்கரவாதிகள் என்ற பேரில் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு விசாரணை ஏதுமின்றிச் சிறையில டைக்கப்படும் தமிழ் இளைஞர்களின் பாதுகாப்புக்காக அதுவும் பண்டா ரவளை போன்ற ஒரு சம்பவம் நடந்த பின் உங்களால் என்ன செய்ய முடியும் என்று கருதுகிறீர்கள்?*

*சந்திரன், தெஹிவளை.*

அநியாயமாக நீண்ட நாட்களாக சிறையில் வசிக்கும் இளைஞர்களை விடுதலை செய்யும்படியும் விசாரணைகளை துரிதப்படுத்தும் படியும், அவர்களை பாதுகாப்பான தமிழ்ப்பிரதேசங்களுக்கு மாற்றும் படியும் கேட்டுள்ளோம்.

*○ வடக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பா. உ. க்கள் இங்குவந்து செயற்படுவார்களா? அப்படிச் செயற்பட முடியாதென்றால் (பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதை மறுக்க வில்லை) அப்பிரதேசத்தின் பா.உ வாக இருப்பதில் என்ன பயன் என்று நினைக்கிறீர்கள்? இது வெறு மனே இங்கு சமூக நிலை நிலவுவதாக உலகை ஏமாற்றுவதாகாதா?*

*மதி, கொக்குவில்*

பாதுகாப்புப்பிரச்சினை இருக்கும் பட்சத்திலும் வடக்கு கிழக்கில் தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நமது பகுதிகளில் மக்களுடன் சேர்ந்து செயற்பட உள்ளனர்.

*○ தவிகூ. பா.உறுப்பினரான நிமலன் சௌந்தரநாயத்தை கொன்றது யார்? அவரது கொலைக்கான காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்? (இனந்தெரியாத சக்திகள் என்று மொட்டையாக பதில் சொல்ல வேண்டாம்.)*

*வாசு, ஆரையம்பதி*

நிமலன் சௌந்தரநாயத்தின் கொலை இனந்தெரியாதவர்களால் செய்யப்பட்டுள்ளது. உண்மையான கொலையாளிகள் யாரென அறிந்திருந்தால் தெரியப்படுத்துவது பலன் தரும்.

## போலி வைத்திய சான்றிதழ்?

பதினாறு வயதுடைய பெண்ணொருவர் அவருடைய சிறிய தந்தையால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட வவுனியா ஆதார வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் ஒருவரின் மருத்துவ அறிக்கை குறித்து புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதுடன், குறிப்பிட்ட வைத்தியரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கடந்த பெப்.05ம் திகதி, குறிப்பிட்ட 16 வயதுடைய இளம்பெண்ணை அவருடைய சிறிய தந்தையார் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினார் என்ற இந்த சம்பவம் குறித்து வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பொலிசாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய குறிப்பிட்ட வைத்திய நிபுணர், அப்பெண்ணின் உடலின் உள்ளேயும், வெளியிலும் காயங்கள் எதுவும் இல்லை என்றும், அவருடைய கன்னிமை கழியவில்லை என்றும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்துள்ள தமது வைத்திய அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

விபரம் புரியாத வயதில் உறவினரால் தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ பாலியல் உறவுக்கு உட்படுத்தப்பட்டால், நியதிச் சட்ட பாலியல் வல்லுறவு (Statutory Rape) என்ற குற்றத்திற்காகக் குறிப்பிட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தினால் நேரடியாக விசாரணை செய்ய வேண்டிய நியதி இருந்த போதிலும், இந்த வைத்திய அறிக்கையையடுத்து, தண்டனை குறைக்கப்பட்டு வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் தான் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பெண் குறிப்பிட்டிருந்த போதிலும், வைத்திய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு சாதாரண குற்றத்தின் கீழ் விசாரணைகள் நடைபெற்றன.

இந்த வழக்கு விசாரணையின் தவணைக்காகக் கடந்த ஒக்.18 அன்று குறிப்பிட்ட பெண் தாயாருடன் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். எனினும், சில தினங்களுக்கு முன்னர் அந்த வைத்திய நிபுணர் கடமையாற்றும் வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார் என்று அவருடைய தாயார் நீதிபதியின் கவனத்திற்கு திங்கட்கிழமைகொண்டு வந்திருந்தார்.

பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார் என்ற சந்தேகத்திற்கு உள்ளாகிய வழக்கில், கன்னிமை கழியவில்லை என்று வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட இளம் பெண்ணுக்குக் குழந்தை பிறந்துள்ளதையடுத்து நீதிமன்றம், குறிப்பிட்ட வைத்திய அறிக்கை குறித்து புலனாய்வு செய்ய நேர்ந்துள்ளது என்று தெரிவித்த நீதவான் இந்த அறிக்கை தொடர்பாகக் குறிப்பிட்ட வைத்திய நிபுணரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்து எதிர் வரும் 20 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிப்பதுடன், குறிப்பிட்ட வைத்தியரையும் நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பிட்ட வைத்தியர் பொலிசாரும் நீதிமன்றமும் அழைக்கும் போது முறையே வவுனியா பொலிஸ் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## பணிப்பாளரை திணறடித்த பா.உ.!

பொதுத்தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. தலைமைக் காரியாலயமான ஸ்ரீதர் தியேட்டரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரைப்பார்த்து யாழ் மாவட்டத்திற்குத் தேவையான மருந்துப்பொருட்கள் ஒழுங்காக எடுத்து வரப்படுகின்றனவா என்றார். அதற்கு யாழ் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் இல்லை. நர்ங்கள் கொடுக்கும் பட்டியலில் இருபத்தைந்து வீதத்தைத் தான் பாதுகாப்புப் படையினார் அனுமதிக்கிறார்கள் என்றார். அப்படியானால், நீங்கள் இதை ஏன் எமது கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. நீங்கள் இதை எமது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால் நாங்கள் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் இதைக் கொண்டு வந்திருப்போம் எனக் கேள்வி மேல் கேள்வி கேட்டு சுமார் பதினைந்து இருபது நிமிடங்கள் சுகாதாரப் பணிப்பாளரை நிற்க வைத்துத் திணறடித்து விட்டார் தவராஜா.

கடந்த நவ. 9 அன்று ஐ.தே.க யாழ் மாவட்ட பா.உ. மகேஸ்வரன் யாழ் மாவட்டத்தில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என பாராளுமன்றத்தில் கூறினார். உடனே தவராஜாஅங்கு மருந்துப் பொருட்களுக்கோ, உணவுப் பொருட்களுக்கோ தட்டுப்பாடு இல்லையென்ற பொருள்பட மகேஸ்வரன் கற்பனையில் மிதக்கிறார் என்றார்.


அப்படியானால் தவராஜாவின் உத்தரவின் பேரில் தேர்தலுக்கு முன்னரே போதியளவு மருந்து எடுத்து வரப்பட்டு விட்டதா அல்லது தேர்தல் முடிந்து பாராளுமன்ற முதல் அமர்விற்கிடையில் கப்பல் கப்பலாக மருந்துகள் எடுத்து வரப்பட்டு யாழ் மாவட்ட மருந்துக் களஞ்சியம் நிரப்பப்பட்டு விட்டதா? தவராஜாவை சிறீலங்கா அரசாங்கத்தின் பிரச்சார அமைச்சர் என்ற பதவியை வழங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பினால் கதிர்காமர் தோற்றுப் போவார்!

# கொள்கையில் கறுப்பு! கோஷத்தில் சிவப்பு!! ஜே.வி.பி.யின் இரட்டை வேடம் அம்பலம்!

~ சிசைரோ

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சிக்காக சிங்கள இளைஞர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் தொடர்ச்சியான வகுப்புகளை அப்போதைய அந்த இயக்கத்தின் தலைவரான ரோகண விஜேவீர நடாத்தி வந்தார். குறிப்பாக இயக்க அங்கத்தினருக்கு என நடாத்தப்பட்ட முக்கிய ஐந்து வகுப்புக்களில் கடைசியானதின் கருப்பொருள் இந்திய ஏகாதிபத்தியத்துக்கான எதிர்ப்பு என்பதாகும். அதாவது மார்க்ஸிய வழியில் புரட்சி செய்பவர்கள் அதன் ஒரு பகுதியாக இந்திய எதிர்ப்பையும் கடைப்பிடித்தாக வேண்டியிருந்தது. ஆனால் இந்திய எதிர்ப்பு என்பதன் உண்மையான அர்த்தம் என்ன என்பது சிவப்புக் கோஷங்களினால் கவரப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களுக்குக் கூடத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அதனுள்ளே ஊடுருவி நின்றது தமிழ் எதிர்ப்பு வாதம் என்பது ஒரு சிலருக்கே அப்போது புரிந்திருந்தது. இந்தப் பின்னணியில் தான் மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் ஜே.வி.பி. இயக்கம் வளர்ந்து வந்து தற்போது பாராளுமன்றத்தில் 10 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

உண்மையில் ஜே.வி.பியின் தோற்றமும் வளர்ச்சியும் இந்நாட்டின் இடதுசாரிகளின் மலட்டுத் தனத்தினாலும் துரோகத்தனத்தினாலுமே ஏற்பட்டது என்பதை ரோகண விஜேவீரவிலிருந்து தற்போதைய அக்கட்சியின் அடிமட்டத் தொண்டர் வரை அறிந்தே வைத்திருக்கின்றனர். ஆகு, புதிய கட்சி புதிதாக ஏதாவது முன்வைக்க வேண்டுமே என்ற தேவைப்பாடும் மட்டுப்பாடாகவே இருந்து வந்துள்ளது. இந்த மட்டுப்பாடுகளுக்குள் அது ஒரு விதமாகச் சுற்றிச் சுழன்று வந்தே காலம் கடத்தியுள்ளது. இரண்டு கிளர்ச்சிகளை அது மேற்கொண்ட போதிலும் இரண்டுமே தோல்வியில் முடிவடைந்தன. இருந்தாலும் சளைக்காது அரசியல் நடாத்தியதன் விளை-



வாக தற்போது பாராளுமன்றத்தில் 10 ஆசனங்களையும் பெற்றுள்ளது.


தன்னை ஒரு மார்க்சிஸ்ட் கட்சியாகவும் அதே நேரத்தில் தேசியவாதக் கட்சியாகவும் காட்டிக் கொள்ளும் முரண்பட்ட கொள்கையை வரித்துக் கொண்டதன் பின்னரே அதனால் தலைதூக்க முடிந்தது என்பதே அரசியல் உண்மையாகும். உண்மையில் இந்த மாறுபட்ட வேடம் கூட அவர்கள் இந்நாட்டின் மரபார்ந்த இடதுசாரிகளிடமிருந்து படித்துக் கொண்டது தான் வேடிக்கையானது. ஆக, குருவை மிஞ்சிய சிஷ்யரின் நிலை தான். ஆனால் குருவினர் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பினால் புதிய கட்சி வேகமாக வளர முடிந்தது. மார்க்ஸியம் பேசிய குருவினர் 1970களில் பேரினவாதக் கட்சிகளின் முந்தானையில் தொங்கிக் கொண்டு சோசலிஸத்தைக் கொண்டுவர விரும்பாமையே இளைஞர்களைத் தனிவழி செல்வதற்கு மேலும் தூண்டிற்று எனலாம்.

கொல்வின் ஆர்.டி.சில்வாவும் பீற்றர் கெனமனும் துரோகத் தனமாகச் செய்ய முனைந்ததை ரோகண விஜேவீர நேர்வழியில் செய்ய முனைந்தார் என்பது மட்டுமே வித்தியாசமாகும். அந்தளவில் இந்தப் புதிய சிவப்புச் சட்டைக்காரர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஆனால் குறுகிய தேசியவாதக் கொள்கையினூடாக இடதுசாரி அரசாங்கம் ஒன்றை ஆட்சியிலமர்த்தும் இவர்களது சித்தாந்தம் புரிதலுக்கு சற்றுக் கடினமானது. ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் பலி கொண்டு வரும் இந்நாட்டின் எரியும் பிரச்சினைக்குத் தமது தீர்வு என்ன என்பது பற்றி எதுவித கருத்துக் கூறலையும் இயன்றவரை தவிர்த்து அல்லது சமாளித்து வரும் இவர்கள் எல்லா இன மக்களதும் ஒன்றுபட்ட எழுச்சியினாலும் கிளர்ச்சியினாலும் சோசலிஸ சமுதாயத்தை அமைப்பதன் மூலம் நாட்டின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று கூறுகின்றனர்.

1948க்குப் பின்னர் என்று எடுத்தாலும் கூட சோசலிஸ சித்தாந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற வழியில் ஓரங்குலம் கூட இலங்கை அரசியற் சமூகம் அடியெடுத்து வைத்திருக்கவில்லை. அதற்கான நம்பிக்கைகள் எப்போதோ பட்டுப் போய்விட்டன. வெறும் சுலோகப் பெறுமதி மட்டும் கொண்டிருக்கும் இந்தச் சித்தாந்தத்தை மட்டும் பற்றிப் பிடித்துக் கொண்டு குறுகியோராகக் கிடக்கும் மக்களுக்கு விடிவைத் தேடமுடியுமா? அதைவிட முக்கிய கேள்வி, சரி, அந்தச் சித்தாந்தத்திலாவது நேர்மையான நம்பிக்கை இவர்களுக்கு இருக்கின்றதா? என்பதே.

### அலங்கார ஊர்திகளாக அரசியல் சித்தாந்தங்கள்

70களின் பின்னர் அரசியலைக் கவர்ச்சிகரமாக மாற்றிவிட்ட ஜே.வி.பி.யினர் சந்தாப் பணத்தின் மூலமும் வேறு நன்கொடைகளின் மூலமும் நிறைந்த கையிருப்பைத் தேடி வைத்துக் கொண்டு புதிய வேகத்துடன் செயற்படத் தொடங்கி இளைய சமுதாயத்தைக் கவர்ந்தனர். மேதினத்திலும் வேறு வைபவங்களிலும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஊர்வலங்களையும் கட்டுக்கோப்பான அணிவகுப்புகளையும் நடாத்தி மக்களிடையே கட்டுப்பாடு, அரசியல் பின்புலம் பற்றிய ஒரு பிரமையை ஏற்படுத்துவதிலும் வெற்றிகண்டு விட்டனர். இதனைப் பயன்படுத்தி அதிகாரத்தை நோக்கி நடைபோடுவதில் மக்கள் விடுதலை முன்னணி விரைவாகச் செல்வதில் பெரிய கட்சிகள் இரண்டும் தமது தப்பிதங்களினால் போதிய அளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக 17 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் அடாவடித்தனங்களும் பிற்பகுதியில் ஏற்பட்ட மோசமான மனித உரிமைகள் மீறல்களும் தென்னிலங்கையில் பலரையும் உணர்ச்சி வசப்படுத்தி ஜே.வி.பியின் பக்கம் தள்ளியதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். கைவிலங்குகளை உடைத்தெறியும் இளைஞர் கரங்கள், புதைகளிலிருந்து மீண்டு வரும் முஷ்டிக் கரங்கள், அதிகாரச் சிலுவையைச் சுமக்கும் அப்பாவி மக்களும் அவர்கள் வீறு கொண்டெழுந்து



தடைகளைத் தகர்ப்பதுமாக ஏராளமான சித்திரங்களையும் ஊர்திகளையும் தயாரித்து நகர்வலம் வரவைத்து காட்சி காட்டியதன் மூலம் ஏதோ பெரிய சித்தாந்தப் பின்னணி உள்ளதாக இளைஞர்கள் நம்பி மீண்டும் மீண்டும் இக்கட்சியின் பக்கம் கவரப்பட்டிருக்கலாம். ஆனால் உள்ளடக்கத்தில் தெளிவான எந்த அரசியல் கொள்கையையும் முன்வைக்காமல் இருக்கின்ற சமூக அமைப்பை சோசலிஸ அமைப்பாக மாற்றப் போவதாக மட்டும் எழுதியும் பேசியும் வந்துள்ளார்கள். ஆனால் இனப்பிரச்சனை என்று வந்தவுடன் அப்புறம் பார்க்கலாம் என்ற மெத்தனப்போக்கே எப்போதும் இவர்களால் முன்வைக்கப்பட்டு வந்தது.

அதாவது சிவப்புச் சட்டை என்பது இலங்கையின் இன்றிருக்கும் பல அரசியல் கட்சிகள் தாங்கள் பெரிய கட்சிகளிலிருந்தும் வேறானவர்கள் என்பதைக் காட்டும் ஒரு சுட்டியாக மட்டுமே பாவிக்கப்பட்டு வருகின்றது. இடதுசாரிக் கொள்கைக்கும் சிவப்புச் சட்டைக்கும் ஏதாவது தொடர் இருப்பதாக இலங்கை அரசியலை வைத்துக் கூறமுடியாது. ஜே.வி.பியைப் பொறுத்த வரையில் அதனது ஆரம்பத்திலிருந்தே கவனித்து வரும் ஒருவருக்கு அது சிகப்புக் கொள்கையினை நெஞ்சார வரித்துக் கொண்ட ஒரு இயக்கமல்ல என்பது நன்கு தெரியவரும். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் இளைஞர்களை தன்வசம் இழுப்பதற்கோ அல்லது இனப்பிரச்சினையைத் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதன்மையானதாக்கவோ அது எவ்வித முயற்சியையும் மேற்கொண்டிருக்கவுமில்லை.

### இன்னொரு அரபிக் குதிரையே

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட போது அதனை வன்மையாக எதிர்த்த ஜே.வி.பி. பலத்த ஆர்ப்பாட்டங்களிலும் வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டதை முழு நாடுமே அறியும். அத்துடன் விட்டுவிடாமல் இந்தியப் பொருட்களின் பகிஸ்கரிப்பு என்றதொரு மிகக் குறுகியதும் சந்தர்ப்பவாதம் மிக்கதுமான போராட்டத்தையும் முன்னெடுத்தது. அதனது எதிர்ப்பு நடவடிக்கைகள் குறிப்பாக மலையகத் தமிழ் மக்களது வாழ்வை அச்சுறுத்தும் வகையினதாக தொடர்ந்தும் இருந்து வருவதை அவதானிக்கலாம். மாகாண சபைகளை எதிர்த்த இக்கட்சி அதற்கு மாற்றீடாக ஏதாவது யோசனைகளை முன்வைத்ததா என்றால் அதுவுமில்லை. இவ்விடயம் தொடர்பான பின்னைய எந்த முயற்சிகளிலும் தனது பங்களிப்பை வழங்க அது முன்வரவுமில்லை.

பத்தாவது பாராளுமன்றம் கலைக்கப்படச் சில நாட்களுக்கு முன்பாக அங்கு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்குத் தனது மூர்த்தண்யமான எதிர்ப்பை அது காட்டவும் தவறவில்லை. பாராளுமன்றத்துக்கு அண்மையிலும் லிப்டன் சுற்று வட்டத்திலும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி தனது எதிர்ப்பினை வாக்கு வங்கியாக மாற்றுவதிலேயே அது தீவிரமாக கவனத்துடன் ஈடுபட்டிருந்தது.

தேர்தலில் அது எதிர்பார்த்தது நடந்தது. பெரிய இரு கட்சிகளின் மீதான மக்களின் வெறுப்பும் கட்சி இளவட்டங்களது சுறுசுறுப்பான செயற்பாடுமாகச் சேர்ந்து கட்சிக்கு பத்து ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இந்த உற்சாகத்தினால் இப்போது அவர்கள் இன்னும் தீவிரமாகவும் வெளிப்படையாகவும் இனவாதத்தை முன்னெடுப்பதில் ஈடுபடச் செய்துள்ளது. ஜே.வி.பியினரது புதிய நாடகம் நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளுக்கு அவர்கள் காட்டும் எதிர்ப்பின் மூலம் அரங்கேற்றப்பட்டுள்ளது. நோர்வே நாட்டுக்கு விஜயஞ் செய்யுமாறு தங்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடப்பட்ட அழைப்பை மறுத்ததன் மூலமாக தம்மைத் தேசப்பற்றாளர்களாகவும் சுகபோகங்களுக்கு விலைபோகாத தியாகிகளாகவும் அடையாளங் காட்டிக் கொண்டு சுத்தமான இனவாதத்தை விதைக்கத் தொடங்கியுள்ளது. பாராளுமன்ற அரசியல் என்று வந்துவிட்டால் வாக்குகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க முடியாது. அதுவும் பெரும்பான்மை- சிறுபான்மைப் பிரச்சினை உள்ளதான ஒரு நாட்டில் - அதுவே அரசியலாகவும் மாறிவிட்டதொரு நாட்டில் எப்படிக் கூடுதலான வாக்குளைக் கவரலாம் என்பதுதான் கட்சிகளின் கவலையாக இருக்க முடியுமே தவிர உண்மையான பிரச்சினைத் தீர்வு பற்றியதாக இருக்க முடியாது.

உள்நாட்டுப் பிரச்சினையில் நோர்வே தலையிடுவதாக இப்போது மக்கள் விடுதலை முன்னணி முறையிடுகின்றது. முன்னர் இந்தியா வந்த போது அது பிராந்திய ஏகாதிபத்தியம் என்று கூறியவர்கள் தற்போது நோர்வேக்கு இதில் தலையிட என்ன யோக்கியதை இருக்கின்றது என்ற சாரப்பட கடிதம் எழுதியுள்ளார்கள். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். புலிகளுடன் பேசக்கூடாது என்கிறார்கள், அவர்களது கவலையெல்லாம் எப்படி ஆட்சிக்கு வருவது என்பது தான். மக்களின் கவலையோ என்றால் எப்படி தப்பிப் பிழைத்து உயிர்வாழ்வது என்றாக உள்ளது.

அரபிக் குதிரை என்றாலும் பிறவிக் குணம் போகாது என்று ஒரு பழமொழி கூறுவார்கள். அது மிக மோசமான சுவை கொண்ட பழமொழி தான் என்றாலும் இலங்கையிலுள்ள கட்சிகளைப் பொறுத்த வரையில் இது கச்சிதமாகப் பொருந்துகின்றது. பாராளுமன்ற அரசியல் என்று வந்து விட்டால் இது தமிழர் விடுதலைக் கூட்டணியாகட்டும் சிஹல உருமயவாகட்டும் அவற்றின் இறுதி இலக்கு பாராளுமன்றக் கதிரைச் சுகம் மட்டுமே என்பதும் அதற்காக அவர்கள் எதுவுமே செய்வர் என்பதும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கு விதிவிலக்கில்லாமல் ஜே.வி.பி.யும் கொள்கையில் கறுப்பான இனவாதத்தையும் கோஸத்தில் சிவப்பான சோசலிஸத்தையும் முன்வைத்து அரசியல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. தற்போதைக்கு இலாபம் பரவாயில்லை என்று கூற வேண்டும்.

# புலிகளுடன் இராணுவத்தினரும் சேர்ந்து விட்டனரா?

பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகம் படுகொலை செய்யப் பட்டு இரண்டு வாரங்களாகியும் கொலை சம்பந்தமாக எந்தத் துப்பும் துலங்காமல் இருப்பது தான் மர்மமாக உள்ளது. ஆனாலும் பல ஊகங்களும், அதன் பொருத்தப்பாடுகளும் சிலரைச் சந்தேகம் கொள்ள வைக்கத் தான் செய்கின்றன. நிமலன் சௌந்தரநாயகம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட மனுத் தாக்கல் செய்ததில் இருந்து படை வட்டாரங்கள் தொடக்கம் படையுடன் சேர்ந்து செயற்படுபவர்கள் வரையிலும் நிமலன் புலி சார்பாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராகவே கருதப்பட்டு வந்தார். இதற்கு ஆதாரமாக தேர்தலுக்கு முன்னதாக மட்டக்களப்பில் அன்பார்ந்த முஸ்லிம் மக்களே! என விழித்து தலைப்பிட்டு, சாதி இனப்பாகுபாடின்றி சமாதனத்திற்காக உழைக்கும் படையினர் என்று முடித்து, எழுதப்பட்டு படையினரால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் "எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்திற்கு ஒத்தாசை புரிபவர்களையும், எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்களையும் பாரளுமன்றத்துக்கு அனுப்ப சூழ்ச்சிகரமாக எல்.ரீ.ரீ.ஈ யினர் முயற்சிக்கின்றார்கள்" என குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில், இரணுவ மட்டத்தில் நிமலன் சௌந்தரநாயகம் துப்பாக்கி ஏந்தாத புலியாகவே கருதப்பட்டு வந்தார். இதனாலேயே நிமலன் துப்பாக்கி சூடுபட்டு சில நிமிட நேரத்தில் மாவடிவேம்பு இராணுவத்தினரால், வீதியில் நின்றவர்களிடமெல்லாம் 'பெரிய கொட்டி செத்துப் போச்சி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாவடிவேம்பு இராணுவத்தினர் இவ்வாறு சொல்லுவதற்கு இன்னமுமொரு காரணமுண்டு பாராளுமன்றத் தேர்லில் வெற்றி பெற்ற கையோடு வந்தாறுமூலை மாவடிவேம்பு மக்களால் இவருக்கு வரவேற்பளிக்கப்பட்டவேளையில் பட்டாசு கொழுத்தப்பட்ட போது மாவடிவேம்பு இராணுவத்தினர் பட்டாசு கொழுத்தியவர்களை தாக்கமுற்பட்டனர். இதை நிமலன் தடுத்து உங்கட ஊரில் ஒரு சட்டம் எங்கட ஊரில் ஒரு சட்டமா என் கேட்டு வாதிட்டு உங்கட வேலையைப் பார்த்துட்டு போங்கள் என்று பொதுமக்கள் மத்தியில் கூறிச் சென்றார். இது தங்களை அவமானப்படுத்துவதாக இருந்ததாலே, நிமலன் அவர்களின் மரணச் சடங்கிற்கு வீதியில் கட்டப்பட்ட வெள்ளைக் கொடிகள் அறுக்கப்பட்டதும் வாழைகள் தூக்கி வீசப்பட்டதும், வீதியால் சென்றவர்கள் தாக்கப்பட்டதும் மட்டுமல்லாமல் 13.11.2000 அன்று நடத்தப்பட்ட துக்க தினத்தைக் கூட அனுஸ்டிக்கத் தடையாக இருந்துள்ளர். எனவே நிமலன் சௌந்தரநாயகத்தின் மேல் எந்தளவு ஆத்திரமும், வெறுப்பும் படை வட்டாரத்தில் இருந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இது இயல்பாகவே எல்லோரிடத்தும் எழும் ஒன்றுதான் இதை வைத்துக்கொண்டு மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முடியாது. இதே வேளை வாழைச்சேனை கிண்ணையடியில் இவருக்கு வரவேற்பளிக்கப்பட்ட அன்று ராசிக்குழுவைச் சேர்ந்த அந்தோனம் கந்தசாமி (சிவா) என்பவர் நிமலனின் ஆதரவாளர் ஒருவரைத் தாக்கியுள்ளார். இத்தாக்குதல் சிவாவுக்கும் நிமலனுக்கும் நீண்ட நாளாக இருந்துவந்த பகைமையாக இருந்தாலும் கூட ,தேர்தல் பிரச்சாரங்களில் எல்லாம் ராசிக்குழுவையும் அதனைச் சார்ந்தவர்களையுமே அம்பலப்படுத்தி சிவா போன்றவர்களின் முகத்திரைகளை கிழித்து அம்பலப்படுத்தியதும் பகைமையை வலுப்படுத்தியது. சிவாவுக்கும் ராசிக்குழவைச் சார்ந்தவர்களுக்கும் இதுமேலும் எரிச்சலை உண்டுபண்ணும் விடயமாகவே இருந்துவந்தது. அதுமட்டுமல்லாது வாழைச்சேனையில் இருக்கும் ஈபி.ஆர்.எல்.எவ் (ராசிக்குழு) அலுவலகத்தை அகற்றுமாறும் குறிப்பிட்டிருந்தார். ஆக, மொத்தத்தில் ராசிக்குழுவுக்கு தொல்லை கொடுப்பவராகவே நிமலன் இருந்து வந்தார். இவரது கொலையில் தேசிய துணைப்படையும் சந்தேகத்திற்குட்படுத்தப்பட்டவர்கள். தேசிய புலனாய்வு சபையினரின் (சி.ஐ.டி) அறிக்கையிலும் ராசிக்குழுவைச் சேர்த இருவரே சம்பவம் நடந்த இடத்தில் தங்களுக்கு முன் நின்றதாக சொல்லப்பட்டுள்ளதாக படையுடன் நெருங்கிய தொடர்புள்ள நண்பர் ஒருவர் கூறினார். ஆகவே இந்த அறிக்கையின்படி துணைப்படைக்கு இராணுவத்தரப்பில் பொறுப்பாக இருக்கும் இராணுவப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கப்டன் சிரானுக்கும், வரதரணி பொறுப்பாக இருப்பவர்களுக்கும் இக்கொலைபற்றி தெரியபமல் இருப்பதற்கு சாத்தியமில்லை. (சிலவேளை தெரியாமல் கூட இருக்கலாம், ஆச்சரியப்படுவதற்கில்லை) எனினும், நிமலன் சௌந்தரநாயகம் சந்திவெளி கிரிமுட்டிபாம் இராணுவமுகாமை கடந்தவுடன் சுடப்பட்ட ஒற்றைத் துப்பாக்கி வேட்டும், (கிரிமுட்டிபாம் இராணுவமுகாமுக்கும் சம்பவம் நடந்த இடத்துக்கும் இடைப்பட்ட தூரம் துப்பாக்கி சத்தம் துல்லியமாக கேட்ககூடியது, ஒற்றைவெடி இவர் வருவதை உறுதிப்படுத்தும் வெடியாக ஏன் இருக்கக் கூடாது) சம்பவம் நடந்த இடத்தில் இராணுவத்தினர் நின்றிருந்தும், சுட்டவர்கள் சுட்டுவிட்டு ஓடுவதை கண்டும் ஏன் அவர்களை துரத்திச் சுட்டுப்பிடிக்க இராணுவம் முயற்சிக்கவில்லை என்பதும் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. சாதாரணமாக பட்டாசு சத்தம் கேட்டதல் கூட சராமாரியாக குண்டுமழை பொழியும் இராணும் ஏன், தங்களுக்குமுன் ஒருகொலையை செய்துவிட்டு தப்பியோடிப்போக பார்த்துக் கொண்டிருந்தது. அப்படியானால் நிமலன் கொலைசெய்யப்படுவதில் இராணுவமும் ஆர்வம் காட்டியுள்ளது என்றும் கொள்ளலாம்? கடந்த திங்கள் அன்று மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் துக்கதினம் அனுஸ்டிக்க பொதுமக்களால் கோரப்பட்டிருந்த போதும், துக்கதினத்தை புலிகள் மறுப்பதாக புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது. இது கணணியில் ரைப்செற்றிங் செய்யப்பட்டு புலிகளின் சின்னத்தை வைத்து போட்டோப்பிரதி செய்யப்பட்ட துண்டுப்பிரசுரமாகும். எடுத்ததுதான் எடுத்தது எழுத்துப்பிழையில்லாமல் எடுத்திருக்கலாம், தமிழீழத்துக்கு துமிழீழம் என அடித்து மாட்டிவிட்டனர். இத்துண்டுப்பிரசுரம் இராணுவத்தினருடன் தொடர்புடையவர்களாலே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இக்கொலையை புலிகள்தான் செய்தார்கள் என்றும் ஒரு கதை உலாவிவருகின்ற வேளையில் இக்கதையை நியாயப்படுத்தி புலிகளின் பக்கம் கொலையைத் திருப்புவதற்காக இந்த ஹர்த்தாலை புலிகள் எதிர்க்கிறார்கள் என்ற மாயையை கொண்டுவர புலிகளின் பேரில் துண்டுப்பிரசுரம் படையினராலும் படையை சார்ந்தவர்களாலும் வெளியிடப்பட்டது. அவ்வாறு படைத்தரப்பு சொல்வது போன்று புலிகள்தான் இக்கொலையை செய்தது என்று சொன்னால், புலிகளுக்கு நிமலன் சௌந்தரநாயகத்தை கொல்ல வேண்டிய தேவை ஏன் இப்போது ஏற்பட்டது?, அவ்வாறு கொல்வதாயின் தேர்தலில் நிற்கமுன் புலிகளைச் சந்தித்தபோது தேர்தலில் நிற்கவேண்டாமென்று தடுத்திருக்கலாம் அல்லது பிடித்தடைத்திருக்கலாம் , 90 களின் பிற்பகுதியில் இராணுவத்துடன் தொடர்பிருந்தவேளை சுட்டிருக்கலாம், ஏன் அப்போதெல்லாம் சுடாதவர்கள் இப்போசுடவேண்டும், என்ற கேள்விகளும் இக்கொலைக்கு புலிச்சாயம் பூச முனைந்தவர்களுக்கு எதிராக எழுப்பப் பட்டுள்ளது. தவிரவும் புலிகள் ஹர்த்தாலை எதிர்த்தால் ஏன் இராணுவம் துக்கதினம் கொண்டாடியதைக் குழப்பியது? ஒரு வேளை இராணுவம் புலியில் சேர்ந்துவிட்டதோ?

சித்தாண்டியில் தேர்தல் பிரச்சாரத்தின் போது என்னைச் சுடுபவன் இந்தமண்ணிலுள்ள ஒரு தமிழன்தான் அப்போது எந்நெஞ்சைக் கொடுப்பேன் என்று நிமலன் சௌந்தர நாயகம் கூறியது போன்று இந்த மண்ணின் மைந்தர்களே அவரின் உயிருக்கு காலனாய் இருந்துவிட்டனர்.

-வி.ஜே.கே.

---

## யாழ் விமானச்சேவை:

# மக்களுக்கா? படையினருக்கா?

## எழுகின்றது சந்தேகம்!

யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் விமானசேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக விமானப்படை திடீரென அறிவித்துள்ளளது. இந்தச் சேவைக்காக மூன்று 'அன்ரனோவ்' ரக விமானங்கள் அவசரமாக கொள்வனவு செய்யப்பட்ட உள்ளதாகவும் தகவல்.

இந்த விமானங்கள் வந்து சேர்வதற்கு முன்பாகவே தற்போது படையினரின் பாவனையில் உள்ள அன்ரனோக்களைப் பயன்படுத்தி இன்னும் ஓரிரு தினங்களில் சேவை ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்று விமானப்படை தரப்புத் தகவல் தெரிவிக்கின்றன.

விமானப்படையின் கீழ் இயங்கும் ஒரு விமான சேவை நிறுவனம் 'ஹெலிரூர்ஸ்' (Heli Tours) இந்த நிறுவனமே யாழ்ப்பாணத்துக்கான விமான சேவையை முன்னர் நடத்தியது. இனியும் நடத்தப்போகிறது.

இவ்வருடம் மார்ச் மாதம் படையினரைச் ஏற்றிச்சென்ற அன்ரனோவ் ரக விமானம் ஒன்று அனுராதபுரம் மாவட்டத்தில் தலாவ என்னும் இடத்தில் பறந்து கொண்டிருந்த சமயம் வெடித்துச் சிதறிய சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. சுமார் ஏழு மாத காலத்தின் பின்னர் இப்போதுதான் அந்த சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

பயணிகள் விமானசேவை ஆரம்பிக்கப்படுகிறது என்ற செய்தி போக்குவரத்தில் சிரமங்களையும், தாமதங்களையும் சதா சந்தித்து வரும் யாழ் மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கலாம். ஆனால், இதன் பின்னணியில் பயங்கரங்கள் உண்டு.

போர் தீவிரமடைந்து படையினரின் வான்போக்குவரத்து அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கும் நிலைமையில் இந்தப் பயணிகள் சேவையை விமானப்படை திடீரென ஆரம்பித்திருப்பது ஏன்?

புலிகளின் ஷெல் மழையால் எந்தக் கணமும் தாக்கப்படும் ஆபத்தின் கீழ் பலாலி விமானத்தளம் உள்ளது. இந்நிலையில் பயணிகள் சேவை ஒன்றை அந்த விமான நிலையத்தின் பாதுகாப்பு நிலைமையை நம்பி எவ்வாறு நடத்த முடியும்?

இந்தக் கேள்விகள் சந்தேகங்களை எழுப்புகின்றன.

மாவீரர் வார காலத்துடன் வடக்கில் போர் தீவிரமடையும் என்று படைத்தரப்பு எதிர்ப்பார்க்கிறது. யாழ் போர் முனைகளில் இப்போதே படைக்குவிப்பு ஆரம்பமாகியுள்ளது.

தெற்கில் இருந்து மேலதிக படையினரையும் அவர்களுக்கான பொருள்களையும் அவசர அவசரமாகத் தருவிக்க வேண்டிய நிலை. எனவே விமானப் படையின் சேவை மேலும் தேவையாக உள்ளது. கடல் வழியாகத் துருப்புக்களை ஏற்றி இறக்குவது சிரமமான மற்றும் ஆபத்தான பணியாகவே இருந்து வருகிறது.

காயப்படும் பெரும் எண்ணிக்கையான படையினர் உடனடி சிகிச்சைக்காக களத்தில் இருந்து வெியேற்றப்படமுடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமையில் தான் பயணிகள் விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுகிறது.

படையினரையும் அவர்களுக்கான பொருள்களையும் அவசர அவசரமாகத் தருவிக்க வேண்டிய நிலை. எனவே விமானப் படையின் சேவை மேலும் தேவையாக உள்ளது. கடல் வழியாகத் துருப்புக்களை ஏற்றி இறக்குவது சிரமமான மற்றும் ஆபத்தான பணியாகவே இருந்து வருகிறது.

காயப்படும் பெரும் எண்ணிக்கையான படையினர் உடனடி சிகிச்சைக்காக களத்தில் இருந்து வெியேற்றப்படமுடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலைமையில் தான் பயணிகள் விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுகிறது.

பயணிகளுக்காக எனத் தொடங்கப்படும் இந்த சேவையில் பயணிகள் மாத்திரமே ஏற்றிச் செல்லப்படப் போவதில்லை. படையினரின் தேவைக்காகவுமே விமானங்கள் வாங்கப்படுகின்றன.

புலிகள் புதிய புதிய விமான எதிர்ப்பு ஆயுதங்களை வாங்கி இருப்பதாக பாதுகாப்பு நிபுணர்களும், போர்க்கள ஆய்வாளரும் தெரிவிக்கின்றனர்.

விமானப்படை தனது ஒவ்வொரு பறப்பு நடவடிக்கைகளையும் மிகக் கவனமாக முன்னெச்சரிக்கையுடன் மேற்கொண்டு வரும் சமயத்தில் முழுக்க முழுக்க விமானப்படையால் நடத்தப்படும் பயணிகள் சேவை விமானங்கள் மட்டும் எப்படிப் பாதுகாப்பாகப் பறந்து தரையிறங்க முடியும் என்ற கேள்வி எழவே செய்கிறது.

'லயன் எயார்' அனர்த்தம் உட்பட கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள் வேதனையான அனுபவங்களாக உள்ளன. ஆயினும், எப்படியாவது இடம்பிடித்துப் பயணம் செய்துவிட வேண்டிய தேவையும் கட்டாயமும் ஏற்படும்போது பயங்கரங்களை மறந்து விடுவது சாதாரண மக்களின் இயல்பாகவே இருக்கிறது.

98ல் 'லயன் எயார்' விமானம் காணாமற் போய்விட்ட செய்தி குடாநாட்டில் பரவி பீதியையும், சோகத்தையும் கிளம்பி விட்டிருந்தது எனினும், பின்னர் விமான சேவை ஆரம்பித்ததும் பயணிகள் யாழ் நகரில் முண்டியடித்துக் கொண்டு நின்றதை எவரும் மறந்திருக்க முடியாது.

பருவமழை மற்றும் கடற்கொந்தளிப்பை காரணம் காட்டி யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவைகளை கடந்த வாரம் முதல் இடைநிறுத்தியிருக்கிறது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு.

கப்பல் பயண மார்க்கம் தடைப்பட்டிருக்கும் வேளை இந்தப்பயணிகள் விமானசேவை ஆரம்பிக்கப்படுவதால் அதில் பயணம் செய்ய பொதுமக்கள் முண்டியடிப்பர்.

குடாநாடு மீதான புலிகளின் படையெடுப்பு ஒரு முக்கிய கட்டத்தை அடைந்திருக்கும் இந்த வேளையில் வடக்கு வான் பரப்பில் பயணிகள் விமான சேவையை புலிகள் அனுமதிப்பார்களா என்பது சந்தேகமே. விமான சேவை ஆரம்பித்த பின்னரே இது தொடர்பான புலிகளின் நிலைப்பாடு தெரியவரும். 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையை ஆரம்பித்த சமயம் படையினரின் விமானங்களில் பயணம் செய்யாதீர்கள்' என்று புலிகள் மக்களை எச்சரித்திருந்தனர். பின்னர் அதனை விலக்கிக் கொள்வதாக அவர்கள் அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆக விமான சேவை யாருக்கு மக்களுக்கா படையினருக்கா?

- பரமர்

# முறைகேடான தேர்தலும் முடியாத விவாதங்களும்

~ கபில

ஏகப்பட்ட தில்லுமுல்லுகளுடன் பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்து அரசாங்கமும் அமைத்தாகி விட்டது. பொதுத் தேர்தலில் தமது வீர சாகசங்களை நிகழ்த்திக் களைத்த அரசியல் கட்சிகள் இளைப்பாறிய பின் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தம் சாகசங்களைத் தொடர்வதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஜனநாயக ஆர்வலர்களும் பொதுத் தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக கடும் விசனமடைந்துள்ளனர். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் பிரெட்ரிக் ஈபேர்ட் மன்றமும் இணைந்து பொதுத் தேர்தல் முறைகேடுகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நவ.14 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தன. புத்திஜீவிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்துகொண்ட இக்கருத்தரங்கிற்கு சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆயினும் அமைச்சர்கள் கலந்துகொள்ளவில்லையென தெரிவிக்கப்பட்டது.



கலாநிதி பி.சரவணமுத்து செல்வி சாகரிக்கா தெல்கொட ஆகியோர் ஏற்பாட்டாளர்கள் சார்பில் அறிமுகவுரையை நிகழ்த்தினர். சமகால அரசியல் கலாசாரம் தொடர்பாக விசனமும் அதிருப்தியும் அவ்வுரைகளில் தொனித்தன.

தொடர்ந்து தேர்தல் வன்செயல்களை கண்காணிப்பதற்கான நிலையம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பவற்றைச் சார்ந்த கலாநிதி அர்ஜுன பராக்கிரம அவர்களின் உரை இடம்பெற்றது. நடைபெற்ற தேர்தல் தொடர்பான தேர்தல் கண்காணிப்புக்கான நிலையத்தின் (C.M.E.V) அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிபரங்களை அவர் சமர்ப்பித்ததுடன் கொழும்பு, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டதாக தெரிவித்தார். அத்துடன் இவை தொடர்பான தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகளில் தனது அதிருப்தியையும் வெளியிட்டார். மேலும் அவர்தன் உரையில் வடக்குக் கிழக்கு பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தாங்கள் இரு மாதங்களுக்கு முன்னதாகவே தேர்தல் ஆணையாளரிடம் இது தொடர்பாக இரு தடவைகள் கலந்துரையாடியதாகவும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இறுதியில் பொதுமக்களை இது தொடர்பாக அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி எதிர்வரும் தேர்தல்களில் இவற்றைச் செய்யவேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தினார்.

தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த ரொசான் எதிரிசிங்கவின் உரை இடம்பெற்றது. அவர் தனது உரையில் தேர்தல் நடந்த முறைமையை குறிப்பிட்டதில் தேர்தல் ஆணையாளர் தனக்கு சில அதிகாரங்களை வழங்குமாறு ஜனாதிபதி செயலகத்தை கேட்டிருந்ததாகவும் செயலகம் இதுவரை எவ்வித பதிலையும் தரவில்லை எனவும் சுட்டிக் காட்டினார்.

இவ்விருவரது உரைகளையும் தொடர்ந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உரை இடம்பெற்றது. முதலில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சம்பந்தன் உரையாற்றினார். சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு அமைத்தல் தொடர்பான தனது கூட்டணி ஆதரவைத் தெரிவித்தது என்று குறிப்பிட்ட அதேவேளை இப்பிரச்சினை வெறுமனே ஆணைக்குழுவினால் மட்டுமே தீர்க்க முடியுமா? என்ற கேள்வியையும் எழுப்பினார். சுதந்திரம் கிடைக்கப்பெற்று கடந்த 50 வருடங்களாக நாட்டின் ஒருபகுதி மக்களுக்கு ஜனநாயகம் முற்றுமுழுதாக அர்த்தம் இழந்துபோயுள்ள நிலையில் அதற்கொரு சரியான தீர்வு இல்லாமல் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் பலனளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் உரையாற்றிய பா.உ கரு ஜயசூரிய இத்தேர்தல் ஒரு நீதியான, நேர்மையான தேர்தல் என தனது கட்சி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனவும் தேர்தல் காலங்களில் அரச ஊடகங்கள் மிகமோசமாக சட்டத்தை மீறி நடந்ததாகவும் குற்றஞ்சாட்டினார். சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைத்தல், தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துதல், தேர்தல் சட்டங்களை திருத்தியமைத்தல் என்பவை தொடர்பான தனது கட்சியின் ஆதரவான நிலைப்பாட்டை வெளியிட்டார்.



பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ம.வி.மு. சார்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்ததுடன் தேர்தல் காலத்தில் அரசு தன் முழு வளங்களையும் துஷ்பிரயோகம் செய்வதாகவும் குறிப்பிட்டார். தேர்தல்கள் காபந்து அரசாங்கம் ஒன்றின் கீழேயே நடாத்தப்பட வேண்டும் எனவும் தேர்தலுக்குரிய காலங்கள் தெளிவாக சட்டரீதியாக எடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். சுயாதீன ஆணைக்குழு அமைப்பது தொடர்பான தமது ஆதரவையும் தெரிவித்தார்.

தொடர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சூரியாராச்சி தன் உரையில் இத்தேர்தல் மிகுந்த முன்னேற்றகரமான தேர்தல் என குறிப்பிட்டார். தேர்தல் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்ட அவர் அரசியல் கட்சிகள் தம்மையும் தொண்டர்களையும் சரியாக கண்காணிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். NGO க்களால் வலிந்து அழைக்கப்பட்ட வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இத்தேர்தல் நியாயமானதென குறிப்பிட்டிருந்தமையை அவர் சுட்டிக்காட்டினார். தேர்தல் காலங்களில் பொ.ஐ.மு.க்கு எதிரான எல்.ரி.ரி.யின் தாக்குதல்களை அவர் சுட்டிக்காட்டினார். ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பான தனது ஆதரவையும் அவர் தெரிவித்திருந்தார்.

இறுதியாக உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் தேர்தல் முறையும் சட்டங்களையும் மட்டுமே குற்றஞ்சாட்டுவதை விடுத்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டதுடன் காபந்து அமைச்சரவை பங்களாதேஷில் தோல்வி கண்டதாகவும் சுட்டிக்காட்டினார். ஆணைக் குழுக்கள் அமைப்பது தொடர்பான தனது கருத்தையும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கருத்துத்தெரிவித்த தேர்தல் ஆணையாளரின் ஆலோசகர் தேர்தல் ஆணையாளர் எதிர்நோக்கும் பல சிக்கல்களை சுட்டிக்காட்டியதுடன் வெளிநாட்டு அவதானிகள் வெறுமனே விடுமுறையை கழிக்கும் நோக்கிலேயே வருவதாகவும் அவர்கள் இத் தேர்தல்களை வேறு சில நாட்டில் உள்ள தேர்தல்களுடன் ஒப்பிட்டு திருப்தி காணுவதாகவும் தெரிவித்தனர்.

கலாநிதி அர்ஜுன பராக்கிரம கருத்துத் தெரிவிக்கையில் இத்துடன் நிறுத்திவிடாமல் இத்தேர்தலை செல்லுபடியற்றதாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அனைத்து கேள்விகளுக்கும் உற்சாகமாக பதிலளித்த அரசியல் கட்சி பிரபலங்கள் பிரட்மன் வீரக்கோன் வாக்களிப்பின் போது அடையாள அட்டையை சமர்ப்பிப்பது தொடர்பாக முன்வைத்த கேள்வியை காதில் வாங்கிக் கொண்டதாக காட்டாமல் அமைதி காத்தனர்.

அனைத்து கட்சிப் பிரமுகர்களும் ஆணைக்குழு அமைத்தல், தெரிவுக்குழு அமைத்தல், காபந்து அரசாங்கம் போன்ற அனைத்து ஆலோசனைகளுக்கும் ஆதரவாக உள்ள போது உண்மையில் தேர்தல் முறைகேடுகளுக்கு என்ன தான் காரணம்? யார் தான் காரணம்? பிரட்மன் வீரக்கோனின் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டமை தான் இக்கேள்விக்குரிய பதிலாகும்.

## தீர்வை...

இவைகளுக்கான காரணம் சிங்கள மேலாதிக்கத் திமிரும், தமிழர்கள் "இளிச்சவாயர்கள்' என்ற நினைப்பும் தான். தமிழர்களுக்கு வெறுப்பேற்றுவதையே அரசியல் என்று நினைத்துச் செயல்பட்டதன் பலனை நாடு இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், சிங்கள அரசியல் வாதிகளும் மகா சங்கத்தினரும் "நாட்டுக்குத்" தானே இழப்பு நமக்கல்ல என்ற தோரணையில் இந்தக் கணம்வரை தங்கள் இனவாதத் திமிரையோ மேலாதிக்கக் கொழுப்பையோ கைவிட முடியாமல் தவிக்கிறார்கள். ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகள் பொறுப்பின்மை காரணமாக தீர்வு எதுவும் வந்துவிடக் கூடாது என்பதற்கான விஷவிதைகளை விதைக்க பொதுஜன முன்னணி, ஐக்கியத் தேசியக் கட்சி போன்றவை பொறுப்புடன் தங்கள் மேல் பிழைவராமல் எப்படி நோர்வேயின் முயற்சியைப் பிசுபிசுக்க வைக்கலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

யுத்தத்தின் மூலமே அரசியல் நடாத்திப் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு தீர்வு ஒன்றும் கிட்டி யுத்தம் இல்லாமற் போனால் அமைதியான நாட்டில் எதைவைத்து அரசியல் பண்ணலாம் என்ற கவலை இருக்கத்தான் செய்யும். இந்தக் கவலைகளின் பிரதிபலிப்பால் தான் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன முன்னணி என்பவற்றுக்குள்ளும், நோர்வேயின் முயற்சியை ஏற்றுக்கொள்ளாத ஒரு கூட்டத்தின் அதிருப்தி வெளியே தெரியுமளவுக்குக் காணப்படுகிறது.

ஆனாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நோர்வேயின் முயற்சியை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஏற்றுக்கொள்ளலின் போதும் விடுதலைப் புலிகள் மீதான அவநம்பிக்கையையும் காழ்ப்புணர்வையும் இருவருமே கோடிட்டுக் காட்டியுமுள்ளனர்.

விடுதலைப்புலிகள் அரசு கணக்குப் போடுவதைக் காட்டிலும், பலமான இயக்கம் என்பதைப் பல தடவைகளில் நிரூபித்திருக்கிறார்கள். இராணுவ ரீதியில் இலங்கை இராணுவத்துக்கு இலகுவாகவே "தண்ணி"காட்ட வல்ல படையணியாக எழுச்சி பெற்றிருக்கிறார்கள். அரசியல் ரீதியிலும் தாங்கள் செயல்பட முடியும் என்பதையும் காட்டியுள்ளார்கள். இன்று உலகெங்கும் பரந்து வியாபித்துள்ள இவர்களது செயலகங்களே இவர்களது இராஜதந்திரத்துக்கு போதுமான சாட்சியாகும். சந்திரிகாவின் கண்டுபிடிப்பான லக்ஷ்மன் கதிர்காமர் சென்ற இடமெல்லாம் சிறுமைப்பட்டுப்போய் நிற்பது விடுதலைப் புலிகளின் அரசியல் சாணக்கியத்தில் ஓர் அங்கமே. தமிழ் மக்கள் அரசால் உதாசீனம் செய்யப்பட்டதன் விளைவே விடுதலைப் புலிகளின் தோற்றம். விடுதலைப் புலிகளின் ஆரம்பச் செற்பாடுகளின் போதாவது விழித்துக் கொள்ள வேண்டும். இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அரசு காட்டிய அலட்சியப் கரும்புலிகளையும், கடற்புலிகளையும் தோற்றுவித்தது. இன்று விடுதலைப் புலிகளிடம் வான்படையணி ஒன்று தான் பூரண வளர்ச்சி பெறவில்லை. அதுவும் விரைவில் பூரண அணியாக விரிவு பெறக் கூடும்.

இந்த நிலையில் அரசு விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தையும், நோர்வே நாட்டில் சமாதான உதவியையும் சரியாகப் பயன்படுத்தி சட்டங்கள், சம்பிரதாயங்கள், கற்பனைக் கோட்டைகள் என்பவற்றுள் முகம் புதைத்துக் கிடக்காமல் உதட்டால் மாத்திரமல்ல உள்ளத்தையும் திறந்து பேசி இலங்கை மண்ணையும் மக்களையும் துன்பத்திலிருந்து மீள்விக்க முன்வரவேண்டும்.

"பட பஸ்"ஸையும் தவற விட்டால் பரிதாபப்பட்டு நிற்கப் போவது இலங்கை அரசு தான்!

விவேகி

# தேவை: ஒரு கிழக்குத் தலைமை!

வை.எம்.எம்.சித்தீக்

அமைச்சர் அஷ்ஃரப் அவர்கள் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி இன்று பல மாதங்கள் கழிந்து விட்டன. அவரது சாதனைகளும், போராட்ட நினைவுகளும் மனதை விட்டு என்றும் மறையப் போவதில்லை.

அவரது ஆரம்ப கால அரசியல் போராட்டம் சில முக்கிய பிரச்சினைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டது. அதில் மிக முதன்மையானது "கொழும்புத்" தலைமைத்துவத்திற்கு எதிரான போராட்டம் எனலாம்.

அவர் தனது ஆரம்பகால மேடைப் பேச்சுக்கள், எழுத்துக்கள் எல்லாவற்றிலும் கொழும்புத் தலைமைத்துவத்திற்கெதிரான கருத்துக்களை முன்வைத்து வந்தமையும், கிழக்கு மாகாணத்தில் இருந்து இலங்கை முஸ்லீம்களின் தலைமைத்துவம் உருவாக வேண்டும் என்று வாதாடி வந்தமையும் இதனை உறுதிப்படுத்தப் போதுமானதாகும். இதனை அவர் சாதித்தும் காட்டினார்.

அவர் தனது பேச்சுக்கள், வாதங்களில் எல்லாம் கொழும்புத் தலைமைத்துவத்திற்கெதிரான தனது போராட்டத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான காரணங்களை முன்வைத்தார்.
அதில் முக்கியமானது ஆரம்ப காலங்களில் தம்மை இலங்கை முஸ்லிம்களின் தலைவர்கள் என்றும், தாம் இலங்கை முஸ்லிம்கள், அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் கூறிக் கொண்டவர்கள் எவரும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் பிறக்காதவர்களாக இருந்ததுடன், அம்மக்களின் அபிலாஷைகள், தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாதவர்களாவும் காணப்பட்டனர் என்பதும், அவர்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் வாக்குகளைச் சூறையாடுவதற்காக கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் என்பதுமாகும்.
அப்பாவி முஸ்லிம்களை ஏமாற்றியோ அல்லது பலவந்தமாகவோ அவர்களின் வாக்குகளைப் பறிக்க முயன்றவர்கள் இவர்கள். மக்களுடைய தேவையினையோ அல்லது நாட்டு நிலைமையினையோ கருத்திற் கொள்ளாது தமது சுய நலன்களிலேயே இவர்கள் கவனம் செலுத்தினர்.
இது 1977ம் ஆண்டில் கலாநிதி பதியுதீன், மஹ்மூத்திற்கும், அதற்கு முற்பட்ட ஆரம்ப காலத்தில் சேர் மாக்கான் மக்கார், சேர் ராசீக் பரீத் ஆகியோருக்கும் பொருந்தும்.
சில முஸ்லிம் கொழும்புத் (தெற்கு உட்பட) தலைவர்கள் சிங்கள மக்களையும், பிரதிநிதித்துவப்படுத்தி வந்தனர். அவர்கள் முஸ்லிம்களின் நலன்களை விட பெரும்பான்மைச் சமூகத்தினரதும், நலன்களையும், தமது சொந்த நலன்களையும் முதன்மைப்படுத்தி வந்தனர்.
1970 களின் பிற்பட்ட காலப்பகுதிகளில் கொழும்புத் தலைமைத்துவத்திற்கெதிரான கருத்துணர்வில் கிழக்கு முஸ்லிம்கள் மிகவும் உறுதியாக இருந்தனர் எனலாம்.
இதன் பிரதிபலிப்பாக 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் கலாநிதி பதியுதீன் அவர்கள் மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டமையினைக் கொள்ளலாம்.

கொழும்புத் தலைமைத்துவத்திற்கெதிரான அமைச்சர் அஷ்ஃரப் அவர்களின் போராட்டத்திற்கு வலுவூட்டிய காரணங்களில் ஒன்று தான் அத்தலைவர்கள் எல்லோரும் எப்பொழுதும் பெரும்பான்மைக் கட்சிகளின் தயவில் தங்கியிருந்தமையாகும்.
இதனால் அவர்களால் முஸ்லிம்களின் தனித்துவமான பிரச்சினைகட்கு பாராளுமன்றத்தினுள்ளோ, அல்லது பாராளுமன்றத்திற்கு வெளியேயோ குரல் கொடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது. இதற்கு உதாரணமாக கலாநிதி பதியுதீன் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் புத்தளம் பள்ளிவாயினுள் வைத்து ஒன்பது முஸ்லிம்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அதற்கெதிராக அவரால் குரல் கொடுக்க முடியாமையினைக் கூறலாம்.


1982ம் ஆண்டின் காலிக் கலவரத்தின் போது முஸ்லிம்கள் தமது உயிர், உடமை என்பனவற்றை இழந்த போது முஸ்லிம்களின் தலைவர்கள் என்ற மகுடத்தைச் சூட்டிக் கொண்டு பாராளுமன்றத்தில் (பேரின சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய) பல முஸ்லிம் "தலைவர்கள்" இருந்த போதிலும் அவற்றிற்கெதிராக முஸ்லிம் தலைவர்களின் குரல்கள் ஒலிக்காமையும் குறிப்பிடலாம். காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கம் தான் இவற்றிற்கெதிராக பாராளுமன்றத்தில் பேசினார். அவரின் வேண்டுகோளிற்கிணங்கத்தான் புத்தளம் சம்பவத்தை விசாரிக்க விசாரணைக்கமிஷன் அமைக்கப்பட்டது.

இதற்கு வழிவகுத்தது அமிர்தலிங்கம் அவர்கள் எந்தப் பேரினக்கட்சியினதும் தயவில் அல்லாமல், தனது சொந்தக் கட்சியில் போட்டியிட்டு, தனது சொந்தமக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் சென்றமை தான் என்று கூறலாம்.

முன்னாள் முஸ்லிம் தலைவர்களால் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும், பிரச்சினைகளையும் முன்வைக்க முடியாமைக்கும், அவர்களது இயலாமைக்கும் இலங்கை - இந்திய உடன்படிக்கையில் 1987ம் ஆண்டு முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டமையினை இன்னொரு உதாரணமாகக் கொள்ளலாம். அப்போது பாராளுமன்றத்தில் பதினேழு (17) முஸ்லிம் பிரதிநிதிகள் இருந்தனர்.



இவர்களுள் ஐவர் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.
அப்போது "டசின் கணக்கில் வாய்மூடி மௌனிகளாகப் பாராளுமன்றத்தில் இருப்பதைவிட முஸ்லிம்கட்காகக் குரல் கொடுக்கக் கூடிய ஒரு முஸ்லிம் பிரதிநிதியாவது பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும்.
பாராளுமன்றத்தின் நான்கு திசைகளிலும் முஸ்லிம்களின் உரிமைக்குரல் ஒலிக்க



வேண்டும் என்ற கருத்தை மிகக் கடுமையாக அஷ்ஃரப் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தி வந்தார்.

1987ம் ஆண்டைய மேற்படி ஒப்பந்தம் கிழக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம்களின் தலைமை உருவாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியது மட்டுமல்லாது. பேரினக்கட்சிகளில் தொடர்ந்து தங்கியிருப்பதன் ஆபத்தையும் வெளிப்படுத்தியது. இதன் பெறுபேறுதான் 1989ம் ஆண்டைய பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிசுக்கு வாக்களிக்கக் காரணமாக இருந்தது எனலாம்.

முஸ்லிம் தலைவர்களின் அல்லது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் இயலாமையை நன்கு புரிந்து கொண்ட பேரினக்கட்சித் தலைமைத்துவம் முஸ்லிம்களின் உரிமைகளைப் புறக்கணித்து வந்தது மட்டுமல்லாது அம்முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றைக் காண்பதை ஒத்திப்போடுவதற்கும் பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் தமிழ் - முஸ்லிம் இனங்கள் இரண்டையும் பிரிப்பதற்கும் பயன்படுத்தி வந்தமையை இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான ஒரு நியாயமான தீர்வில் உண்மையான அக்கறையில்லாத பேரின அரசாங்கங்கள் இது வரை நடைபெற்ற இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தப் பேச்சுவார்த்தையின் முடிவிலும் "முஸ்லிம்கள் விரும்புகின்றார்கள் இல்லை" என்று கூறி வந்தமையை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறு கூறி முஸ்லிம்களை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த அரசாங்கத்திற்கு தைரியத்தைக் கொடுத்தமை முஸ்லிம் பிரதிநிதிகளின் "மௌன விரதமும்" பேரினக் கட்சிகளின் தயவில் அவர்கள் தங்கியிருந்தமையுமாகும். எனவே முஸ்லிம் பிரதிநிதிகளைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒத்திப்போடுவது ஆளும் அரசுக்கு மிகச் சௌகரியமாக அமைந்தது. அரசின் இந்த தந்திரோபாயம், முஸ்லிம்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றிற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள் என்ற அபிப்பிராயத்தை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பியது. எனவே ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள். இது தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்திற்கு வழிவகுத்து, ஒரு கட்டத்தில் நிரந்தர எதிரிகளாக இவ்விரு சமூகமும் மாறின. அவை பொது எதிரியினை மறந்தன.

இப்பிரித்தாளும் தந்திரோபாயத்தில் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்களை அன்றை அரசு மிகப் பிரயோசனமான முறையில் பயன்படுத்தியது.
அவர் ஒரு ராஜதந்திரி என்பதற்காக மட்டும் ஆயுதம் தாங்கியவர்கட்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் அவரைப் பயன்படுத்தவில்லை. அதே முக்கியத்துவம் உடைய காரணியாகத் தான் அவர் ஒரு முஸ்லிம் அமைச்சராக இருந்தமை. அது அவருக்குக் கொடுத்த கௌரவம் அல்ல. அது உண்மையில் முஸ்லிம்கட்கெதிரான ஒரு சூழ்ச்சியேயாகும்.

இந்த வகையில் ஆட்சியமைப்பதற்கும், வேறு சில தமது குறிக்கோள்களை நிறைவு செய்வதற்கும் பேரினக்கட்சிகள் முஸ்லிம் தலைவர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்தி வந்தனர். காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ஃரப் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதானால், அவர்கள் "கறிவேப்பிலையாகத்தான் படுத்தப்பட்டார்களேயொழிய முஸ்லிம் சமூகம், பெரிதாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பயன் எதையும் அடையவில்லை.

மறைந்த அஷ்ஃரப் அவர்களின் கொழும்புத் தலைமைத்துவத்திற்கெதிரான போராட்டம் பின்னர் முஸ்லிம்களின் தனித்துவத்திற்கான போராட்டமாக வளர்ச்சியடைந்து முஸ்லிம் கட்சிகான தனிக்கட்சியொன்றின் மூலம் முஸ்லிம்களின் தலைமைத்துவத்தை கிழக்கு மாகாணத்திற்கு மாற்றியமைக்கு இவை சில பின்னணிக் காரணிகளாகும்.

1994ம் ஆண்டு, எந்தப் பேரினவாதக்கட்சி ஆட்சியமைக்க வேண்டும் என்பதைத் தான் தீர்மானித்ததன் மூலமும், முஸ்லிம் இனத்தின் பேரம் பேசும் ஆற்றலை உச்சப்படுத்தியதன் மூலமும் முஸ்லிம்களின் தனித்துவத்தை அவர் நிலைநாட்டினார்.

தொடர்ச்சி 19

> பிரித்தாளும் தந்திரோபாயத்தில் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்களை அன்றை அரசு மிகப் பிரயோசனமான முறையில் பயன்படுத்தியது. அவர் ஒரு ராஜதந்திரி என்பதற்காக மட்டும் ஆயுதம் தாங்கியவர்கட்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் அவரைப் பயன்படுத்தவில்லை. அதே முக்கியத்துவம் உடைய காரணியாகத் தான் அவர் ஒரு முஸ்லிம் அமைச்சராக இருந்தமை. அது அவருக்குக் கொடுத்த கௌரவம் அல்ல. அது உண்மையில் முஸ்லிம்கட்கெதிரான ஒரு சூழ்ச்சியேயாகும்.

# நீங்கள் கள்ளத்தோணியா என்று எங்களிடம் கேட்டார்கள்

## ஒரு தமிழீழப் போராளியின் கதை -6

எமக்கு இருட்டுக்குள் கரை எதுவுமே தெரியவில்லை. ஓட்டியை நம்பி எமது உடுதுணிகளுடன் கடலில் குதித்தோம். குதித்த பிறகு தான் தெரிந்தது ஆழம் எங்களின் உயரங்களை விட இரண்டு அடியாவது கூட இருக்கும் என்று. எதுவுமே செய்ய முடியாத நிலையில் கைகளையும் கால்களையும் அடித்துத் தள்ளி உயரம் குறைந்தவர்களையும் இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தோம். பலரும் கடல் தண்ணீர் குடித்து களைப்பாய் இருந்தனர். அனேகமாக எல்லோரும் சொன்ன வார்த்தை ரெயினிங் எடுத்தவுடன் முதல் வேலை இந்த ஓட்டிமார்களைப் போட வேண்டும் என்பது தான். எனினும் இயக்கம் என்னும் பெயரில் எல்லா-வற்றையும் மறந்து ஒருவரை ஒருவர் உற்சாகமாக அறிமுகப்படுத்திக் கொண்டோம்.

எமக்குள் அடுத்த பிரச்சினையாக இருந்த விடயம்: இங்கிருந்து எங்கு செல்வது? எங்கு எமது இயக்க முகாம்? யாரைக் கேட்பது? இடம் மாறி வேறு இயக்கத்தினுடன் போய்ச் சேர்ந்து விட்டால் என்ன செய்வது? இவற்றிற்கு ஒருவரிடமும் பதில் இல்லை. லைற் வெளிச்சத்தை நோக்கின பக்கமாக கடற்கரையினூடாக நடப்பது, யாராவது சந்தித்தால் அவர்களிடம் கேட்பது என முடிவு செய்து விட்டு கரையோரமாக நடந்தோம். கடற்கரையோரமாக மலம் கழிக்க வந்த இருவரை நடுவில் சந்தித்து நிலைமைகளை விளக்கினோம். அவர்களில் ஒருவர் எம்மைக் கேட்டார்: உங்களிடம் பாஸ்போட் இருக்கா? மற்றவர் கேட்டார்: அப்படியானால் நீங்கள் கள்ளத்தோணிகளா? இவ்விரு கேள்விகளும் ஈழத் தமிழர்களுக்கெனக் கேட்கப்பட்டது போல இருந்தன. பதில் கூற முடியாத நிலையில் சமாளித்து விட்டு அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டோம். இரண்டரை மணித்தியாலத்தின் பின் இராமேஸ்-வரத்திற்கு வந்து சேர்ந்தோம். வந்து சேர்ந்தாலும் கூட எம்மைக் கூட்டிச் செல்வதற்கு எவருமே இல்லை. ஒரு மணித்தியாலம் இராமேஸ்வரத் தெருக்களில் ஊர்வலமாகச் சென்றபோது இருவர் வந்து எம்மைக் கூட்டிச் சென்று தங்குவதற்கு வசதி செய்தனர். எம்மில் பலரும் நாட்டில் இயக்கங்களுக்கு வேலை செய்ததினாலும் மற்றைய இயக்கங்களின் கபடத்தனங்களை அறிந்தமையாலும் கூட்டிச் சென்ற இருவரிடமும் நீங்கள் ரெலோ தான் என்பதற்கு என்ன அத்தாட்சி? நீங்கள் உங்களை அடையாளம் காட்டாவிட்டால் நாம் உங்களுடன் சேரமுடியாது எனக் கூறினோம். தம்மிடம் அடையாள அட்டை எதுவுமில்லை. விரும்பினால் திரும்பிப் போகலாம். நம்பினால் எங்களுடன் வரலாம் என்றனர். வேறு வழியின்றி அவர்களுடன் போனோம்.

**சில வாரங்களின் பின்பு அரசியல் வகுப்புக்கென வந்திருந்தவர்களை வீடுகளுக்கு இடம் மாற்றினர். நானும் இன்னும் இருபது பேரும் ஒரு வீட்டிற்குச் சென்றோம். எமக்கெனச் சமைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டன. இதன் மூலம் பலரும் சமையற் கலையைக் கற்க ஆரம்பித்தனர். எமது இருப்பிட வசதி பூர்த்தி செய்யப்பட்டது. புத்தகங்கள் தந்தார்கள். விரும்பினவர்கள் படிக்க ஆரம்பித்தனர்.**

### *சென்னையில் ஒரு கொட்டிலில் இயக்க வாழ்வின் ஆரம்பம்!*

ஒரு நாள் இடைவெளியின் பின் சென்னையை நோக்கிய எமது பயணம் தொடர்ந்தது. மறுநாள் மாலை சென்னையில் உள்ள ஒரு கொட்டிலுக்கு வந்து சேர்ந்தோம். நான் பழையவற்றை எல்லாம் மறந்து விட்டு ஒரு புதிய வாழ்க்கைக்கு என்னைத் தயாற்ப் படுத்தினேன். எல்லோர் மனதிலும் ஒரு உற்சாகம், புதிய உத்வேகம், உணர்ச்சி ததும்பிய நாள் என்று சொன்னால் அது அன்று தான். அன்றைய தினம் ஏப்பிரல் முதலாம் திகதி 1984. உலகத்தைப் பொறுத்தவரையில் முட்டாள் தினம். என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் அர்த்தம் உள்ள நாளாகவே அதைக் கருதினேன். புதிதாக வந்த எம்மை அறிமுகப் படுத்தும் நேரமும் வைபமும் பெயர் சூட்டும் வைபமும் நடந்தது. இவ்வாறான பெயர்களில் சில அதிர்ச்சி தரக் கூடியன. உதாரணமாக, காளி, வெள்ளை, றீகன், காள் மாக்ஸ், ஸ்டாலின், லெனின், போன்ற பெயர்கள். அடுத்ததாக, அங்குள்ள விதிமுறைகள் சொல்லப்பட்டன. இங்கிருந்து யாரும் தப்பிப் போக முடியாது எனவும் தப்ப முயற்சித்தவர்கள் சிலரைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினர். அவர்களில் பலரும் கை, கால்கள், முறிக்கப்பட்டவர்களாக தடிகளின் உதவியினால் நடந்து வந்தனர். இவர்களைப் பார்த்தவுடன் எவ்வளவு கஷ்டப்பட்டு இயக்கம் இங்கு கூட்டிக் கொண்டு வந்து பயிற்சி கொடுக்க இவர்கள் தப்பி ஓடுவது என்பது பிழையான காரியமாகப்பட்டது. அதாவது தப்பி ஓட முயற்சி செய்தவர்களை கை கால் முறித்து வைப்பது சரியாகப்பட்டது. ஆரம்பத்தில் எனக்கு இது சரியாகப்பட்டாலும் சில நாட்களின் பின் பல கேள்விகளை அது எனக்குள் எழுப்பியது.




என்னைப் பொறுத்தவரையில் புதுநாடு, புது ஊர், புது வாழ்க்கை. முதன் முதலில் ஊரைவிட்டு தனியாக வந்திருக்கிறேன். புது நண்பர்கள். எல்லாமே குழப்பமாக இருந்தன. எனது ஊரைச் சேர்ந்த எவரையும் காணவில்லை. அவர்கள் வேறு இடத்தில் இருந்தனர். என்னுடன் கல்லூரியில் படித்தவர்களையும் காணவில்லை. ஆச்சரியமாக இருந்தது. இந்த நேரத்தில் கொட்டிலில் உள்ள நடைமுறைகள் எதுவுமே நாம் நாட்டில் பிரச்சாரம் செய்த ஸ்தாபனத்திற்கும் இங்குள்ள நடைமுறைகளுக்கும் நேர் எதிராகவே இருந்தன. ஆனால் எவரையுமே எனக்குத் தெரியாததால் கதைக்க முடியவில்லை. இதை விட உளவு பார்ப்பவர்கள் எனச் சிலர் இருப்பதாக எமக்கு அறிவிக்கப்பட்டதால் எவருடனும் கதைக்கும்போது இந்நடைமுறை-களைப் பற்றி விமர்சிப்பதைத் தவிர்த்தேன். நாட்கள் சில நகர்ந்தன. எவருமே உற்சாகமின்றிக் காணப்பட்டனர். எந்தவிதமான பயிற்சிகள், அரசியல் வகுப்புக்கள் எதுவுமேயற்று சாப்பிடுவதும் படுப்பதுமாக எமது வாழ்க்கை இருந்தது. இந்நிலையில் பலரும் விரக்தி அடைந்த நிலையிலிருந்தனர். எமது தேவைகளைக் கூட கவனிக்க முடியாத நிலையில் தான் ஸ்தாபனம் இருந்தது. தலைவரோ அல்லது அவரது சகாக்களோ கூட வருவதில்லை. நான் இவ்வாறு இயக்கத்தைப் பற்றிச் சொன்னாலும் போராளிகளான நாம் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தோம் என்பது யாவரும் அறிய வேண்டிய விடயமாகும். இத்தகைய வாழ்வு ஆண் போராளிகளுக்கு மட்டும் தான். காலையில் எழுந்து தேநீர் அருந்தி விட்டு எமது இருப்பை வரிசையாக நின்று சொல்லிவிட்டுச் செல்வது. பின்னர் காலை உணவு. இது பொதுவாக சுண்டல் கடலை அல்லது பாண். விரும்பினால் சாப்பிடலாம். அல்லது விடலாம். மத்தியானம் சோறு, முட்டை, எருமை இறைச்சிக் கறி. இரண்டு அல்லது மூன்று துண்டுகள். தெரிந்தவர்களுக்கு ஆறு அல்லது ஏழு துண்டுகள் விழும். பின்னேரம் தேநீர். இரவு எமது இருப்பைப் பதிவு செய்தபின் பாண், வாழைப்பழம்.

### *தட்டிக்கழித்த தலைமைப்பீடம்!*

எமது இருப்பிடத்தைப் பற்றி சொல்வதானால் மூன்று கொட்டில்கள் இருந்தன. இதில் ஒன்றில் சமைப்பதும் சாப்பிடுவதும். மற்றதில் சுகமற்றவர்கள் படுப்பது. மூன்றாவதில் விரும்பினவர்கள் படுப்பது. இதற்குள் தான் எமது உடுதுணி போன்றவற்றை வைப்பது. எந்தவிதமான பாதுகாப்புமற்ற பிரதேசம். எவரும் வரலாம். போகலாம். சுமார் நூறு பேர் அளவிற்கென அமைக்கப்பட்ட இக்கொட்டில்களில் சுமார் 450 பேர் தங்குவதென்பது முடியாத காரியம். இதைவிட ஒரு சிறு வீடு போன்ற கொட்டில் ஒன்றும் இருந்தது. இதில் இதற்குப் பொறுப்பானவர்கள் தங்குவது வழக்கம். பிரச்சினைப்படுபவர்களை உள்ளே கூட்டிச் சென்று சித்திரவதை செய்வதும் அதற்குள் தான். ஏனெனில் இந்தச் சிறிய கொட்டில் தான் சுற்றிவர அடைக்கப்பட்டிருந்தது. மற்றவை திறந்த வெளியில் நாலு தடிகள் வைத்து ஓலையால் பின்னப்பட்டவை. எனவே, நாம் தங்குவது அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில் இருக்கும் மரங்களின் கீழும், கைவிடப்பட்ட வீடுகள், கட்டிட வேலைகள் நடைபெறும் வீடுகளுள்ளும் ஆகும். எங்கு நிழல் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் தங்குவது. மலசல கூட வசதிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மரங்கள் என்றிருந்தாலும் எவருமே பாவிக்காத இடமாக தேடிப்பிடிப்பது என்பது கஷ்டமான காரியமாகும். மலசல கூடம் என்ற பெயரில் ஒரு அறை இருந்தாலும் எப்போதுமே கியூ வரிசை இருந்தால் எவருமே அதைப் பாவிப்பதில்லை. அந்தப் பிரதேசம் முழுவதுமே எமது கைவரிசை தான். பொதுவாக சுகாதார வசதிகள் துப்புரவாக இல்லாத தன்மையால் உணவு, குடிநீர் ஆகிய விடயங்களில் கவனம் இல்லாததால் எப்போதுமே ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் வயிற்றுக் கோளாறினால் பீடிக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். இரவு படுக்கையை எடுத்துக் கொண்டால் இரண்டு பேருக்கு ஒரு கம்பளிப் போர்வை என்ற அடிப்படையில் இருக்கும். தலைக்கு செருப்பை அல்லது உடுப்பை வைத்து விட்டு போர்வையை நிலத்தில் போட்டு விட்டு படுக்க வேண்டியது தான். படுக்கும் நிலத்தை விரும்பியவாறு எடுத்துக் கொள்ளலாம். புல்தரை அல்லது வெறும்தரை, கால்வாய்கள் பக்கமாகக் கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் நுளம்புகளின் தொல்லையும் மலசலங்களின் துர்நாற்றமும் தொடர்ந்த வண்ணம் இருக்கும். ஆரம்பத்தில் நித்திரை கொள்வது கஷ்டமாயிருந்தாலும் பின்னர் பழகி விட்டோம். தப்பித்தவறி மழை வந்து விட்டால் எல்லாக் கழிவுகளும் கரைந்து ஓடும். அதற்குள்தான் நாம் நிற்க வேண்டும்.

இத்தகைய அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையிலும் நாம் மனம் தளராமல் இதை ஒரு பிரச்சினையாகக் கருதாமல் விடுதலையை நோக்கமாகக் கொண்டிருந்தோம். இந்த உணர்வினைத் தலைமைப் பீடமும் பாவித்து இத்தகைய அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்வதைத் தட்டிக் கழித்தது.

### *அரசியல் வகுப்புக்கள் ஆரம்பம்*

சில வாரங்களின் பின்பு அரசியல் வகுப்புக்கென வந்திருந்தவர்களை வீடுகளுக்கு இடம் மாற்றினர். நானும் இன்னும் இருபது பேரும் ஒரு வீட்டிற்குச் சென்றோம். எமக்கெனச் சமைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டன. இதன் மூலம் பலரும் சமையற் கலையைக் கற்க ஆரம்பித்தனர். எமது இருப்பிட வசதி பூர்த்தி செய்யப்பட்டது. புத்தகங்கள் தந்தார்கள். விரும்பினவர்கள் படிக்க ஆரம்பித்தனர். வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. எம்மைப் போல குறிப்பிட்ட சிலரைத் தவிர மற்றவர்களின் வாழ்க்கை கொட்டில்களில் தான் கழிய வேண்டி இருந்தது. இப்போது தான் நான் ஒரு சிலருடன் நெருக்கமாகப் பழக ஆரம்பித்தேன். எமக்கு ஒழுங்கு செய்யப்பட்ட அரசியல் வகுப்புக்கள் பல இடைஞ்சல்கள் மத்தியில் ஆரம்பமாயின. முன்பு குறிப்பிட்டபடி உள்ள ஒரு கொட்டிலில் தான் வகுப்புக்கள் ஆரம்பமாயின. எமது வகுப்புக்கள் நடைபெறும்போது இராணுவப் பிரிவினர் விலக்கி வைக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். அரசியலுக்கு அவர்கள் சம்பந்தப்படாதவர்களாகவும் எமக்கு இராணுவப் பயிற்சி சம்பந்தமில்லாததாகவும் கையாளப்பட்டது. வகுப்பு நடைபெறத் தொடங்கும் போதே இரண்டும் இரண்டு பிரிவினருக்கும் தேவை என்ற கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டது. எனினும் எதையும் நடத்த முடியாத ஆளுமையற்ற தலைமையும் வந்தவர்களை சும்மா வைத்திருக்க முடியாது என்ற நிலையில் போன்றவர்களின் நிலையும் இருந்தது. வந்தவர்களை என்ன செய்வது என்ற நடைமுறை வேலைகள் எதுவும் தலைமையைச் சார்ந்தவர்களிடம் இருக்க-வில்லை. எமக்கு அரசியல் வகுப்பினை ஆரம்பித்து நடத்தியவர்களில் முதன்மை-யானவர் தோழர் வி.பி என்றழைக்கப்பட்ட வி.பொன்னம்பலம் ஆவர். அதன் பின்னர் அங்குள்ள தமிழ் நாட்டினரான மாக்சிச லெனினிசக் கட்சியைச் சேர்ந்த ஒரு தோழர் வகுப்புக்களை எடுத்தார். ஆனால் ஆரம்பித்து இரு வாரத்தினுள் சுதன் ரமேஷ் பிரச்சினைகள் வரவே (இது பற்றிப் பின்னர் விரிவாக எழுதுவேன்) அரசியல் வகுப்புக்கள் தடைப்பட்டன.

*தொடரும்*

தேனுவர்மன்

# காட்டிக் கொடுத்தது இ.தொ.கா! ஒத்து ஊதியது வீரகேசரி!!

~நேசன்

மலையகத்தின் மையப்பகுதியில் அமைந்திருந்த பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலையை கண்டிக்கும் தார்மீக உரிமை மலையக மக்களுக்கு இருக்கிறது. உலகம் பூராவும் கண்டனங்களால் துளைக்கப்பட்ட சிங்கள அரசினால் மலையகம் ஆர்த்தெழுந்து எதிர்ப்பதை மட்டும் ஜீரணிக்க முடியவில்லை.

மலையகம் எங்கும் நடந்த இப்பேரெழுச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டிருந்தார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கண்டனப் பதாகைகள், சுவரொட்டிகள், கறுப்பு வெள்ளைக் கொடிகள், ஆத்திரத்தால் மேலெழுந்த அரச எதிர்ப்பு சுலோகங்கள் ஒரு பெருங்கடல் சூழ்ந்தெழுவது போல் மலையகம் பொங்கி எழும் என எவருமே எண்ணிப்பார்க்க முடியாதவாறு இவ்வெழுச்சி இருந்தது. ஆனால், சிங்கள மக்களை ஆத்திரமூட்டவோ சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவோ, கொலைசெய்யவோ, தூண்டப்படாததோர் அமைதிபூர்வமான எழுச்சியாக இருந்த நிலையை மாற்றியமைத்தவர்கள் சந்திரிகா அரசினால் ஏவப்பட்ட கூலிப்படையினரும், மக்கள் துரோக தொழிற்சங்க தலைமைகளால் ஏவப்பட்ட ரவுடிக் கும்பல்களுமேயாவர்.

வன்முறைகளை அடக்குவது என்ற பெயரில் வீதியில் இறங்கிய இராணுவமும், பொலிசாரும் தலவாக்கலை, கினிகத்தேனை, பகுதியில் இடம்பெற்ற சிங்கள காடையர்கள் அட்டகாசத்தை அடக்க எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வன்முறைகள் குறித்து ஐ.பி.சி. வானொலிக்கு தகவல் தந்த மாசிலாமணி என்பவர் தலவாக்கலை நகரம் இராணுவ பொலிஸ் கூட்டு பாதுகாப்போடு புத்தபிக்கு ஒருவரின் தலைமையில் வழிநடத்தப்பட்டதை தாம் நேரடியாகக் கண்டதாகக் தெரிவித்துள்ளார். 30.10.2000 இரவு தான் கைதுசெய்யப்படுவதற்கு இரண்டு மணித்தியாலயங்களுக்கு முன்பு பி.பி.சி சந்தேசிய மற்றும், தமிழோசைக்கு பேட்டியளித்த பெ.சந்திரசேகரனும், இதே கருத்தை உறுதி செய்திருந்தார்.

ஆனால், அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் வீதிகளில் மலையக இளைஞர்கள் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் 13 இளைஞர்கள் காவு கொடுக்கப்பட்டு 60க்கும் மேற்பட்ட தமிழ் கடைகள் சூறையாடப்பட்டு இரண்டு தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் நாவலப்பிட்டி, கினிகத்தேனை, தலவாக்கலை, வட்டவளை எனத் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டும், வீதிகள் தோறும் சிங்களக் காடையர் வெறியாட்டம் நடத்திக் கொண்டுமிருந்த நிலையில் மலையகத்தின் காலஞ்சென்ற தலைவர் தொண்டமானின் பேரனும், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானும், செங்கொடிச்சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜே.ஏ. ராமையாவும், விவசாய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமியும், வீரகேசரிப்பத்திரிகையும், தமது துரோக நிலைப்பாட்டை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டார்கள்.

பண்டாரவளை படுகொலை குறித்து நாங்கள் அரசுடன் பேசிவிட்டோம். இந்நிலையில் சுயநலவாத அரசியல்வாதிகளும், காடையர்களும் சேர்ந்து தேவையற்ற பிரச்சினையைத் தூண்டிவிட்டுள்ளார்கள். பண்டாரவளை படுகொலைக்கும் எமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. நடந்த சம்பவங்களுக்கும் எமக்கும் தொடர்பில்லை என பகிரங்கமாக அறிவித்ததன் மூலம் ஆறுமுகம் தொண்டமானும், இராமையாவும், கிருஷ்ணசாமியும் தாம் ஒரு பயங்கரமான காட்டிக் கொடுப்பை செய்தார்கள்.

ஊவா மாகாணத்தின் கல்வி அமைச்சர் சச்சிதானந்தனோ ஒரு படி மேலே போய், இப்போராட்டங்களில் அகப்பட்டுக் கொண்ட



எந்த ஒரு நபருக்கும்- இ.தொ.காவினர் உட்பட- தாம் எவ்வுதவியும் செய்யமாட்டோம் என பகிரங்கமாக அறிவித்தார்.

தலவாக்கலையில் வன்முறைகளைத் தூண்டியது முதல் சந்திரசேகரனை கைது செய்யவும், நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் கைது செய்யப்படவும், காரணமான மக்கள் துரோகிகள் யார் என்பதை மக்கள் அறிந்து கொண்டுள்ளார்கள். எனவே தான் ஆறுமுகம் தொண்டமானின் அழைப்பை ஏற்று வேலைக்கு திரும்பவும், கடையடைப்பு வீதித்தடைகளை அகற்றவும், மறுத்த தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஐந்து நாட்களின் பின்னர் மலையக மக்கள் முன்னணி விடுத்த அழைப்பின் பெயரில் வேலைக்குத் திரும்பினார்கள்.

**பேதமின்றி அச்சமின்றி எழுந்த பெருந்திரள் காட்டிக் கொடுப்பினால் களைப்படைந்து போகாது, ஒன்றுபட்டு போராடிய தொழிலாளரை, இளைஞர்களை காட்டிக் கொடுத்த ஆறுமுகம் தொண்டமான் தன் கட்சிக்காரர்களுக்கே உதவ முடியாது ஓடியதோடு மலையகம் பற்றி எரியும் போதும், இளைஞர்கள் வகைதொகையின்றிக் கைதாகும் போதும் மௌனித்து நின்று தாத்தா வழியில் சம்மதம் தெரிவித்து பேரினவாத அரச இயந்திரத்தின் பேயாட்டத்துக்கு துணை போயிருக்கிறார்.**

சந்திரசேகரன் கைதின் பின்னணியில் பகிரங்கமான அரசியல் உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அவர் இந்த அபகீர்த்திமிக்க அரசை 5 வருடம் ஆதரித்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தையும், அவசரகாலச் சட்டத்தையும் ஆதரித்தார். திடீரென அரசை விட்டு வெளியேறி ஐ.தே.கவில் கூட்டுச் சேர்ந்தார். நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் இ.தொ.காவுக்கு சவாலான அரசியல் சக்தியாக வெளிக் கிளம்பினார். இ.தொ.காவின் கேலிக்கூத்தான வேலை நிறுத்தத்தை அம்பலப்படுத்தினார். பண்டாரவளை படுகொலையை அம்பலப்படுத்தியதோடு, இராணுவ வைத்தியசாலையில் படுகாயமுற்ற இளைஞர்கள் கூட கட்டிப்போடப்பட்டு வதைக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுத்தார். மலையகம், தழுவிய எதிர்ப்பியக்கத்திற்கு அறைகூவல் விடுத்தார். இதன்மூலம் அரசுக்கு மட்டுமட்டுமன்றி ஆறுமுகம் தொண்டமானுக்கும் சவாலாக உருவெடுத்தார். விளைவு சந்திரிகா சமேத ஆறுமுகம் தொண்டமானின் கூட்டரசின் கறைபடிந்த சிறையில் சந்திரசேகரன் அடைக்கப்பட்டார்.

எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்த ஆறுமுகம் தொண்டமான் கொட்டகலை இளைஞர் சந்தனம் நடராஜன் மரண வீட்டில் நீலிக்கண்ணீர் வடித்ததோடு தனது பரோபகாரத்தை காட்டிக் கொண்டார். மறுநொடியே எழுச்சியை எதிரியிடம் மொத்தமாக காட்டிக்கொடுத்துவிட்டு தலவாக்கலை, கினிகத்தேனை நகரம் எரிந்து கொண்டிருந்த போது கொழும்புக்கு ஓடியதோடு மட்டுமல்லாமல் தாத்தாவின் முத்திரையை வெளியிட்டுவிட்டு இந்தியாவுக்கே ஓடிபோனார் என்பது பரம இரகசியமல்ல.

### வீரகேசரியின் காட்டிக்கொடுப்பு

மலையகம் மீதான அடக்குமுறையும், காடைத்தனமும் அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் ஓலமிடும் பாணியிலும், மக்களது போராட்ட எதிர்ப்புணர்வை முறியடிக்கத் துணை போவதுமான அறிக்கைகளை வெளியிட்டதோடு முன்பக்கம் வெளியிட்ட ஆசிரியர் தலையங்கத்தில் தலவாக்கலை வன்செயலை சந்திரசேகரன் தடுக்கவில்லை. வீட்டுக்கு ஓடிப்போய்விட்டார் என்றெழுதியதன் மூலம் அவரை நிரந்தரமாக சிறை வைக்கும் சதிக்கு உடந்தையானது வீரகேசரி. மலையகம் மீதான ஒடுக்குமுறைகளையும் அவமதிப்பையும், உலகின் கண் மறைத்து வருவதோடு பத்திரிகையின் பக்கங்களை கொச்சையான அரசியல் நலன்களுக்கும் தனிநபர் தாக்குதலுக்கும் பயன்படுத்திவரும் தேசிய பத்திரிகைகளின் வாய்ச்சவடாலும், புலம்பலும் மலையகம் மீதான ஒடுக்குமுறைகளை உடைத்தெறியப் போவதில்லை என்பதோடு மலையக மக்களின் எழுச்சிபூர்வமான நடவடிக்கைகளுக்கு வழிகாட்டப்போவதில்லை என்பதும் இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

உலகின் எப்பாகத்திலும் நடக்கும் ஒரு போராட்டத்தின் பின்னாலும் ஆக்கிரமிப்பு சக்திகளின் அழித்தொழிப்பும், தாக்குதலும் கைதுகளும், சேறுபூசல்களும் நடந்தே தீரும். இச்சூழ்நிலையை எதிர்கொள்வதற்கும் அதற்கெதிராக மக்களை அணிதிரட்டுவதற்கும் தேவையான தலைமையை வழங்கத்தவறிய பிற்போக்கு சக்திகளை அவர்களின் ஆளும் வர்க்கக் கூட்டாளிகளை அம்பலப்படுத்தாமல் அவர்களுக்கு துணை போன வீரகேசரியின் செயல் மரத்தால் வீழ்ந்தவனை "மாடேறி மிதித்ததைப்போல்" இருக்கிறது.

### பேரெழுச்சிக்குப் பின்னான காட்டிக்கொடுப்புகளும், கைதுகளும்

படுகொலைக்கெதிரான பேரெழுச்சிகள் ஒக். 29 அன்று மலையகத்தில் எதிரொலித்தன. அதற்கெதிரான அரச பயங்கரவாதம், கட்டவிழ்த்து விடப்பட்டது. தலவாக்கலை, லிந்துலை, வட்டகொடை, கொட்டகலை எங்கும் கூலிப்படையினர் அட்டகாசம் புரிந்தனர். மறுநாள் காலை 30ம் திகதி மலையகமெங்கும் திட்டமிட்ட வகையில் அரச கூலிப்படையினர் மக்களை சீண்டும் வகையில், அச்சமூட்டும் நடவடிக்கையிலும் இறங்கினர்.

அட்டன், டிக்கோயா தோட்டத்தில் புகுந்த இராணுவம் சகல தொழிலாளர்களையும் இளைஞர்களையும் ஆண் பெண் வேறுபாடின்றித் தாக்கியது. 25 இளைஞர்கள் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர். மஸ்கெலியா, லக்கம் தோட்டத்தில் புகுந்த இராணுவம் பொதுமக்களைத் தாக்கியது. சாமிமலை மஸ்கெலியாவில் இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியது. புளியாவத்தை, நோர்வூட், தென்பதுளை, டியின்சின் எங்கும் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதோடு துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டது. ராகலை, சென்லியாஸ் தோட்டத்தின் அனைத்து மக்களும் இராணுவத்தால் இம்சிக்கப்பட்டனர். தலவாக்கலை, லிந்துலை, பத்தனை, கொட்டகலை, வட்டகொடை, அக்கரபத்தனை பகுதியெங்கும் துப்பாக்கிச்சூடும், தாக்குதல்களும், தாராளமாக நடத்தப்பட்டன.

இதன்விளைவாக தலவாக்கலை, கொட்டகலை, வட்டகொடை, ஹைபோரஸ்ட் பகுதிகளில் 13 பொதுமக்கள் அரச கூலிப்படையினரால் கொல்லப்பட்டனர்.

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனின் தொடங்கி அக்கட்சியின் பிரதேச இணைப்பாளர்கள் ஆதரவாளர்கள் என்று நூற்றுக்கும் மேற்பட்டோர் கைதாகினர்.

மஸ்கெலியா சாமிமலையில் கைதுசெய்யப்பட்ட ஜேக்கப் என்பவர் 3 கி.மீ. தூரம் அடித்து முழங்காலில் நடத்திச் செல்லப்பட்டார்.

பொகவந்தலாவை டியன்சின் தோட்ட இளைஞர் மகேந்திரன் கைதுசெய்யப்பட்டுள்ளார். பல தோட்டங்களில் இளைஞர்களைப் பொலிசில் ஒப்படைக்குமாறு பொலிசாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பந்தி எழுதப்படுகிறபோது ம.ம.முன்னணி தலைவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். ஆனால், அம்முன்னணியின் செயலாளர் மு.சிவலிங்கம், தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு கண்டி விளக்கமறியலில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தில் எழுந்த ஒரு ஜனநாயக எதிர்ப்பியக்கத்தை நசுக்கப்போய் அரசும், அதன் ஆயுதப்படைகளும், அவர்களின் மலையகக் கூட்டாளிகளும் தாங்குகின்ற பெரும்பூதத்தை தட்டிஎழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

⇨19

## கூட்டணி தோற்றுப் போனதற்குக் காரணம்

# திருமலை மக்களா? அரசியல்வாதிகளா?

~ முத்துகுமார் அருணாசலம்

தேர்தல் முடிந்த பின்பே அதன் பெறுபேறுகளை வைத்து மக்களின் எண்ணங்களையும், எதிர்பார்ப்புகளையும் கொள்கைகளையும் முடிவெடுப்பது இந்நாட்டின் ஓர் அரசியல் சம்பிரதாய-மாகிவிட்டது. அதிலும் ஓரளவு உண்மை இருக்கின்றதென்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால், அதற்காக தமிழர் பிரதிநிதித்-துவம் கிடைக்காமற் போனமைக்கு தமிழ் வாக்காளர்கள், தமிழ் கட்சிகளுக்கு செய்த துரோகத்தனம் என கற்பிதம் கொண்டுவிட முடியாது.

தமிழ்க் கட்சிகளுக்கிடையே கொண்ட பகையுணர்வும், ஒரே கட்சி வேட்பாளர்-களிடையே இருந்த 'குத்து வெட்டுக்-களும்', 'கரிபூசுதலும்' தான் மக்களை திசைதிருப்ப ஏதுவானதெனலாம். 'நீங்கள் முதலில் ஒற்றுமையாய் வாருங்கள்! பின்பு நாங்கள் வருகிறோம்' என தமிழ் வாக்காளர்கள், வேட்பாளர்களிடம் கேட்டுக் கொண்டது இன்றுவரை காதில் நிற்கிறது.

யார் குத்தினாலும் எனக்கு அரிசி-யாகிட வேண்டும்' என தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவத்தை மிதப்பாக எண்ணிச் செயற்பட செயலாளர் நாயகம் சம்பந்தன் அவர்களுக்கு இந்த 'முகமாற்று' செய்த வேட்பாளர்களை ஓரணியில் திரட்ட எண்ணம் வரவில்லை. வேட்பாளர் பட்டியலில் உள்ள ஏழு பேர்களை சந்தியிலிட்டு நாடகம் ஆடியது தான் மிச்சம். அத்தோடு தம்மை முன்னணி நட்சத்திரங்களாக மாயை காட்டிக் கொண்டிருந்த பத்திரிகை தொடர்பாளர்கள் சிலர் தமக்குத் தமக்கென மும்மூன்று வேட்-பாளர்களாக கையில் பிடித்துக் கொண்டு பிரசாரித்துத் திரிந்ததை மக்கள் இலகுவில் மறந்து விடமாட்டார்கள். (83 - 89 வரை தமிழ் பிரதிநிதித்துவமின்றி இருந்ததை நினைவிற் கொள்க.)

'கூட்டணியினரின் உட்பகையால் தான் பிரதிநிதித்துவம் பறிபோனது' என்ற யதார்த்-தத்தை முதலில் அனைவரும் ஏற்றுக் கொண்-டாக வேண்டும். இதை பகுத்தறிய முடியாத 'விவேகி' கடந்த 207வது சரிநிகரில் திரு-கோணமலை மக்களைப் பற்றி அவதூறாக எழுதியிருப்பது (இனவாதிகளிடம் பறிபோன' என்ற கட்டுரை) அவரது சிறுபிள்ளைத் தனமான அரசியல் அறிவைக் காட்டுகின்றது.

தவறுகளை மூடிவிட்டு மக்கள் தலையில் போட நினைக்கும் 'குடும்பிகட்டலை' ஒரு சாணக்கியமாக கருதலாமா?

இந்த ஒற்றுமையீனத்தால் பிரதிநிதித்துவம் பறிபோகும் என்ற தீர்க்க தரிசனத்தை திரு-கோணமலை மகா சபையினர் சந்திக்குச் சந்தி உரத்துக் கூக்குரலிட்டுக் கூறியதும், ஜேசுதாசன் அவர்கள் இதற்காக உண்ணாவிரத நோன்பை மேற்கொண்டதையும் எவரும் அறியாமலிருக்க முடியாது.

· தமிழ்க் கட்சிகளை குறிவைக்க ஒருவித எழுத்தும் விடுதலைப் புலிகளை தூக்கிவைக்க இன்னொருவித எழுத்தையும் எழுதி 'முக்காட்-டிற்குள் கை காட்டுபவர்கள்' சிலர் இத்தேர்தல் காலங்களில் பிரகாசித்ததையும் நினைவு படுத்தல் அவசியமாகிறது.

**தமிழ் வாக்காளரிடையே கொள்கை இருந்ததா?**

வெறுமனே 'ஒரு கம்பை' நாட்டிலும் வோட்டுப் போடும் நிலை மலையேறிவிட்டது. எம்.ஜி.ஆரின் புரட்சிப் பாட்டல்களுக்கு மயங்-கும் நிலை மாறிவிட்டது. இவைகள் எவையுமே தமிழ் மக்களிடையே எதுவித காத்திரமான தாக்கத்தையும் பதிக்கவில்லை. மாறாக தமிழ் மக்கள் மனநிலையில் மையமிட்ட அடிப்படை கொள்கைகள் இவைதான்.

1. எதிர்கால நாடாளுமன்ற தமிழ் பிரதிநிதிகள் பொதுவாக புலிகளின் கொள்கை-களுக்கு ஆதரவாக இருத்தல் அவசியம்.

2. அகதிகளாக அல்லலுறும் தமிழ் மக்கள் நலனில் பிரதிநிதிகள் நேரடியாக அக்கறை காட்டல் வேண்டும்.

3. அவசியமற்ற கைதுகள், வன்முறை-களின் போது தடுத்து, மனித உரிமைகள் பேண வழிசெய்தல்.

இவைகளோடு ஒப்பிட்டு போட்டியிடும் வேட்பாளர்களை நோக்கின் அதில் பலர் காணாமல் போய்விடுவார்கள். இந்த உண்மையை மக்கள் நன்குணர்ந்திருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் த.வி.கூ. காலம் காலமாக தன்னை ஆழப் படுத்தித்துக் கொண்டது என்பது உண்மைதான்.

இந்த நிலையிலும் கூட கூட்டணியால் தான் இம்மாவட்டத்தில் பொருத்தமான பிரதிநிதிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்த முடியும் என்பதில் எவருக்கும் வேறுபாடு இருக்க முடியாது.

இருப்பினும், இவைகளை மக்களின் பலவீனமாக எண்ணிக் கொண்டு 'பூச்சுற்ற' முயலும் தன்மையும், இல்லாது மாற வேண்டும்.

**2000ம் ஆண்டு தேர்தலில் கற்ற புதிய பாடம் என்ன?**

'தமிழர் மகாசபை' என்னும் அமைப்பு கிழக்கு மாகாணத்தில் தற்போது வேரூன்றி-யுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய-தொன்று. திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை தான் புதிதாக உருவாக்கப்பட்டது.

இச்சபை யின் நோக்கம் புனிதமானது. ஆனால், அம்பாறையில் வெற்றி பெற்ற வேட்பாளர் தமிழர். இருப்பினும், அவர் தமிழ் மக்களின் விடிவுக் குரலாக உள்ளாரா என்பதுதான் கேள்வி.

பெயரளவில் உள்ள ஒரு தமிழரை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள-லாமா? அப்படியானால் அமைச்சர் கதிர்கா-மரை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? இது ஒரு தர்ம சங்கடமான நிலை. அம்பாறை பா. உறுப்பினர் கு.சங்கர் அரசுக்கு கையுயர்த்தும் ஒருவராக இருப்பதை அனைவரும் அறிவர்.

இதேநிலை திருகோணமலையில் தமிழர் மகாசபை எடுத்த முடிவின்படி வெற்றி கண்டி-ருந்தால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகி விடுமா? ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயம்.

கொள்கையளவில் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் பிரதிநிதிதான் தேவையே தவிர, தமிழ-ரல்ல. இதை மகாசபை நன்கு உணர்-ந்து எதிர் காலத்தில் செயற்பட வேண்டியது தலை சுமந்த கடமையாகிறது.

| தமிழ் மக்கள் வாழ்விடம் | வாக்களிப்பு நிலையம் | தூரம் |
|---|---|---|
| 1. ஈச்சிலம்பற்று | சேருவில அலிஒலுவ | 12.கி.மீ. |
| 2. வெருகல் | சேருவில அலிஒலுவ | 18.கி.மீ. |
| 3. வெருகல் முகத்துவாரம் | சேருவில அலிஒலுவ | 19.கி.மீ. |
| 4. இலங்கைத்துறை முகத்துவாரம் | சேருவில அலிஒலுவ | 16.கி.மீ. |
| 5. பாட்டாணிபுரம் | தோப்பூர் | 10.கி.மீ. |
| 6. சாம்பூர் | மூதூர் | 9 கி.மீ |
| 7. கூறித்தீவு | மூதூர் | 11 கி.மீ |
| 8. இறால் குழி | மூதூர் | 7 கி.மீ |

மேலும், திருகோணமலை தமிழர் மகா சபையின் 'தலையில் கூடு கட்ட எண்ணிய தமிழ் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களை-யும் பற்றி சொல்லித்தான் ஆகவேண்டும். தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகவிருந்த ஆறு கட்சியின் தலைமை வேட்பாளர்களை தமிழர் மகாசபையினர் அழைத்திருந்தனர்.

த.வி.கூ. தவிர ஏனைய கட்சிகளான ஈ.பி.டி.பி., டெலோ, அ.இ.த.காங்கிரஸ், அ.பாக்கியதுரையின் தலைமையிலான சுயேட்சைக் குழு, பெ.சூரியமூர்த்தியின் தலைமையிலான சுயேட்சைக் குழு, ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (கூட்டணி வரமறுத்த காரணம் கொள்கையளவில் ஆயுதக் குழுக்-களுடன் ஒன்றிணைந்து போக முடியாமையே. 87ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டதை அவர்கள் மறந்து விட்டனர்.)

இதில் வேடிக்கை என்னவென்றால், ஈ.பி.டி.பி., டெலோ, தவிர்ந்த ஏனைய யாவும் வேட்பாளர் மனுவை தாக்கல் செய்து பணம் கட்டிவிட்டு, தமிழர் மகாசபையினர் தயாரித்த ஒற்றுமை வேட்பாளர் பட்டியலில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு 'அருளாமல்' குந்தியிருந்தது. மகாசபையைப் பொறுத்த மட்டில் தேர்தல் சம்பந்தமான உள்ளீட்டு நிர்வாக நிலை அறிந்திருக்காமையை தமக்குச் சாதகமாக பயன்படுத்திய 'தந்திரம்' தான் தற்போது அவர்களுக்கு ஏற்பட்ட 'அந்தரம்'.

த.வி.கூ. புறம் தள்ளப்பட்டதற்கான சில புதிய காரணங்கள்!

1. தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக்கட்சியும், ஜீ.ஜீ.பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம் அவர்களின் அமைப்பினால் தமிழ்க் காங்கிரசும், உருவெடுத்து பின்னர் அதுவே தமிழர் விடுதலைக் கூட்டணியாக தோற்றம் பெற்றதை அனைவரும் அறிவர். ஆனால், தற்போதைய பொதுத் தேர்தலில் இவ்விரு கட்சிகளும் யாருக்கும் தெரியாமல் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு எதிரும், புதிருமாக வசைபாடிக் கொண்டு தேர்தலில் நின்றது மக்கள் மத்தியில் ஒரு குழப்பநிலையை உருவாக்கி விட்டது. யார் இந்தக் கூட்டை குலைத்தார்கள் என்ற வாதத்தைவிட தந்தை செல்வாவால் கட்டியெழுப்பப்பட்ட கூடு உடைந்து விட்டது என்பது ஒரு கணிசமான அளவு த.வி.கூ. வாக்குகளை சரித்துவிட்டது. இதன் தாக்கம் தமிழ் காங்கிரசுக்குள்ளும், செயற்பட்டிருந்தது.

2. 'ஆள்பாதி - கொள்கை பாதி' இந்நிலை வெகுவாக மக்களால் இம்முறை கடைபிடிக்கப்பட்டது. சற்று 94ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குச் செல்வோம். "என்னத்தை சொன்னாலும் ஆக்களோட அன்பாய் ஆறுதலாய் பேச நல்ல மனிசன்" அமரர் தங்கத்துரை(பா.உ) யைப் பற்றிய மக்களின் கருத்து. இது திருகோணமலை மாவட்ட சகல இனமக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு விடயம். இதன் அடிப்படையில் இவரின் தனிப்பட்ட பண்பு, செல்வாக்காக மாறி மாவட்டம் பூராகவும் தாக்கம் பெற்றிருந்ததை எவராலும் மறுக்க முடியாது.

94ம் ஆண்டிலே விடுதலைப் புலிகளின் கொள்கைகளை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு செய்த பிரசாரமும், அமரர் தங்கத்-துரை பொருத்தமான வேட்பாளர் என மக்கள் கருத்திக் கொண்டமையும் அக்காலப் பகுதியில் கூட்டணி ஆசனத்தை கைப்பற்ற முடிந்தது.

2000ம் ஆண்டு தேர்தலில் இரா சம்பந்த-னின் பங்கு அதிகமாவிருந்தமையால் அவ-ரைப் பற்றிய கசப்புணர்வுகள் வெகுவாக ஆழம் பெற்றிருந்தன.

3. கூட்டணியின் தலைமை வேட்பாளர் சட்டத்தரணி கா.சிவபாலன் நல்லவர். வல்லவர் ஆனால், அதிகம் பேரால் அறியப்படாதவர். ஏனைய வேட்பாளர்களால் திருகோணமலை பாராளுமன்றப் பிரதிநிதியாவதற்கு பொருத்த-மானவர் என்ற ஆதங்கம் பெருமளவில் மக்கள் மத்தியில் கிளம்பியிருந்தது. எப்படி-யாயினும் தலைமைப் பீடம், வேட்பாளர் தெரிவில் அதிக கவனம் செலுத்தியது போல் தெரியவில்லை. பலப் பலவிதத்தில் கூட்டணி ஆதரவாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டதை அறியக் கூடியதாக இருந்தது. ஊர் சார்பாக, சாதியம் சார்பாக எவராவது ஒரு தமிழர் (பின்புலம் நோக்காது) பட்டியலில் சேர்க்கப்பட்டால் போதும் என்ற நிலையுடன் 'என்னைப் போடுங்கள்' என மாரடித்து வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதையும் குறிப்பிடலாம்.

கூட்டணிப் பட்டியல் வேட்பாளர்களில் பலர் தங்கள் பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றாலே போதும். அதுவே தங்களுக்-குக் கிடைத்த பெரு வெற்றியாகும் என எண்ணிக் கொண்டவர்கள் அதிகம். அத்தோடு இலகுவாக ஒரு சமூக அந்தஸ்தை அடைந்துவிடலாம் எனக்கனவு கண்ட இவர்களின் நிலை தேர்தல் காலங்களில் மிக மோசமாக 'நாற'த் தொடங்கி விட்டது.

எவர் பாராளுமன்றம் சென்றாலும், அவர்களின் சுயநலத்திற்காகவே செல்கிறார்களே தவிர தமிழ் மக்களின் நலத்திற்காக இல்லை. இவர்களின் முதுகுக்குப் பின்னால் நின்று நிலவு பார்ப்பதை விட நாம் நேராக பார்க்கலாமே' என்ற தமிழ் மக்களின் நிலைப்பாடு, பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களிக்கத் துாண்டியிருக்கலாம்.

5. திருகோணமலை தமிழ் மக்களின் வாழ்விடங்கள் அங்கு வாழும் ஏனைய இனத்தவர்களின் வாழ்விடங்-களிலிருந்து வித்தியாசப்படுகிறது. முஸ்லிம், சிங்கள, மக்கள் செறிந்து வாழும் இடங்கள் பெரும்பாலாக பயணவசதிகளும், அரச பாதுகாப்புடன் கூடியவையாகும். தமிழ் மக்களின் வாழ்விட பகுதிகள் பெரும்பாலானவை பயண வசதி, அடிப்படை வசதிகள், தொழிற்ற தன்மை, சுதந்திரமாக நகரில் நடமாட முடியாமையும், படையினரின் கைதுகளும், பாராளுமன்ற பிரதிநிதிகள் கடந்த காலங்களில் ஏற்படுத்திய நம்பிக்கைத் துரோகங்களும், போன்ற பற்பல காரணங்களால் வாக்களிக்க வராமையாகும். (பார்க்க அட்டவணை) இப்படி பல இடங்-களைக் குறிப்பிடலாம்.

இத்தனை துாரம் கஷ்டப்பட்டு காவலரண்-களை தாண்டி இவர்களை பாராளுமன்றம் அனுப்புவதில் என்ன பயன், என்ற எண்ணம் இயல்பாகவே தோன்றுவதில் நியாயமுண்டு. மேலும் நகர்புற மக்களளில் அதிகமானோர் கூட இந்த நிலைப்பாட்டில் வாக்களிக்கவில்லை என்பதும் உண்மை.

தமிழ் மக்களின் நிலைமைகள் இந்த அளவில் நிற்கும் போது 207வது சரிநிகர் இதழில் 'விவேகி' எழுதிய 'தமிழர் தாயகத்தின் தலைநகரம்' என்ற கட்டுரையின் இறுதிப் பத்தியிலேயே அண்டிப் பிழைக்கலாம்' சேர்ந்து வாழலாம். நக்கியேனும் உயிர்பிழைக்கலாம் என்று திருகோணமலத் தமிழர்கள் நினைத்த பிறகு யார் என்ன சொல்ல முடியும்' என்ற வார்த்தைகள் இங்கு வாழும் ஒவ்வொரு தமிழரையும் குத்திப் புண்ணாக்கின்றதென்பதை உணர வேண்டும். தமிழ் மக்களின் நிலைகளை சரிவர அறியாது 'விவேகி' எழுந்தமானமாக கூறுவது தனது தேர்தல் நிலைப்பாட்டை இத் தமிழ் மக்கள் எடுக்கவில்லையென்ற திணிப்-பைத் தான் பறைசாற்றுகின்றது. இப்படியான அரசியல் கலாசாரத்தைப் பின்பற்ற மக்கள் என்றுமே ஆயத்தமில்லை என்பதை உணர வேண்டும்.

. காலத்திற்கு காலம் தேவைக்கேற்ப மாறுபடாத கொள்கையுடைய கட்சியை தோற்றுவியுங்கள். பின்பு பார்க்கலாம்.

தேர்தலின் இறுதி நேரம் வரை 'பெரிசுகளிடமிருந்து' ஏதாவது சமிக்கைகள் வருமா என தமிழ் மக்கள் அங்கலாய்த்த வண்ணமே இருந்தனர். ஒவ்வொரு கட்சிகாரர்-களும், புலிகளிடமிருந்து அனுமதி கிடைத்து விட்டதென மக்களை ஏமாற்ற முனைந்ததை மறுக்க முடியாது. ஏன்? பிரபல மாமானிதக் கட்சி தமக்கு வாக்குப் பண்ணும்படி புலிகளின் இலச்சினையோடு துண்டுப் பிரசுரங்களை இறுதி நாட்களில் வெளியிட்டிருந்ததை எவரும் மறந்து விட முடியாது.

இதன் புரிதல் யாதெனின் விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலிலே அனைத்து தமிழ் மக்களும் தங்கியுள்ளனர். புலிகள் அரசியலுக்கு இறங்கும்வரை இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டால் என்ன?

இதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடு!

இது மறுப்பதற்குமில்லை.

# இது வரவு வைக்கப்படாத இரத்தம் கணக்கில் வராத வரலாறு’

# இரணியன்: திரைபடம் பற்றிய ஒரு அலசல்

~ கா. இளம்பரிதி

வாட்டாக்குடி கிளியோதிடக்காரனுக்கும், அவனது கிளிக்கும் தொடர்ந்து ஊருக்கும், உறவுகளுக்கும் உணர்வெல்லாம் அவனை உழுது விதைத்திருக்கும் அவனது காதலிக்கும் (மாமன் மகள்) மிகச் சாதாரணமாகவே அறிமுகமாகும். "இரணியன்", மேற்சட்டை இல்லாமல், கக்கத்தில் (கை இடுக்கில்) துண்டு இடுக்கி முதுகு வளையக் கும்பிட்டு தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில் விருந்துக்குக் கூடியிருக்கும் கீழ்சாதி மக்களைத் தோளில் துண்டு போடவும், காலில் செருப்பு அணியவும்




அறிவுறுத்தி வீட்டுக்குள் அழைத்து வந்து (சமபந்தி) விருந்து வைக்கும் போதுதான் நமக்கு (நாயகனாக) அறிமுகமாகிறான்.

தோளில் துண்டும், காலில் செருப்பும் அணிந்து ஆண்டைக்கு முன்னால் வந்த குற்றத்திற்காக, ஆண்டையின் கொலைக்களத்தில் ஒரு கீழ்சாதி என்றழைக்கப்படும் மகனுக்கு சாணிப்பாலும், சவுக்கடியும் தண்டனையாக நிறைவேற்றப்படும் காலமும், காட்சியும் குலைநடுங்கும் பதற்றத்தோடு செயலொடுங்கி ஆண்டையின் முன் மண்டியிட்டுக் கிடக்கும் அந்த மக்களின் அடிமை வரலாற்றை ஆயிரமாயிரம் வார்த்தைகளால் எழுதினாலும் தந்துவிடாத துயரத்தை மனித நேயமுள்ள எந்தவொரு மனிதனுக்கும் ஏற்படுத்தி விடுகிறது.

சாணிப்பாலும், சவுக்கடியும் தரப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்ட அந்த கீழ்சாதி மனிதனுக்காகத் தோண்டப்பட்ட புதைகுழி வீறுகொண்டு எழப்போகும் ஒரு வரலாறுக்காகத் தூவப்படும் ஒரு விதைக்கானது என்பதை புரிந்து கொள்ளாத ஆண்டையின் மூத்த மகன் "ஒரு கீழ்சாதிப்பய செத்தா அது எங்களுக்கு ஒரு மாடு செத்ததுக்கு சமம். மாடும் நத்தையும் தின்னு உயிர்வாழும் இவனுக்களுக்காக (கீழ்சாதி மக்கள்) இனிபேச நினைச்சா உனக்கும் ஒரு புதைகுழி காத்திருக்கும்" என இரணியனை எச்சரிக்கை செய்கிறான்.

வர்க்க வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த இரணியனின் குடும்பம் அந்த உரிமையை இழக்கிறது. காதலியோடு நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆண்டையால் தடுத்து நிறுத்தப்படுகிறது. இரணியனுக்கு இவை இழப்புகள் அல்ல. "குத்தகைக்காரனாக, ஊருக்குள் வெள்ளையுஞ் சொள்ளையுமாக உடுத்திக் கொண்டு (அற்ப) மரியாதையோடு வலம் வந்த நான் இனி கூலி வேலை செய்து பிழைக்கணுமா?" - என ஆதங்கப்படும் தன் தகப்பனிடம், சரண்டிக்கொடுத்து அதிகாரத்தில் வீற்றிருக்கும் ஆண்டைக்கு எதிராக வாளெடுக்கப் போவதாகத் தான் தேர்வு செய்திருக்கும் வேலையை - கடமையை குறுகிக் கிடக்க வேண்டிய அற்ப வாழ்வு பறிபோவதில் வருத்தம் இருக்க முடியாது.

ஒடுக்குபவனுக்கும், போராடுபவனுக்கும் இடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தில் ஆண்டைகள் (ஆளும் வர்க்கம்) ஆயுதபாணியாகக் கோலோச்சிக் கொண்டிருக்கும் பொழுது இரணியன்களை நிராயுதபாணிகளாய் எதிர்பார்ப்பது நியாயமில்லை. ஆனாலும், ஆயுதங்கள் போராட்டங்களைத் தீர்மானிப்பதில்லை. இருந்தும் போராட்டங்கள் ஆயுதங்களைத் தீர்மானிக்கின்றன. சில நேரங்களில் போராட்டங்களும், சூழலும் கூட "அச்சாணி' இரணியன் கையில் ஆயுதமாகப் பரிணமித்த காலமும் இடமும் இத்தகையதே.

இரணியன் தந்தையின் இறப்பைப் பறையறைந்து "சாவு சேதி" சொல்லியும், ஆண்டைக்குப் பயந்து பிணம் தூக்க மறுத்து ஒதுங்கும் கீழ்சாதி மக்களிடம் நியாம் பேசியும், காதலனின் தந்தை பிணத்திற்கு (ஒரு பெண்ணாயிருந்து(ம்)) எரியூட்டியும், இரணியனின் காதலி ஆற்றும் குறிப்பிடத் தகுந்த சமூகப் பாத்திரம் சாதாரணப் படிமங்களாக நம்மைக் கடந்து போகின்றன.

பறையடித்தல், மக்களைத் திரட்டி நியாயம் பேசுதல், சிதைக்குத் தீவைத்தல், என ஆணாதிக்க மரபுகளைச் சூழலின் நெருக்கடியில் இலகுவாக மீறிய ஒரு பெண்ணின் உருவகமாக இரணியனின் காதலி காட்சிப் படிமமாக நமக்குள் உறையும் போது வர்க்கப் போராட்டத்தின் உள்ளூறையாக பெண் விடுதலை பெண்ணுரிமைப் போராட்டம் பதிவுறும் என நமக்குப் புரிகிறது. ஆனாலும் பறையடிக்க மறுத்த புலையனின் கட்டை விரலைத் துண்டாக்கிய ஆதிக்க சாதியும், கணவனின் எரிசிதையில் உடன்கட்டை ஏற்றிய ஆணாதிக்க "சதிமாதா" கொடுமையும் நிலப்பிரபுத்துவ எச்சங்களாக நிலவி வரும் இன்றைய சமூகத்துக்குச் சற்றே முந்தைய கால சமூக விடுதலை - சம உரிமைப் போராட்ட வரலாற்றில் பெண்ணுரிமை காவுகேட்ட இழப்புகளும், அர்ப்பணிப்பும் போதிய அளவில் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் உணர்த்துகிறது.

ஆண்டையாலும், அரசாலும் தேடப்படும் குற்றவாளியாக இருக்கும் இரணியனின் தந்தையின் இறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குற்றத்திற்காக ஆண்டையின் நிலங்களில் கூலி வேலைக்கும் கால் வைக்கக் கூடாதென அந்த உழைக்கும் மக்கள் விரட்டியடிக்கப்பட, அக்கூலி விவசாயிகளின் உரிமைப் போராட்டத்திற்கு வடிவம் கொடுக்க முடிவெடுக்கும் இரணியன். "நாம் எடுக்க வேண்டிய ஆயுதத்தை ஆண்டை தீர்மானித்து விட்டான்" என "கதிர் அரிவாளோடு" அம்மக்களை களமிறக்க, இரவோடு இரவாக ஆண்டையின் வயல்களில் அறுவடை முடிந்து விடுகிறது. இம்முறை மக்கள் ஆயுதபாணியாகிறார்கள். மீண்டும் தனக்கெதிரான ஆயுதத்தைத் தீர்மானித்தவன் ஆண்டையே. ஆனால், அறுவடை செய்யப்பட்டது ஆண்டையின் உயிரல்ல உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கும் போராட்டத்தில் நிலத்தை உழுதவர்கள் தாங்கள் விதைத்த உழைப்பை அறுவடை செய்து கொள்ளும் இடைக்கட்டப் பகுதியே இது என்பது நம்மைவிட ஆண்டைக்கு வெகுவாகவே புரிகிறது.

ஆண்டையின் எதிர்ப்புணர்வை அறுவடை செய்த மக்கள் மீது அவனது ஏவல் நாய்கள் (மனித மிருகங்கள்) கட்டவிழ்த்து விடுகின்றன. அறுவடை செய்யப்பட்ட கதிர்கள், காரை மெழுகி கூரை வேய்யப்பட்ட குடிசைகள், ஒட்டுத்துணிகள், தட்டுமுட்டு சாமான்கள் என மீதமிருக்கும் வாழ்க்கையின் ஆதாரங்களும், ஏவல் நாய்களால் தீக்கிரையாக்கப்பட, இன்னுமொரு "வெண்மணி நிகழப் போகிறதோ என நாம் பதைத்திருக்கும் நேரத்தில் இரணியன் தன் உயிரைப் பணயம் வைத்து, மக்களை தாக்கும் அந்நாய்களோடு பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது. ஆனால், இங்கு நிராயுதபாணியான மக்களை ஆயுதபாணியாக இரணியன் காப்பாற்றும் செயல்தந்திரம் நிறைவேறுகிறது. எதிரிகள் (ஆளும் வர்க்கம்) எப்பொழுதும் ஆயுதபாணிகளே.

இடையில் இரணியனுக்குத் தன் மானசீகக் காதலியோடு இரசியத் திருமணமும், உடல் உறவும் எதிர்பாராத விதமாக நிகழ்ந்து விடுகிறது. நிறைமாதக் கர்ப்பிணியாக, பிறக்கப்போகும் குழந்தையின் பாதுகாப்புக்காகத் தன் மறைவிட இருப்பிடம் தேடிவரும் மனைவியிடம் "நீ நாளைக்குப் பிறக்கப்போற ஒரு குழந்தையைப் பத்தி கவலைப்படுகிற. நான் காலகாலமாக வாழ்க்கையை இழந்து தவிக்கும் ஒரு வர்க்கத்தைப் பத்திக் கவலைப்படுகிறேன்" என்று இரணியன் தன் குணத்தை வலியுறுத்தி நிறுவும்போது புரட்சிகர நம்பிக்கை அடிமைப்பட்ட அந்த மக்களுக்குள் துளிர் விடுகிறது.

உயிரோ, உடமையோ மக்கள் எதிர்கொள்ளும் இழப்புள் எதுவானாலும் அதே வடிவத்தில் ஆளும் வர்க்கத்திற்குப் பதிலடி தரப்படும் பொழுது அவர்களின் கொலை வெறி இன்னும் உச்சத்திற்குச் செல்கிறது. தன் வாரிசு உடைமை நிர்மூலமாக்கப்பட உச்சவெறி ஆண்டைக்குள் கோரத் தாண்டவமாடுகிறது. ஊர்த் திருவிழாவில் பரிமாறப்படும் கஞ்சியில் ஆள்கொல்லி நஞ்சு கலந்து பசித்திருக்கும் மக்களைத் துடிக்கத் துடிக்க கொல்லும் அளவிற்கு ஆண்டையும் அவன் கைக்கூலியும் இரக்கமற்ற கொடும்பாவிகளாய் விசுவரூபம் எடுக்கின்றனர். அப்பனும், ஆத்தாளும் உடன் பிறந்தவர்களும், குழந்தை குட்டிகளுமாய் கண்களுக்கு முன்னால் சருகாய் செத்துக்கிடக்க, எஞ்சிய மனித உயிர்களுக்குள் வார்த்தைகளால் அளவிட முடியாத பிரளயம் ஏற்படும் என நாம் எண்ணியிருக்க, அவர்களோ அஞ்சி நடுங்கும் ஒடுக்கத்திற்கு ஆளாகிறார்கள். உயிர் பிழைக்கும் நெருக்குதலில் இரணியனை அவன் போராட்டத்தை அவன் வேண்டுகோளைப் புறக்கணித்து ஊரைவிட்டே புலம்பெயரும் அந்த உழைக்கும் மக்களின் செயல் இரணியனை மட்டுமல்ல, நம்மையும், கேள்விக்குள்ளாக்கிறது.

தத்துவ வழிகாட்டலும், அரசியல் நெறிப்படுத்தலும், மக்களும் பங்கெடுக்கும் போராட்ட செயல்திட்டங்களும் முன்வைக்கப்படாத எந்தவொரு தனி மனித சாகசமும் மக்களுக்கான போராட்டமே ஆயினும், மக்களின் புறக்கணிப்புக்கு உள்ளாக நேரும் என்பது இரணியனுக்கு மட்டுமல்ல, நமக்கும் போராட்ட அனுபவங்களே.

அதிர்ச்சி தரும் நிகழ்வுதான் எனினும், எதிர்ப்புணர்வு மழுங்கடிக்கப்பட்டு, சரண்டலும், ஒடுக்குமுறையும் நுகத்தடிகளாய் அழுந்த அடிமைச் சனங்களாய் வாழ்ந்த வாழும் அந்த உழைக்கும் மக்களின் அறியாமையும், குமுறும் மன இறுக்கமும் தான் தமக்காகப் போராடிய - அர்ப்பணித்த - இழப்புகளை நெஞ்சுறுதியோடு ஏற்றுக்கொண்ட ஒரு போராளியை - நடுத்தெருவில் கல்வீசித் தாக்கிக் கொல்லவும் துணிந்து - நாம் எதிர்பாராத - எதிர்வினைக்குக் காரணிகளாய் இருக்கின்றன. ஒரு போராளியாய் இரணியனும் அறிந்திருக்கும் மக்கள் உளவியல் இது.

குற்றுயிராய்த் தாக்கப்பட்ட நிலையிலும் மக்களின் ஒற்றுமைக்கும், போராட்ட உணர்வுக்கும் அறைகூவல் விடுக்கும் இரணியன். "இந்த மக்களிடம் இழப்பதற்கு எதுவுமில்லை. அதனால் என்னை இழக்கிறேன். என்னைப் போல் ஆயிரம் இரணியன்களை இந்த மக்கள் உருவாக்குவார்கள். ஆனால், இவர்கள் பெறுவதற்கோ ஒரு பொதுவுடமைப் பொன்னுலகம் காத்திருக்கிறது" எனப் புரட்சியின் முன்னறிவிப்பாய் முழங்கி, அதன் நெடிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இருந்தும் இன்னும் வாழ்கிறான்.



"நீ செத்தால் பிணம் நான் செத்தால் வரலாறு" என ஆண்டையின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு நெஞ்சுயர்த்தி, தன் கடைசிக் கணத்திலும் கனலாய்த் தெறிக்கும் இரணியனின் மரணம், இன்றும் கொடி உயர்த்திப் போராடிவரும் அனைத்து உழைக்கும் மக்களின் நேர்செய்யப்படாத கணக்கில் வரவு வைக்கப்படாத வரலாறு.

"ஒரு இடதுசாரி என்பதற்காகவே சுதந்திரப் போராட்ட வரலாற்றில் புறக்கணிக்கப்-

⇨13

# நிலவில் கனவு.....!



வெண்ணிலா பூத்து
ஊரெல்லாம் ஒளிவாசத்தில் நனைந்தது
சில அப்பாவி காகங்களும்குயில்களும்
கரைந்து கூவின - வானத்தில் சிறகடித்து ஓய்ந்தன
பகல்நேர பச்சை மரங்கள்
நிழல் கலரில் மோகத்தில் அசையும், முனகும்,
சில்வண்டும் சிறுகுளவியும்
நிலவொளியில் கரைந்த இரவை அடர்த்திப்படுத்தும்
நீண்டுயர்ந்த பனைகள்
வானத்தாளில் கிறுக்கல் சித்திரம்.

நடுமுற்றத்தில் எங்களிற்கு
அலுமினிய சட்டி நிறைய சோறு, கறி, சொதி
பிசைந்து "கவளம்" தரும் - அம்மா
புல்மேல் பாய்விரித்து
பல்விழாத என் ஆச்சி - கதையூடே
இளமை கொண்டு
வேட்டையாடுதல், திருவிழாக்கள், கூத்துக்கள் ஆடி
நிலவொளியில்
தன் பரம்பரையையே கூட்டிவருவாள்

கோயில் சென்று திரும்பும் ஒழுங்கையில்
பௌர்ணமி இரவில்,
தன்வீட்டு படலையடியில்
குவிக்கப்பட்ட வெண்மணலில், தோழியுடன்
கதைபேசி காற்றில் பிரிந்துவந்து
எனக்குள் கரையும் அவள் தனிமொழி!
தூரத்தில் நான் மறையும் வரை - அவளின்
இருநிலவுகள் என்னைத் தொடர்வதை
முழுநிலவு அறியும்.

மல்லிகை வெள்ளையாய் அம்புலி ஒளி
அவள் முகம் பட்டு ஒளிர்ந்ததை - இரவில்
கனவிலும் தொடர்வேன்.

என்னுள் தோட்டத்து வாய்க்கால்களில்
நிலவுகலந்து பால்ஓடும்
வெத்திலையும், புகையிலையும், மரவள்ளியும்
வெள்ளித்தகடாய் மினுங்கும்.
மறுபுறம்....
குட்டான் பனங்கட்டியுடன்
கூடியிருந்து தேநீர் குடித்ததும்
சோகப்பட்ட தன் காதல் பற்றி
என்தோள் சாய்ந்து அழுத
என் அருமை தோழனும்....
நினைவில் நிற்கும் நிலவு நாட்கள்.

ஆனால்.........
இப்பவெல்லாம் நிலவுவருவதில்லை.
மாதமொருமுறை நிலவு மறந்து போயிற்று.
சூரியஸ்தமத்தில் அடைக்கப்பட்டு
சூரியோதயத்தில் திறந்து விடப்பபடும்.
இரவுகள்
பௌர்ணமியும், அமாவாசையும்
ஒத்தபொருள் கொண்ட விந்தை.
இன்றும்
சிறைக்கூரைமேல்
நிலவு சிரிக்கலாம்.

- சித்திராதரன்
களுத்துறைச் சிறையிலிருந்து

## 'பொட்டர்' காய்ச்சல்!

எல்லா இடங்களிலும் இப்போது Potter Mania பிடித்திருக்கிறதாமே? அங்கு எப்படி? இங்குவரும் பத்திரிகைகள் குறிப்பாக சிறுவர் பத்திரிகைகள் அவற்றைப் பிரதானப்படுத்தி பல கட்டுரைகளை, தகவல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு சிறுவர் இலக்கிய நூல் இந்தளவுக்கு ஆச்சரியப்படுத்தும் விதத்தில் ஹிட்டானது ஏன் என்று இலக்கிய, நூல் விமர்சகர்கள் காரணம் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு வியந்து கொண்டிருக்கிறார்களாம்.

உண்மையில் பார்க்கப் போனால் இந்த மேற்கத்தேயக் காய்ச்சல் நமக்குத் தேவையில்லாத ஒன்று தான் ஒரு புறம். ஆனால் மறுபுறத்தில் நமது பெயர்வுகளாலும், நகர்வுகளாலும் இந்தக் காய்ச்சல் நமக்கும் அடிக்கத்தானே செய்யும்.

சிறுவர்களுக்காக எழுதப்பட்ட ஒரு கதை நூலே இந்த Harry Potter தொடர். கிட்டத்தட்ட இதுவரை முப்பது மில்லியன் பிரதிகள் விற்பனையாகி, அதை எழுதிய J.K. Rowling என்ற பெண்மணியை (35 வயதான பெண் பேதையா, மடந்தையா அல்லது பதுமையா?) பெரும் பணக்காரியாக்கியிருக்கிறதாம். இப்போதெல்லாம் அவர் நகைக் கடையில் விலையைக் கேட்காமலேயே நகை வாங்குகிறாராம்!

பத்து வருடங்களுக்கு முன்னர் அதாவது 1990ல் இந்த எழுத்தாளினி Manchester லிருந்து லண்டனுக்கு புகையிரதத்தில் போய்க் கொண்டிருந்த போது தான் இந்த சிறுவர் கதை நூலுக்கான கரு தோன்றியதாம். (நமது நெரிசல் மிகு புகையிரதங்களிலும் பல "கருக்கள்" தோன்றுகின்றன தானே!?)

அது தோன்றி வளர்ந்து, விரிந்து இந்த ஆண்டு ஜுலையில் அதன் நான்காம் தொடர் (Harry Potter and the Goblet of Fire) வெளிவந்ததிலிருந்துதான் இந்தளவு பரபரப்பும், விற்பனை வேகமும் பிடித்திருக்கிறது. (ஒரு தமிழ் நூலின் உச்சபட்ச பிரதிகளின் விற்பனை எண்ணிக்கை எத்தனையாயிருக்கும்?) ரஷ்ய, பல்கேரிய, லத்தீனிய, லிதுவேனிய, செர்பிய, தாய் (தாய்லாந்து) மொழிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்ப்பாகியிருக்கிறது இந்நூல். தற்போது இதைத் திரைப்படமாக்கும் முயற்சிகளும் தீவிரமாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தன்னை ஓர் அதி திறமை வாய்ந்த சாகசக்காரனாக உணர்கிற, மாயா ஜாலங்கள், மந்திர தந்திரங்கள் தெரிந்த ஒரு சிறுவனே இக் கதைத் தொடரின் பிரதான கதாபாத்திரம். (Bat Man, Spider Man களின் ஜுனியரா?) நூலாசிரியரின் சிறுவயதுச் சூழலில் இருந்த நண்பர்கள், அவரில் ஏற்பட்ட தாக்கங்கள், ஈர்ப்புகள் என்பனவும் பல வடிவங்களில் பல பாத்திரங்களாக வெளிப்படுகிறதாம்.

உதாரணத்திற்கு, தன் சிறுபராயத்து அண்டை வீட்டு விளையாட்டுத் தோழனின் பெயரையே இக்கதையில் பாவித்திருக்கிறார். இப்படியாக சில விடயங்களை ஞாபகப்படுத்தியும், உவமைப்படுத்தியும் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவாம். கதையின் இன்னொரு பாத்திரம் தன் பாட்டியை நினைவு கூர்ந்ததாகவும், இன்னொன்று தன் தாயின் மரணத்தின் இழப்பை நினைவு கூர்ந்ததாகவுமென உருவாக்கப்பட்டிருப்பதாக இவர் கூறியுள்ளார்.

இவரது பிரசுரப் பெயருக்குப் பின்னால் இருக்கிற இன்னொரு விடயத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிடப்படுகிறது - Joanne Kathleen Rowling - initials were adopted at her publisher's request on the grounds that boys might be put off by a woman author:!

"The worst secretary ever" என்று தன் முன்னால் வேலையைப் பற்றிக் குறிப்பிடும் இவர் பிரெஞ்சு மொழியில் பட்டம் பெற்றவர். பின்னர் Amnesty Internatinal ல் தொழில் பெற்று போர்த்துக்கல்லில் ஆங்கிலம் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

இவரது திருமணத்தில் ஏற்பட்ட முறிவின் காரணமாக Scottish தலைநகரான Edinburgh இல் குடியேறி வாழ்ந்து வருகிறார். தன் தொடர்மாடிக் குடியிருப்பின் ஆரவாரங்களுக்குள்ளிருந்தும், சிலவேளைகளில் அருகிலிருக்கும் சிற்றுண்டிச் சாலையில் இருந்து கொண்டுமே (இவரது குழந்தை அதன் இருக்கையில் தூங்கிக் கொண்டிருக்குமாம்) இந்த சாதனை நூலை எழுதி முடித்திருக்கிறார்.

முன் சொன்னது போலவே, விமர்சகர்கள் இந்த நூலின் இந்தளவு வெற்றியைப் பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம். சிலர், நூலாசிரியையின் சிறுபராயக் கனவின் பிரதிபலிப்பே இது என்று (தான் இவ்வாறு அதாவது சாகசங்கள் நிரம்பிய, மாயா ஜால வித்தைகள் தெரிந்த ஒருத்தியாக இருக்க விரும்பியதாகச் சொல்லியிருக்கிறார்) சொல்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிற சிறுவர்கள் கூட சக்தியற்றிருக்கிறார்கள் என்பது அவர் கருத்து. அவ்வாறானவர்கள் இவ்வாறான பிரதிபலிப்பின் மூலம் சந்தோஷமடைகிறார்கள்.

இன்னும் சிலர், Harry ஓர் அநாதைச் சிறுவன். எதையும் அடைந்து கொள்வதற்கான வழிகளை, திறமைகளை தன்னுள்ளேயே காண்கிற சிறுவன் என்கிறார்கள்.

எமது சிறுவர் இலக்கிய வளர்ச்சியை, தொடர்பை இப்படி அளவிடலாமா?

ஒரு ஊரில ஒரு ராஜாவாம் என்று தொடங்குகிற எத்தனையோ பாட்டிக் கதைகள் கேட்டிருக்கிறோம். அம்புலி மாமாக் கதைகள் ஒரு காலத்தில் நம் ஆர்வத்திற்குரிய ஒன்று.

மாஸ்டர் சிவலிங்கத்தின் கதைகள் சிந்தாமணியில் வந்த போதெல்லாம் வாசித்தோம். இராசையா ஐயாவின் சண்டியன் ஓநாய் பற்றி சரிநிகரிலும் எழுதினோம்.

அதற்கு அப்பால்..........? (பிள்ளைகள் டீவியில் கார்ட்டூன்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களா?)

## இரணியன்.........

பட்ட ஓர் இலட்சியப் போராளியின் உண்மைக் கதையே இரணியன் வரலாறு" என ஒரு பத்திரிகை நேர்காணலில் கருத்துரைத்தார் இயக்குனர் வின்சென்ட் செல்வா. ஒரு தமிழ்ப்படத்தின் தவிர்க்கவியலாத கதை உத்திகளோடு (கனவுப்பாடல்கள், தனி மனித சாகசம்) "இரணியன்" திரைப்பத்தைக் கதையாடல் (Narrative) செய்திருக்கிறார். ஒரு வணிக சினிமாவுக்கான இத்தகைய சமரசங்கள் இதுபோன்ற திரைப்படங்களின் கட்டமைப்பைச் சீர்குலைக்கின்றன. புரட்சியாளனின் கதையானலும் காசு பண்ணும் சாமார்த்தியம் தமிழ் (இந்திய) சினிமா தயாரிப்பாளர்களுக்குக் கைவந்த கலை. இந்தக் கலை முதலாளிகளின் கைமீறி புரட்சிகர முற்போக்கு வாடையோடு திரைப்படச்சுருள் தணிக்கை (Censor) யாளர்களின் அறைக்குள் நுழைந்து விட்டால், அவர்களின் ஆளும் வர்க்க விசுவாசத்தில் அந்த நெடி சுத்திகரிக்கப்பட்டுவிடும்.

"வாட்டக்குடி" தலைப்பே சுத்திகரிக்கப்பட, மீண்டு வந்த இரணியன் வாட்டாக்குடி மக்களை மட்டுமல்ல, நம்மையும் ஏமாற்றவில்லை.

தியாகபூமி, கண் சிவந்தால் மண் சிவக்கும், ஏர்முனை, ஒரு இந்தியக் கனவு... திரைப்பட வரிசையில் "இரணியன்" இன்னுமொரு தரமான தமிழ்ப்படம். ஆனால், முதலாளித்துவப் பிரச்சார கண்காணிப்புச் சாதனங்களாக இருந்து கொண்டிருக்கும் மீடியாக்கள் ஒரு நாலாந்தர தமிழ் சினிமாவுக்குத் தரும் வரவேற்பையோ விளம்பரத்தையோ கூட இரணியனுக்குத் தரவில்லை.

நன்றி: கதவு

# அந்நியமான நண்பர்கள்

ராணுவ வண்டி பிரதான வீதியில் ஏறுவதற்காக அவர்கள் வசித்த வீட்டின் ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தது. அந்த ஒழுங்கையிலிருந்த வீடுகள் அனைத்துமே ஒருவருக்குச் சொந்தமானது. கிழவர் தனது நான்கு புதல்வர்களுக்கும், மூன்று பெண்களுக்குமாக ஏழு வீடுகளை அந்தப் பெரியவத்தையில் கட்டிக் கொடுத்திருந்தார். அவரது பேரர்கள், ராணுவ வண்டியில் பலமாகத் தட்டியும், பெரிதாகச் சிரித்த படியும், அதன் பின்னே விரைந்து நடைபோட்டுக் கொண்டிருந்தனர். ஒழுங்கை சற்றுக் குறுகலானதால் ராணுவ வண்டியின் வேகம் அவர்களது நடையுடன் ஒத்திருந்தது. அவன் தலையைக் கவிழ்ந்தபடி வண்டிக்குள் இருந்தான். அவர்கள் அனைவருடைய பார்வைகளும், வண்டிக்குள் இருந்த அவனையும், அவனது சுற்றத்தவர்களையும் குறிவைத்துப் பார்த்தபடி இருந்தன.

அவன் அவர்களை கடைக்கண்ணால் ஒரு முறை பார்த்தான். அவர்களது முகத்தில் கடுஞ்சினம் தெரியவில்லை. ஆனால் அவற்றில் கேலியும் கிண்டலும் இருந்தன.

"ராஜ கமேட்ட யனவத" என ஒரு குரல் கேட்டது. "ஒக்கமலா யனவத" வேறொரு குரல் சிரிப்பு அட்டகாசமாக மாறியது. ராணுவ வண்டி ஊர்ந்து கொண்டிருந்தது அவனுக்கு ஒரு யுகம் கழிவது போலிருந்தது.

கடைசியில் ஒரு வழியாக வண்டி ஒழுங்கையை விட்டு விலகி வலப்புறமாகத் திரும்பி, பிரதான வீதியில் ஏறிவிட்டது. கிழவரின் பேரன்மார் மெயின் வீதியில் சிறிது தூரம் ராணுவ வண்டியின் பின்னால் ஓடிவந்தார்கள். வண்டியின் வேகம் மேலும் அதிகரிக்கவே அவனுக்கு அவர்களின் உருவங்கள் தொலைவாகி கடைசியில் வீதியின் ஒரு வளையவில் மறைந்தும் விட்டன. அவன் சற்று நிம்மதி அடைந்தான்.

அந்த வீட்டுக்கு மாமாவின் குடும்பம் வந்து ஒரு வருடமாகிறது. கிழவரின் கடைசி மகனான ராஜபக்ஷ மாமாவின் கந்தோரில் வேலை செய்பவர். அந்தப் பழக்கத்தில் கிடைத்த வீடு .

கிழவரின் கடைசி மகளுக்கு எனக்கட்டியது. அவளுக்குத் திருமணம் ஆகும் வரை இருக்கலாம், அதுதான் ஏற்பாடு.

வீட்டுக்கு வந்த அன்றே கிழவரின் பேரன்மார்களில், அவனது வயதை ஒத்தவர்கள் எல்லோரும் அவனுடன் ஐக்கியமாகி விட்டார்கள். அவர்கள் ஐந்து பேரோ, ஆறு பேரோ அவனுக்குச் சரியாக ஞாபகம் இல்லை. சுனில் மட்டுமே உருவத்திலும் சரி, பெயரிலும் சரி அவனுக்கு இப்போது ஞாபகத்தில் இருக்கிறான். கறுத்த உருவமும், உருண்டை முகமும், உருண்டைக் கண்ளும், முள்போல் நிற்கும் மயிர் படியவே படியாது. வெதமாத்தயாவான அந்தக் கிழவரது வத்தை சற்று விலாசமானது. கொழும்பில் அவ்வளவு பெரிய வத்தை இருப்பது அபூர்வம் தான். சுனிலின் வயதை ஒத்த பேரப்பிள்ளைகளைத் தவிர, வேறு பராயங்களிலும் கிழவருக்கு பேரப்பிள்ளைகள் இருந்தனர். அவனுக்கு அவர்கள் பலருடைய உருவங்களை இப்போது நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அவர்களில் ஒருவனது ஞாபகம் சற்றே இருக்கிறது. அந்தப் பேரன் கிரிக்கெட் பந்தை துணியில் சுற்றி, அதனை ஒரு வளைந்த மரத்தில் கயிற்றில் தொங்கவிட்டு, பின் கிரிக்கெட் மட்டையால் அதனை மணிக்கணக்காக அடித்தபடி இருப்பான். வத்தை விசாலமானது ஆயினும், வீடுகளும் அவற்றினைச் சூழ அடர்த்தியாக மரங்களும் இருந்ததால், கால்பந்தோ, அல்லது கிரிக்கெட்டோ அங்கு விளையாட முடியாது. ஒழுங்கையில் மட்டும் ஓட்டப்பந்தயங்கள் நடத்தலாம். அங்கும் கூட கிரிக்கெட் விளையாட முடியாது. ஒரு முறை விளையாடி கிழவரின் மூத்தமகனின் வீட்டின் யன்னல் கண்ணாடி உடைந்தது, பெரிய ரகளையாகிப் போய்விட்டது. பந்தை அடித்தவன் அவன் என்பதால், மாமா புதிதாகக் கண்ணாடி போட்டுக் கொடுத்தார்.

தோட்டத்தின் நடுவே கிழவரது வீடு. ராக்கைகளில் அடுக்கடுக்காக பச்சைநிற வழுவழுப்பான எண்ணெய் வகைகள் பெரிய போத்தல்களில் அடுக்கப்பட்டிருக்கும். அந்தப் பெரிய வீடும், சுனிலுக்குத்தான் சேருமாம், மற்றப் பேரப்பிள்ளைகள் சொல்வார்கள். அதில் அழுக்காறு இருந்ததை அவன் அவதானித்திருக்கிறான். சுனிலின் தகப்பனார் ஒரு விபத்தில் இறந்து விட்டாராம். கிழவரின் அனுதாப அலை சுனிலின் மேல்தானாம். அந்தப் பகுதி இப்போது பெரிதும் மாறுபட்டிருக்கும். வேறு பல வீடுகளும், கிளை ஒழுங்கைகளும் அங்கு உருவாகி இருக்கும். வைத்தியர் இறந்திருப்பார். பேரப்பிள்ளைகள் எல்லோரும் உத்தியோகம் பார்ப்பார்கள். வைத்தியசாலை கைவிடப் பட்டிருக்கும். சுனில் பெரிய வீட்டில் பிள்ளை குட்டிகளுடன் இருப்பான்.



சுனில் பலமுறை அவனைக் கிழவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். "ஆ! புத்தா" இந்த இரண்டு சொற்களுமே கிழவரிடமிருந்து அவனை நோக்கி வரும். கிழவரிடம் வைத்தியம் செய்ய தூர இடங்களிலிருந்து எல்லோரும் வருவார்கள். ஓய்வே இல்லாமல் இருப்பார் வைத்தியர்.

ஒரு வருடத்திற்கு முன் அவனது ஊரின் பழைய விதானையார் கால் முறிவுக்கு வைத்தியம் செய்ய அங்கு வந்திருந்தார். எப்போதும் பூட்டியே வைத்திருக்கும் "கொமேட்" வைத்த மலசல கூடத்தை அவரது காலின் நிலைமை கருதி மாமி திறந்து விட்டாள். "இது என்ன ஊறுகாய்சாடிபோலிருக்கிறதே, இதற்குள்ளா கக்கூசுக்குப் போவது" என்றார் விதானையார். அவர் ஊருக்குச் சென்று பலகாலம் சென்றும் கூட ஞாயிற்றுக் கிழமைகளில் சீட்டு விளையாட வரும் தன் நண்பர்களிடம் எல்லாம் தொடர்ந்து மாமா இந்தச் சம்பவத்தை சொல்லுவார். ஆரம்பத்தில் எல்லோரும் சிரித்தார்கள். நாட்கள் செல்ல தானே ஜோக் சொல்லித் தானே சிரிப்பார் மாமா. மற்றவர்கள் இதனைப் பொருட்படுத்தாமல் சீட்டில் கவனம் செலுத்துவார்கள்.

சுனிலும் அவனும் எப்போதும் ஒன்றாகவே திரிவார்கள். சுனிலின் அம்மா ஒரு சில்லறைக் கடை வைத்திருந்தாள். தகப்பன் இல்லாததால் கண்டிப்புகள் அற்ற நிலையில், அவனது தாயார் எவ்வளவுதான் நாயாகப் படிக்கும்படி கத்தினாலும், அவை எதுவும் சுனிலின் காதுகளில் ஏறாது. எந்நேரமும் அந்தப் பெரிய வத்தையிலுள்ள "ஜம்பு" மரங்களிலோ 'அம்பரெல்லா" மரங்களிலோ அவன் இருப்பான். மற்ற வீட்டுப் பையன்கள் பின்னேரங்களில் மட்டுமே, ராணுவ வாகனம் வந்த அந்த ஒழுங்கைக்கு வருவார்கள்.

அவன் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியேவர முடியாது. மாமா கணித வாய்ப்பாடு கேட்டுக் கொண்டோ, ஆங்கிலச் சொற்களுக்கு 'ஸ்பெலிங்" சோதனை வைத்தபடியோ, இருப்பார். சனிக்கிழமைகளில், அந்தக் காலத்தில் கந்தோர்கள் அரைநேரமாக இயங்கிக் கொண்டிருந்தன. அவனை மாமா தனது கந்தோருக்குக் கூட்டிக் கொண்டு போய்விடுவார். சும்மா இருப்பதற்காக அல்ல. கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், கணக்குகள் செய்வதற்காகத் தான். பத்து மணிக்கு கந்தோரிலிருந்த கன்ரீனில் இரண்டு வடையும் பால் தேநீரும் மாமா வாங்கித் தருவார்.

'ஒப்சேவர்", 'சண்டே ரைம்ஸ்" என்பன மட்டுமே வந்து கொண்டிருந்த அவர்களது வீட்டுக்கு "கான்சாட்" என்ற ஆங்கிலப் புத்தகம் வரத்தொடங்கி இருந்தது. "சூரியகதிர்" ராணுவ நடவடிக்கையால் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்து வரும் வரை அந்தப் புத்தகங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்று அவனது மாமாவிடம், பல இடப்பெயர்வுகளின் மத்தியலும் பாதுகாப்பாக இருந்தது. அந்தக் காலங்களில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு பேசிய பேச்சுக்களைக் கொண்ட அந்தத் தொகுப்பை மாமாவும், சித்தப்பாவும் ஆழ்ந்து படித்து விவாதங்கள் செய்ததாக ஞாபகம். ராஜபக்ஷவோ அல்லது வேறு சிங்களவர்களோ வீட்டுக்குள் வந்தால் விவாதத்தை சட்டென முடித்து விடுவார்கள். மாமா "கான்சாட்' வாங்கிய காலத்திருந்து மாமாவுக்கும் ராஜபக்ஷவுக்கும் இடையே ஒரு திரைவிழுந்து விட்டதையும், இருவரும் பொய்யாகவே சிரிப்பதையும் அவன் அவதானித்திருக்கிறான். "பண்டாரநாயக்க" என்ற பெயர் வீட்டில் அடிக்கடி பேசப்பட ஆரம்பித்தது.

பின்னேரங்களில் ராஜபக்ஷ அடிக்கடி வீட்டுக்கு வருவார். அவரது வருகை வெள்ளிக்கிழமைகளில் தப்பாது. மாமி வெள்ளிக்கிழமைகளில் தவறாது தோசை சுடுவா. ராஜபக்ஷவுக்கு தோசை என்றால் அலாதியான ஆசை. சாப்பிட்டுவிட்டு நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

சுனிலும் அவனும் சேர்ந்து திரிவது பாடசாலை நாட்களில் அதிக சாத்தியமாவதில்லை. தவணைப் பரீட்சைகளில் நல்ல புள்ளிகள் பெற்றுவிட்டால் போதும். லீவில் படிபடி என்று மாமா தொந்தரவு செய்ய மாட்டார். இரவில் படித்தால் போதும். சுனிலும் அவனும் லீவு நாட்களில் ஒன்றாகவே திரிவார்கள். ஒழுங்கைக்குப் பக்கமாக ஒரு வாய்க்கால் ஓடியது. அதில் எந்த நேரமும் தண்ணீர் எங்கிருந்து வருகிறது என அறிய இருவரும் முற்பட்டாகள். போகப் போக பாதை மேடாகிப் போய்க் கொண்டிருந்தது. ஒரு மைல் போயிருப்பார்கள். ஒரு வீட்டின் பூந்தோட்டத்தில் "சீனியாஸ்' , "செவ்வந்தி" என பூமரங்கள் பூத்துச் சொரிந்து கொண்டிருந்தன. தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்பதை அறிய வந்தவர்கள் அதனை மறந்துவிட்டனர். வீட்டுக்"கேற்" திறந்தே கிடந்தது. இரு கைகளிலும் நிறைந்த பூமரங்களைப் பிடுங்கிக் கொண்டு, அவர்கள் ஓட்டம் பிடித்தனர். வேர்களில் நிறைந்த மண்கட்டிகளுடன் கூடிய பூமரங்களுடன் அவர்கள் ஓடுவதைப் பார்த்த பக்கத்துக் கடைக்காரர்களும், சிறிய வீட்டுவாசிகளும் அவர்களது ஓட்டத்தை வேடிக்கை பார்த்தனர். நல்லவேளையாக அவர்களை ஒருவரும் பிடித்துக் கொடுக்கவில்லை. "துவண்ட துவண்ட" எனக் குரல்கள் கேட்டன. பின்நாட்களில் அவனது வீட்டை அம்மாவை ஏமாற்றி அறுதியாக எழுதிக்கொண்ட அவனது ஊரின் பெரிய வீட்டுக்காரன் போன்றவனோ இவனும். ஏதோ ஒரு முரண்பாடு அயலவர்கட்கும், அந்த வீட்டுக்காரனுக்கும் இருந்ததால் அவர்கள் அன்று தப்பித்தார்கள்.

வாடிப் போய்விட்ட பூஞ்செடிகளுடன் வீடு வந்து சேர்ந்தார்கள். நட்ட எவையுமே திரும்பவும் பூக்கவில்லை. ஆணிவேர் அறுந்து விட்டது எனச் சுனில் சொன்னான்.

ஒரு முறை மட்டுமே சுனிலும் அவனும் சண்டையிட்டிருக்கிறார்கள். "ரஞ்சன்" நடித்த "மங்கம்மா சபதம்"த்தின் சிங்கள மொழியாக்கம் தான் "மாத்தளங்" - ஒரே வாள் சண்டைகள் நிறைந்த படம். வகுப்பில் எல்லாளன் - துட்டகாமினி யுத்தம் பற்றி சுனில் படித்திருக்கிறான் போலிருக்கிறது. ஒரு நாள் இரண்டு தடிகளை எடுத்தான். சுனில், தன்னை துட்டகாமினி என வரித்துக் கொண்டான். இவன் எல்லாளன். அவர்கள் தடிகளால் வாள்சண்டை செய்தனர். சண்டை விளையாட்டாக ஆரம்பித்து பின் சீரியஸாகப் போய்விட்டது. சூது செய்து தான் துட்டகா மினி, எல்லாளனை கொன்றதாகச் சொல்வார்கள். சுனில் அவனைக் கொல்லவில்லைத் தான். ஆனால் இந்தச் சண்டை அவர்களது மனதில் ஒருவகையான வேறுபாட்டை ஏற்படுத்தி விட்டது. சண்டை முற்றி வாக்குவாதச் சத்தம் கேட்டு, மாமி அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று மாமா வரும்வரை ஒரு அறையில் பூட்டி வைத்தாள்.

இது நடந்த அடுத்த நாளும் அவன் சுனிலுடன் சுற்றியபடியே தான் இருந்தான். அப்படித் திரிந்தாலும் கூட, சுனில் அவர்களுடையவன் அல்ல. அன்னியன் என்ற உணர்வு அந்தச் சண்டையின் பின் அவனுக்கு சுனில் பற்றி ஏற்பட்டிருந்தது.




"காலவெளி" சு.மகேந்திரனால் அண்மையில் வெளியிடப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் உள்ளடங்கிய ஒரு தொகுதி.

சு.மகேந்திரன் மன்னார் பாப்பாமோட்டை என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகிறார். இவரின் இலக்கியத் படைப்புகளின் தொகுப்பே 'காலவெளி' ஆகும். இவர் சிறந்த ஆங்கிலப் புலமையாளரும், மொழிபெயர்ப்பாளரும் கூட.

இவரது 'காலவெளி'த் தொகுதியில் 5 சிறுகதைகள், 16 கவிதைகள் உள்ளடக்கப்— பட்டுள்ளன. அத்துடன் இவரது மாமனாரான த.இராமநாதன் ஆங்கிலத்தில் 'எழுதிய உலகின் மிகப் பெரிய சென்சஸ்' என்ற சிறுகதையும் (இச்சிறுகதை ஏற்கெனவே சரிநிகரில் வெளிவந்திருக்கின்றது). சிவப்பு ரோஜாக்கள் என்ற கவிதையும் மொழி— பெயர்க்கப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

மகேந்திரனின் சிறுகதைகள் படைக்கும் ஆற்றல் சிறப்பானது. படைப்பின் நேர்த்தி, மொழியைக் கையாளும் திறன், பாத்திர வார்ப்புகளுக்கூடாக இயல்பாக எழுதப்படும் உணர்வுகள் இப்படிப் பல தளங்களில் இவரது சிறுகதைகள் சிறந்து விளங்குகின்றன.

அவரது கதைகள் யுத்த சூழ்நிலை பற்றியே அதிகம் பேசுகின்றன. யுத்தத்தின் அவலங்களையும், அந்தச் சூழ்நிலையின் மன அழுத்தங்களையும் சிறுதைகள் அழகாகவே பதிவு செய்கின்றன. என்றாலும் இவரின் படைப்புகளில் (அந்நியமான நண்பர்கள் சிறுகதையினைத் தவிர்ந்த மற்றைய சிறுகதைகளில்) பிரச்சார நெடி தெரிகின்றது. பிரச்சார நெடிகளைத் தவிர்த்துப் பார்த்தால் தரமான நல்ல சிறுகதைகள் தமிழ் இலக்கிய உலகிற்கு கிடைத்திருக்கும்.

உலகில் பல நல்ல எழுத்தாளர்களது படைப்புகள் அவர்கள் சார்ந்த அரசியல் காரணமாக அல்லது படைப்புகளில் காணப்படும் அவர்களின் அரசியல் காரணமாக புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுவதுண்டு. இதன் காரணமாக பல யுத்த சூழ்நிலையின் படைப்பாளிகள் அறியப்படாமலேயே போனார்கள். இந்த அபாயம் ஈழத்து படைப்பாளிகளுக்கும் உண்டு.

இவரது சிறுகதைகள் போல் இவரது கவிதைகள் சிறந்த நல்ல படைப்புகள் என்று சொல்ல முடியாது. பிரச்சாரக் கவிதைகளாகவும், எதையும் வலிந்து நியாயப்படுத்தும் கவிதைகளாகவும் காணப்படுகின்ற அதேவேளை சொற்களின் சிதறல்களாக பெரும்பாலான கவிதைகள் காணப்படுகின்றன.

'வேண்டாத புன்னகை', 'நகரம் மீட்கப்படும்' போன்ற கவிதைகள் நல்ல படைப்புகள் என்றாலும் இவற்றில் காணப்படும் பிரச்சாரமும் நியாயப்— படுத்தலும் இக்கவிதைகள் பலரால் கண்டு கொள்ளப்படாமல் போவதற்கு காரணங்களாகப் போய் விடுகின்றன.

எங்கள் தாயகத்தினை நேசிக்கும் எல்லோருக்கும் இந்நூல் சமர்ப்பணம் என்று தெரிவிக்கும் இவர் இன்னும் யுத்த சூழலினுள் அல்லல்படும் மனிதர்களுள் ஒருவராய் வாழ்ந்து வருகின்றார். இவர் இன்னும் நல்ல சிறுகதைகளைத் தருவார் என எதிர்பார்ப்போம்.

வாசகர்களுக்காக இவரின் தொகுப்பிலிருந்து அந்நியமான நண்பர்கள் எனும் கதையைத் தருகிறோம்.

ஆ – ர்

# சு. மகேந்திரன்

நல்லவேளை பெரிய சித்தப்பா போனகிழமை யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது ஒரு காலுடன் வந்தார். போகும் போது இரண்டு கால்களும் இருக்கவில்லை. புதுமையான வியாதி அவருக்கு. "கங்கரின்" வருத்தம். இலட்சத்தில் ஒருவருக்குத்தான் வருமாம். "சுலைமான்" ஆஸ்பத்திரியில் ஒப்பரேசன் நடந்தது. மாமியின் கழுத்திலிருந்த இரண்டு செயின்களில் ஒன்றைக் காணவில்லை.

சில நாட்களாக நிலைமை வழமையானதாக இல்லை எனத் தெரிந்தது. ஓட்டப் பந்தயங்கள் ஒழுங்கையில் நடந்தன. மாமி அவனைப் போக விடவில்லை. எல்லோரும் இடைவிட்டு நின்று ஓடுவதற்கு அந்த ஒழுங்கையில் இடம் இல்லை. சிலகாலமாக (முன்பெல்லாம் இல்லை) விளையாட்டுக்காகச் செய்வது போல், ஓடும் போது அவனை நெரித்துத் தள்ளுவது, கால் தடக்குப் போடுவது போன்றவை நடைபெறுகின்றன. ஓட்டப் பந்தயங்களை வேடிக்கை பார்க்கும் கிழவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும், முன்பு போல் அவனுடன் பழகுவதில்லை என்ற ஒரு ஐயப்பாடு அவனுக்கு. சமீபகாலமாக ஏற்பட்டிருந்தது. சென்றகிழமை அவன் வீழ்த்தப்பட்ட போது அந்தப் பெண்கள் சிரித்தார்கள். நொண்டியபடி வீடு போய்ச் சேர்ந்தான். முழங்காலில் சிராய்ப்பு ஏற்பட்டால் இலேசில் மாறாது. மாமி காயங்களுக்கான சர்வரோக நிவாரணியான பொரித்த எண்ணெய்யை அவனது கால்களுக்குப் போட்டு வருகிறாள். முறுகல் நிலைமாறினால், ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொள்ளலாம் என அவன் நினைத்தான்.

முந்தநாள், நிலைமை மேலும் மோசம் அடைந்தது. புறக்கோட்டையிலுள்ள தமிழ்க் கடைகள் எரிக்கப்பட்டதாக வேலையிலிருந்து வந்த மாமா சொன்னார். இருவரும் வியர்த்து விறுவிறுத்து வந்தனர். பார்க்கப் பாவமாக இருந்தது. தமிழர்களும், சும்மா இருக்கவில்லையாம் எண்ணெய்யைக் காச்சி ரவுடிகளின் முதுகில் ஊற்றினார்களாம். பஸ்களில் தலையை முகர்ந்து பார்த்து நல்லெண்ணெய் மணம் அடித்தால் தாக்குகிறார்களாம். (சிங்களவர்கள் தேங்காய் எண்ணெய் வைப்பவர்கள்) மாமாவும், சித்தாப்பாவும் 'யாட்லி வஸ்லின்' தலைக்கு வைப்பவர்கள். உத்தியோகம் பார்க்கும் பெரும்பாலான சிங்களவர்கள் போல், இருவரும் 'கிளீன் சேவ்' செய்பவர்கள் அது தமக்கு அனுகூலமாக இருந்தது எனப் பேச்சிக்கொண்டார்கள். பஸ்சில் தம்மையும் விசாரித்தார்களாம். இருவருக்கும் வாளிக்குரிய சிங்களச் சொல்லைப் பிழையின்றி உச்சரிக்கத் தெரிந்திருந்தது. நல்லவேளையாக தம்மை பௌத்தமத பாளிப் பாராயணங்களை ஒப்புவிக்கச் சொல்லவில்லை என்றார்கள். பலர் 'டயர்' போட்டு எரிக்கப்பட்டதாகப் பஸ்சில் பேசிக் கொண்டார்களாம். மாமா சொன்னார்.

நேற்று எல்லோரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தார்கள். சுனில், தோட்டத்தில் இருந்த மரமுந்திரிகை மரங்களில் ஏறி முந்திரிப் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கால்சட்டைப் பைகள் இரண்டிலும், முந்திரிகைக் கொட்டைகள் நிறைந்து அவை பிதுங்கிக் கொண்டிருந்தன. இனி, முந்திரிகைக் கொட்டைகளைச் சுட்டு பாலையும் தோலையும் நீக்கி உண்பான். வீட்டை விட்டு வெளியேறாமல் இருந்த அன்று அவனுக்கும் சுனிலுக்கும் இடைவெளி மிகவும் பெரியது என்ற எண்ணம் ஏற்பட்டது. அன்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தால் யாருமே பாடசாலைக்குச் செல்லவில்லை. சுனிலுக்கு அது ஒரு ஞாயிற்றுக்கிழமை போல் இருந்திருக்கும். இவனோ வீட்டைச் சிறைக்கூடமாக்கி உள்ளே இருந்தான். மாமா சிறு துயில்கொள்ளும் மத்தியான நேரங்களில், அவனை விளையாட அழைக்கத் தயங்கித் தயங்கி வீட்டுக்குவரும் சுனில், அன்று அவர்கள் வீட்டுப்பக்கம் வரவேயில்லை.

முந்தநாள் இரவிலிருந்து அவனுக்கு அந்த ரயில் பயணத்தின் நினைவுகள் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்துகொண்டே இருந்தன. அதில் தான் அவன் யாழ்ப்பாணதிலிருந்து கொழும்புக்கு வந்தான். ஏழு பேருடன் கூடப்பிறந்த அவனுக்கு மட்டும் தான் குடும்பத்தில் படிப்பு வரும் போலிருந்தது. படிப்புடன் கடுமையான குழப்படிக் காரனாகவும் அவன் இருந்தான். கண்டிப்புக்கார மாமனாருடன் இருந்தால் ட்ரான்னுக்கு வந்துவிடுவான் என அனுப்பி வைத்தனர் அவனது பெற்றோர்கள். நீராவியில் இயங்கும் அந்த ரயில் காலை ஆறு மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது. மாலை ஆறுமணிக்குத்தான் கொழும்புக்கு ரயில் வந்து சேர்ந்தது. வாழை இலையில் சுற்றப்பட்ட இடியப்பமும், 'உருளைக் கிழங்குப் பிரட்டல்' கறியும் அலாதியான சுவையுடையது தான்.

நிலைமையைப் பார்த்தால் எல்லோரும் ஊருக்குப் போவதைத் தவிர வேறு வழி இல்லைப் போலிருக்கிறது. தன்னுடன் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் படிக்கும் சக மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவன் நினைத்தான். மொரட்டுவைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக வீட்டில் கதைக்கின்றார்கள். முருகானந்தம் அங்கு தான் வசிக்கிறான். வகுப்பில் பக்கத்திலிருந்து கற்பவன். அவனது இணைபிரியா பள்ளி நண்பன். அவனுக்கு என்ன நடந்ததோ, இங்கு கூட பாதுகாப்பில்லை. ஒன்றும், இல்லாமல் சகஜமாக இருந்த காலத்திலேயே கிழவரது தோட்டத்துக்கு சற்று அப்பால் வாழ்ந்து வந்த முரடர்கள் போல் தோன்றும், அந்தச் சிங்களவர்களைப் பார்த்தாலே அவனுக்குப் பயமாக இருக்கும். அத்துடன் அயலில் உள்ளவர்களில் பலர் கிழவருடன் தீராத பகைமை கொண்டவர்கள். அவர்களும் கிழவரும் அரசியல் எதிரிகளாம்.

அவர்கள் இந்த இடத்திலிருந்து எப்படி ரயில் நிலையத்துக்கு போய் ஊருக்குப் போகப் போகிறார்கள். அதை நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது. போகும் வழியில் எப்படியும் அடித்துக் கொன்று விடுவார்கள். தப்பித் தவறி ரயில் நிலையத்தை அடைந்து விட்டாலும் கூட, யாழ்ப்பாணம் எங்கே? கொழும்பு எங்கே? ரயில் செல்லும் இடமெல்லாம் சிங்கள ஊர்கள். அவர்கள் தப்பவே முடியாது. இது முடிவு தான். அப்பா அனுப்பும் 'அம்புலி மாமா' புத்தகத்தில் வரும் கதைகளில் தேவதை ஒன்று வந்து அவர்களைக் காப்பாற்றினால் தான் உண்டு. எதற்கும் நாளைக் காலையில் தலையில் முழுகிவிட வேண்டும். நல்லெண்ணெய் மணம் போய்விடும். மாமாவுக்குத் தெரியாமல் வஸ்லின் வைக்கலாம். அல்லது மூலிகைகள் போட்டு கொதிக்க வைத்த மாமியின் தேங்காய் எண்ணெய்யை வைக்கலாம். சித்தப்பாவிடம் துருவித் துருவிக் கேள்விகள் கேட்பவன், அன்று பேசாமல் இருந்தான். அவர்களே என்ன செய்வது எனத் தெரியாது இருக்கும் இந்த நேரத்தில் கேள்விகள் கேட்டால் அடி கூட விழலாம். அம்மாவின் நினைவு அவனுக்கு அடிக்கடி வந்தது. இங்கு நடப்பது அவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். வழமையாக ஒன்பது மணிச் செய்தியை மட்டும் தவறாமல் கேட்கும் மாமா, நேற்று ரேடியோவின் பக்கதிலிலேயே கிடந்தார். மிகவும் மெல்லிய தொனியிலேயே ரேடியோ கலவரம் பற்றிய செய்திகளைக் கூறிக் கொண்டிருந்தது. ரேடியோவை பலமாக வைக்கக் கூடாதாம். பக்கத்தில் வசிக்கும் முரடர்களுக்கு கேட்டுவிடுமாம். அவர்கள் இங்கு இருப்பது முரடர்களுக்கு நன்கு தெரியும். மாமா கூறுவதும் சரிதான். சும்மா இருப்பவர்களை பலமான தொனியில் தமிழ் ஒலிபரப்புகளை வைப்பது உசுப்பியும் விடலாம். அம்மாவும் பெரிய சித்தப்பா வீட்டுக்குப் போய் ரேடியோ கேட்டுக் கொண்டிருப்பாள். நன்றாகப் பயந்து போயிருப்பாள். அவனை அம்மா கொழும்புக்கு அனுப்பி வைத்தபோது, "நான் சொல்வதைக் கேள். எந்தக் கஷ்டத்திலும் பிள்ளைகள் பெற்றோரிடம் இருக்க வேண்டும். " என சின்னம்மா கூறிக்கொண்டே இருந்தாள். இப்போது அம்மாவை ஏசியபடி இருப்பாள், சின்னம்மா.

நேற்று இரவு குண்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. "எட்மண்டன் தெருவில் வீடுகளை எரிக்கிறார்கள் போல் இருக்கிறது" என்றார் ராஜபக்ஷ. "லைற்றை அணைத்துவிட்டு இருங்கள். விடிந்ததும் ஏதாவது செய்யலாம்" எம்மைப் பற்றியும் தங்களது வீடு பற்றியும் கவலை வந்துவிட்டது அவருக்கு என்பது அவரின் பேச்சிலிருந்து தெரிந்தது. எட்டு வீடுகளின் நடுவே அவற்றில் எல்லாம் மின்விளக்குகள் பளிச்சென்று ஒளிர அவரது வீடு மட்டும் இருளில் அமிழ்ந்திருந்தது.

அன்று எல்லோரும் மாமாவின் அறையில் ஒன்றாகப் படுத்தனர். எல்லோரும் ஒன்றாக இருந்தால் பயப்பிராந்தி குறையும் என்ற உணர்வோ என்னவோ. அன்று மெழுவர்த்தி வெளிச்சத்தில் சோறு சாப்பிட்டார்கள். அவர்கள் அந்த வீட்டுக்கு வந்த காலத்திலிருந்து அன்று மட்டும் தான் தோசை சாப்பிட ராஜபக்ஷ வரவில்லை.

காலையில் ராஜபக்ஷ வந்தார். "மிஸ்ரர் அருநாச்சலம் ஐ மேட் ஓல் தி அரேஞ்மென்ற்ஸ் வித் கிரேட் டிபிக்கல்றி" என்றார். "தளபாடச் சாமான்கள் அப்படியே இருக்கட்டும். நாங்கள் பார்த்துக் கொள்வோம். பெறுமதியானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் ராணுவ வாகனம் வரும். வெள்ளவத்தைக் கோயிலை 'ரிபூயீஸ்காம்'பாக மாற்றி உள்ளார்கள். நேற்றிரவு எட்மண்டன் தெருவில் நான்கு ஐந்து போரைக் கொன்று விட்டார்கள். நீங்கள் இங்கிருப்பது பாதுகாப்பானதல்ல" அவர் அதற்குப் பின் கதைத்தது இந்த வகையில் இருந்தது. 'நீங்கள் இங்கு இருப்பது எங்கள் வீட்டுக்கும் பாதுகாப்பானது அல்ல'. ஆனால், அதை அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. பக்கத்திலிருக்கும் முரட்டு மனிதர்களைப் பற்றி மட்டும் கூறினார்.

சிறிது நேரத்தின் பின் ராணுவ வண்டி வந்தது. வண்டியின் பின் கதவை ஒரு ராணுவத்தான் திறந்து விட்டான். படாரென்ற சத்தத்துடன் அது விழுந்தது. எப்படி ஏறப்போகிறோம் என அவன் நினைத்தான். ஒருவன் மாமாவையும், சித்தப்பாவையும் துாக்கி வண்டிக்குள் விட்டான். அவனையும், மாமியையும், ராஜேஸ்வரியையும் மாமாவே துாக்கி வண்டிக்குள் விட்டார். நல்லவேளை அன்னியனான அந்த ராணுவத்தான் எங்கே மாமியையும், ராஜேஸ்வரியையும் கைதொட்டு துாக்கி எடுக்கப்போகிறானோ எனச் சடுதியாக ஆனால், இயல்பாகவே அவனுக்கு ஏற்பட்ட எண்ணம் நடைபெறவில்லை.

ராணுவ வண்டி தனது வேகத்தை அதிகரித்தது. வண்டிக்கும் அந்த அன்னியமான நண்பர்களுக்குமிடையே துாரம் அதிகரித்துக் கொண்டே போனது.


வெளிச்சம்: தை 1997

# கோவிந்தனைக் கொன்ற சிங்கள அதிகாரிக்கெதிராக நடந்த போராட்டம்!

## நினைவுக் குறிப்புகள்– 7

என்னுடைய பல்கலைக்கழகத்தின் முதல் ஆண்டுக் காலத்தில் நான் இன்னமும் சமசமாஜக் கட்சியின் விளிம்பு நிலையிலேயே இருந்தேன். கட்சியின் அரசியல் வகுப்புகளுக்குப்போவது, மூலோயா தோட்டத்தில் கொல்லப்பட்ட கோவிந்தனின் கொலைக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பணம் திரட்டுவது, மார்க்சிய இலக்கியங்களை - இப்போது ட்ரொட்ஸ்கிய இலக்கியங்களை - வாசிப்பது என்று எனது வேலைகள் அமைந்திருந்தன. பல்கலைக்கழகத்தில் இருந்த சமசமாஜக்கட்சிக் குழுவுடனான எனது தொடர்பு காரணமாக நான் அறிந்துகொண்ட பின்னர் கட்சித் தோழர் என்று நன்றாக தெரியவந்த ஒரு பிரசித்தமான நபர்தான் டிக்கி ஆட்டிக்கல. அவர் ஒரு சிறந்த பகிடிக்காரர். சமத்காரமாக பேசக்கூடியவர். அவருடைய பல கதைகள் திரும்பத் திரும்ப நினைவு கூரக்கூடியவை. மிகவும் சொகுசும் நேர்த்தியும் கொண்ட அதேவேளை பருமனும் குட்டையுமான, வாய்திறக்காத தன்மையும் வாய்ந்த ஒரு பல்லைக்கழக மாணவியைப் பற்றி அவர் இவ்வாறு கூறினார். "இவளைப் பார்க்கும் போது கோர்டன் தோட்டத்திலுள்ள விக்ரோறியா மகாராணியின் சிலைக்கு வெள்ளையடித்துவிட்டால் எப்படியிருக்குமோ அப்படி இருக்கிறாள் என்று தோன்றுகிறது" ட்ரொட்ஸ்கி ஸ்ராலினின் கையாள் ஒருவரால் மெக்சிக்கோவில் வைத்துக் கொல்லப்பட்ட போது, பல்கலைக்கழகத்தில் அப்போது மிகவும் தீவிர ஸ்ராலினிஸ்ட்டாக இருந்த சண்ணிடம் (சண்முகதாசன்) டிக்கி இப்படிக் கூறினார். "நீங்கள் ட்ரொட்ஸ்கியை கொல்வதற்கா அந்த சுத்தியலைப் பயன்படுத்தினீர்கள்? அரிவாள் ஜோர்ஜிய விவசாயிகளிடம் இருக்கிறது !" (சிலவேளை இந்த வசனத்துக்குப் பின்னால் பாட்டாளிகளால் ஸ்ராலின் தூக்கி எறியப்படுவார் என்ற ட்ரொட்ஸ்கியவாதிகளது எதிர்பார்ப்பு இருந்திருக்கக் கூடும். ஆனால் ஸ்ராலின், ட்ரொட்ஸ்கி இறந்தபின் தனது படுக்கையில் அமைதியாக இறக்கும்வரை 13வருட காலம் உயிர்வாழ்ந்தார். ஸ்ராலினுக்கு எதிரான புரட்சி அதன்பின்னர் வேறுவிதமான - ட்ரொட்ஸ்கியவாதிகள் சற்றும் எதிர்பார்க்காத வேறுவடிவத்தில் நடந்தேறியது!)

டிக்கியின் பகிடிகள் அவரது உரையாடல்களுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அவர் ஒரு தட்வை பல்கலைக்கழக மாணவர்களது சஞ்சிகையில் ஒரு அருமையான வசைப்பாடல் ஒன்றை எழுதினார். சொலமன் பண்டாரநாயக்காவின் 'நினைவில் நிற்கும் நேற்றைகள்' பற்றிய அவ்வசைப்பாடல் சொலமன் ஹொரகொல்லவிலுள்ள 'நீல அறையில்' யுத்தம் வெடித்ததற்கான சந்தோசத்தை மன்னருக்கு வெளிப்படுத்தும் விதத்தில் 'சொனி' அருந்திக் கொண்டிருந்தார்' என்று முடிகிறது. முன்பு ஒருமுறை ஸ்பானிய சிவில் யுத்தத்தில் மார்ட்டிட் வீழ்ச்சியுற்றபோது வண-தந்தை பீற்றர் ஏ பிள்ளை அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களுடன், கத்தோலிக்க விடுதியில் பாசி-




**தலைமறைவு வாழ்க்கை**

றெஜி சிறிவர்த்தன

லோனா விதைகளும், தரகோனா வைனும் அருந்திக் கொண்டாடியதாக சொல்லப்படும் ஒரு தகவலுண்டு. டிக்கி இந்த விடயத்தை எடுத்துக் கொண்டார். திரும்பவும் பல்கலைக்கழக சஞ்சிகையில் எப்படி வேட்டன் பேர்க்கினதும் மெபிஸ்ரோபின்ஸி-னதும் மாணவர்கள் கூடி விதை-களையும் வைனையும் அருந்தியபின்,

"அவர்கள் நன்றி கூறினார்கள்: ஓ... பிராங்கோ உங்களை நினைவு கூர்கிறோம், ஓ ஷியோன்...
அவர்களது பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன.... எல்லா நல்ல போர் வீரர்களும் சொர்க்கத்திற்குப் போவார்களா!"

என்று எழுதினார்!

பின்னாளில் டிக்கிக்குப்பிறகு றோயல் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக நான் சேர்ந்தபோது றோயல் கல்லூரியில் இருந்த முழுச்சந்ததியுமே டிக்கியின் பேசும் முறையினையும், அவரது பாவனைகளையும் அப்படியே பின்பற்றுவதைக் கண்டேன். டிக்கி முரண்நகையான அவரது பகிடி-களுக்காக பரவலாகப் பேசப்பட்டார். அவரது மாணவர்களிள் ஒருவர் தான் பீலிக் டயஸ் (அப்போது அவர் அப்ப-டித்தான் அறியப்பட்டிருந்தார். அவரது பெயருக்குப் பின்னால் பண்டாரநாயக்க என்ற பெயர் இருப்பது அவர் அரசியலுக்கு வந்தபின் தான் தெரியவந்தது.) பீலிக்ஸ் தனது ஆசிரியர் பாடம் முடிந்து வகுப்பிலிருந்து வெளியேறும் போது அவருக்கு தலைகுனிந்து வணக்கம் தெரிவிக்கும் ஒரு பழக்கத்தைக் கொண்டிருந்தார். இந்தப் பழக்கம் டிக்கிக்கு எரிச்சல் ஊட்டி வந்தது. ஒரு நாள் அவர் சொன்னார்: "டயஸ் நீ குனிவதை ஒரு கனவான் குனிவதுபோல் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ என்னவோ, ஆனால், பார்த்தால் ஒரு சமையல்காரன் குனிவது போலத்தான் இருக்கிறது"

லங்கா சமசமஜாக் கட்சி மாணவர் குழுவைப் பொறுத்தவரை 1939இல் நடந்த நிகழ்வு யுத்தத்திற்கு நன்கொடையாக ரூபா 100/- சேகரிக்கப்பட்டதை எதிர்த்து நடந்த எதிர்ப்பு நடவடிக்கை நிகழ்வாகும். பல்கலைக்கழக மாணவர்களது நடவடிக்கைகளுக்காக உத்தி-யோகபூர்வமான அங்கீகரிக்கப்பட்ட 'கூட்டு மன்றம்' இதனை ஒழுங்கு செய்திருந்தது. பல்கலைக்கழகத்தின் பதில் தலைவராக இருந்த பேராசிரியர் பேக்மன் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை தடைசெய்திருந்தது பற்றி பிறிதோரிடத்தில் நான் விபரித்திருந்தேன். இந்த எதிர்ப்புக் கூட்ட நடவடிக்கை தடையையும் மீறி நடந்ததுடன், அது பேராசிரியருக்கும் அவரது மாணவர்களில் ஒருவரான எஸ்ட்மன் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சண்டை மூழ்வதற்கு காரணமாகவும் அமைந்தது. இந்த சம்பவம்பற்றி விளக்கியபின் நான் எழுதினேன். அது எஸ்ட்மனின் வாழ்வின் மிக உன்னதமான கணம். மேர்வின் - டி சில்வா லேக் ஹவுஸ் பத்திரிகை ஆசிரியர் குழு நிர்வாகப் பணிப்பாளர் என்ற முறையில் 1965 இல் பத்திரிகைச் சுதந்திரத்தை

**பீலிக்ஸ் தனது ஆசிரியர் பாடம் முடிந்து வகுப்பிலிருந்து வெளியேறும் போது அவருக்கு தலைகுனிந்து வணக்கம் தெரிவிக்கும் ஒரு பழக்கத்தைக் கொண்டிருந்தார். இந்தப் பழக்கம் டிக்கிக்கு எரிச்சல் ஊட்டி வந்தது. ஒரு நாள் அவர் சொன்னார்: "டயஸ் நீ குனிவதை ஒரு கனவான் குனிவதுபோல் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ என்னவோ, ஆனால், பார்த்தால் ஒரு சமையல்காரன் குனிவது போலத்தான் இருக்கிறது"**

⇨19

## சிறையிருந்து மடல்கள்

நெடிதுயர்ந்த சுவர்களின் மேலே
இரத்தச்சுவையறியக் கண்ணாடிச் சிற்பிகள்
கறள் படிந்த கம்பிகளின் - பின்னே
ஒளி தெரியக் கூசும் விழிகளுடன்
நான்

இடைக்கிடையேயடித்துக் கொள்ளும்
இதயத்துடிப்பில் மட்டும் இறக்காதிருக்கின்றேன்.

எத்தனை நாட்களின் முன்னேயென
எனக்குத் தெரியாது.

எனினும், அன்று நான்
வாழ்க்கையுடன் ஒப்பந்தம்
வாழ்வதற்காய் செய்துகொண்டேன்

அதைத்தான் அவர்கள்
ஆயுதம் தரித்தல் என்றார்கள்.

மெல்ல இருள் பிரியக்குயில் கூவும்,
டாண் என ஒலியெழுப்பும் தெருக்கோயில் மணி -
மண் வீட்டில் திடுக்கிட்டுப் பிரியும் எந்தையும் தாயும்...

அம்மா என்றழைக்கும்
கொல்லைப்புறப் பசு -
இன்னும் ஒளி தரவிரும்பும் இராக்கால விளக்கு....

சல சலத்தோடும் அருவியிற் கடன் கழித்து
ஓடியும் நடந்தும் ஒரு சேரப் படித்தும்
கூடி விளையாடிக்குரும்பட்டித்தேர் செய்து
அவனை அடித்து இவனை உதைத்து
நான் அழுது...

அம்மா.....
எதையிழந்தோம் நாம்!

ஒரு சேர அணிவகுக்கும் இராணுவ புட்சுகளின்
ஒலியடங்கிய பொழுதெல்லாம்
எதையிழந்தோம் நாம்!

சுட்டுத் தெருவிடையே சாம்பலாகிப் போகவும்
வெட்டிப் பொதியிட்டு வாவியிடை வீசவும்
பிறந்தவரா நாம்!

மேய்ப்பருக்கு மட்டுமே
கவைக் கோலைக் கொடுத்த ஆண்டவரே.......
செம்மறி ஆடுகளா நாம்!

நான் வாழ்வதற்காய் ஆசை கொண்டேன்
வாழ்வுடன் ஒப்பந்தம் செய்தேன் -
ஆதலினால், ஆயுதம் தரித்து எமை
அழிப்பவர்க்காய்க் காத்திருக்கும்
வாழ்வதற்காய் ஒப்பந்தம்....

கல்லுப் புத்தரின் முன்னே வெள்ளை
மலர்கள் தூவி - மேய்ப்பர்களே....
மெல்லிய ஒலியிலேனும் சத்தியம் செய்யுங்கள்....
எங்களைக் கொல்லவில்லையென்று.

ஆண்களின் குறியில் ஐஸ்கட்டி வைத்தும்
பெண்களின் யோனியுள் கைக்குண்டு பொருத்தியும்
சாதனை செய்யவில்லையென்று.....

விழிகளைப் பற்களை நகங்களை
உயிரினைப் பிடிங்கியெறியவில்லையென்று.....

எங்களின் இறைச்சி உங்களின் நாய்களுக்கென
ஓலமிடவில்லையென்று.....

வாழ்வதற்காய் - நான் ஆயுதம் தரித்தல்
வழக்கும் மன்றில் தவறாகலாம்...

எனினும்,

இருள் பிரியும் ஒளி தெறிக்கும்
ஒரு காலைப் பொழுதில் - எம்மவர்
ஒருசேர வாழ்வுடன்
ஒப்பந்தம் செயவர்

சிலவேளை அன்று

உங்களின் உதிரத்தினால்
எங்களின் சுதந்திரம் எழுதப்படும்.

- சஞ்சுதன்
15 நவம்பர் 2000

தமிழ் நாட்டில் இருப்பது போல் குழுவாதங்களும், அதையொட்டி வாழும் புத்திஜீவித்தனங்களும் இலங்கையில் இல்லையென்றாலும், இதற்கு வட்டியும், குட்டியுமாகச் சேர்த்து ஈழத்தவர் புலம்பெயர்ந்து வாழும் இடங்களிலெல்லாம் இதன் கடைவிரிப்பும் கழைக்கூத்துமே அதிகம் எனலாம்.

மாதிரிக்கு பிரான்சிலிருந்து வெளிவரும் எக்ஸில், சமர், உயிர்நிழல் போன்ற சஞ்சிகைகளின் பக்கங்களைத் தட்டினால் இந்த புத்திஜீவித்தனங் காட்டலில் அவர்கள் தம் பொழுதைப் போக்கடிப்பதைக் காணலாம். 'பி.றயாகரன் அவர்களின் பிரிவாற்றாமை குறித்த நினைவுக் கல்வெட்டு' என்ற தலைப்பில் வெளியான ஒரு (பாடல்?) 'கவிதை' இத்தகைய வியர்த்தனங்களுக்கு நல்ல உதாரணம். இதற்கெல்லாம் காரணம் என்ன? ஓர் முதிர்ந்த எழுத்தாளர் இது பற்றிக் கூறியபோது "எவ்வாறு இயங்க வேண்டும்' என்பதைக் கற்றுக்கொள்ள முடியாத கருத்தியல் வறுமை. இன்னும் தாம் புதிதாக அண்மையில்தான் கற்றறிருந்ததைக் காட்ட வேண்டுமென்ற ஆரம்பகாலப் புத்திஜீவித்தனம். இதுதான் இந்தப் புலம்பெயர்ந்த குழுக்களின் நோய்" என்றார்.

இத்தகைய சூழலில் நிலவும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் இருந்து வந்த எழுத்தாளர் நா. கண்ணனைச் சந்தித்த போது எனக்கு அது வித்தியாசமான அனுபவமாகவே இருந்தது. ஜேர்மனியிலிருந்து வந்திருந்த அவர் இப்பின்னணிகளில் இருந்து விடுபட்டவராய், கிழக்கிற்கும், மேற்கிற்கும் பாலம் அமைப்பவராய் காணப்பட்டார். அவரிடம் நான் எனது 'நோயில் இருத்தல்' நூலைக் கொடுத்தபோது அவர் அதற்குப் பதிலாக தனது 'உதிர் இலைகாலம்' சிறுகதைத் தொகுப்பைத் தந்தார்.

"உங்கள் நாட்டில் தமிழ் இலக்கிச் சூழல் எப்படி?" என்று கேட்டபோது "மிகவும் கஷ்டமான நிலைதான்" என்ற அர்த்தப்பட அவர் கூறியது நான் மேலே குறிப்பிட்ட குழுவாதங்களைப் பற்றியதாகத்தான் இருக்கலாம். கண்ணன் தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர். புலம்பெயர்ந்து தற்போது ஜேர்மனியில் வசிப்பவர். அவரது நினைவு, தமிழ் இனி மாநாட்டில் என்னைக் கவர்ந்த உதிரியான ஆனால், ஆழமான பார்வையுடைய மேலும் சில தமிழக எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆகியோரால் என்முன் நிறுத்தியது. 'பெண்ட்' பண்ணிய 'நிகழ்' சஞ்சிகைத் தொகுப்பை என்னிடம் தந்து காலத்தில் மிக நெருங்கிப் பழகியவர். இப்போதும் அவரில் மிக விசுவாசமுடைய அன்புப் பிறவி. தமிழ் இனி மாநாட்டின் சில அலுவல்களை முன்னின்று கவனித்துக் கொண்டிருந்த கவிஞர் சுபிச்செல்வன், நவீன



கவிதைப் பற்றி ஆழமான பார்வையுடைய கவிஞர் யுவன், 'ஒரு கிராமத்து நதி" கவிதைத் தொகுதியை என்னிடம் தந்து அன்புகாட்டிய கவிஞர் சிற்பி ஆகியோர் என்று பலர் நினைவுக்கு வந்தனர்.

கவிஞர் சிற்பியை நினைத்ததும் அவர் லண்டனுக்கு 1997ல் வந்தபோது அங்கு அப்போது நானும் நின்றதும், சிற்பியின் தலைமையில் பத்மநாப ஐயர் கவிதை பற்றிய கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியதும் நினைவுக்கு வந்தது.

தமிழ் இனி 2000 மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னரும் இத்தகையதொரு கலந்துரையாடல் நிகழ்ந்ததும் என் நினைவுக்கு வந்தது. 'குமுதம்' சஞ்சிகையில் வேலைசெய்யும் 'தளவாய்' என்று செல்லமாக அழைக்கப்படும் இளைஞனின் ஏற்பாட்டில் (28ஒகஸ்டில்) இடம்பெற்றது. இது சுந்தரராமசாமியின் ஹோட்டல் அறையில் அவரின் தலைமையில் இடம்பெற்றது.

அதில் சுந்தரராமசாமி அவர்கள் குறிப்பிட்டவை நான் தற்போது கவிதை பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கு சார்பானதாகவே இருந்தது. மஹாகவி 'அகலிகை' என்ற தலைப்பில் கவிதை எழுதியுள்ளார். 'சாபவிமோசனம்' என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் இதே அகலிகைக் கதையைச் சிறுகதையாக எழுதியுள்ளார். ஆனால், இவ்விரு வெவ்வேறு உருவங்களிலும் (ஊடகங்கள்) கவிதை பரிணமிப்பதை நான் காண்கின்றேன். அப்படியானால், கவிதை என்பது அது எழுதப்படும் ஊடகங்களிலோ . உருவகங்களிலோ தங்கியிருக்கவில்லை என்பதே தெளிவு. அது எல்லா இலக்கிய வகைகளையும் நிமிர்வுறச் செய்யும் ஊட்டப்பொருளா? இவ்வாறு கலந்துரையாடலில் நான் குறிப்பிட்டேன்.

கவிஞர் சேரன், ஔவை, சுபிச்செல்வன், நட்சத்திரன் செவ்விந்தியன், யுவன், மு.பொ. ஆகியோர் அதில் கலந்துகொண்டனர்.

அதில் சுந்தரராமசாமி அவர்கள் குறிப்பிட்டவை நான் தற்போது கவிதைபற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்கு சார்பானதாகவே இருந்தது. மஹாகவி 'அகலிகை' என்ற தலைப்பில் கவிதை எழுதியுள்ளார். 'சாபவிமோசனம்' என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் இதே அகலிகைக் கதையைச் சிறுகதையாக எழுதியுள்ளார். ஆனால், இவ்விரு வெவ்வேறு உருவங்களிலும் (ஊடகங்கள்) கவிதை பரிணமிப்பதை நான் காண்கின்றேன். அப்படியானால், கவிதை என்பது அது எழுதப்படும் ஊடகங்களிலோ உருவகங்களிலோ தங்கியிருக்கவில்லை என்பதே தெளிவு. அது எல்லா இலக்கிய வகைகளையும் நிமிர்வுறச் செய்யும் ஊட்டப்பொருளா? இவ்வாறு கலந்துரையாடலில் நான் குறிப்பிட்டேன். இங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் சேரனின் கவிதைபற்றி நான் குறிப்பிடுகையில், அவரது பல கவிதைகள் இன்று தமிழ்த்தேசிய போராட்டஙகளை அதில் ஈடுபடும் அமைப்பின் சில போதாத்தன்மைகளால் எதிர்மறையான கோணத்தில் வைத்துப்பார்க்கிறது. இக்குறைபாடுகள் நிலையானவை அல்ல. ஆகவே, எதிர்காலத்தில் தமிழ்த்தேசியம் ஒன்று உருவாகும் பட்சத்தில் அவரது கவிதைகள் அவருக்கே எதிராகத் திரும்பலாம் என்றேன். கவிதை பற்றிய கலந்துராயாடல் பல வகையில் சிந்திக்க வைப்பதாக இருந்தது.

இம்மாதிரியான கவிதை பற்றிய கலந்துரையாடல் இரண்டாம் நாள் கைலாசபதி அரங்கில் நிகழ்ச்சி நிரலில் இல்லாத ஒன்றாக ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கும் சுந்தரராமசாமியே தலைமை தாங்கினார். அக்கலந்துரையாடலில் சேரன், மாலதி, சு.வி. சுபிச்செல்வன், சிற்பி ஆகியோர் கலந்துகொண்டனர்.

000

## ஓர நிகழ்வுகள்-7

தமிழ் இனி 2000 மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது.

- மு.பொ.





நான் தமிழ் இனி 2000 விழாவின்போது சந்தித்த தமிழகத்தைச் சேர்ந்த இருவர் என் நினைவில் தொடர்ந்து மாறி மாறி இடம்பெற்றுக்கொண்டே இருந்தனர். ஒருவர் புத்தக வெளியீட்டாளர். இவர் ஹோட்டல் அட்லாண்ரிற்கு முன்னால் தனது புத்தக விற்பனை Stall ஒன்றை போட்டிருந்தார். 'மயிர் எரித்துக் கரியகுமா?" என்று தனது புத்தக வியாபாரம் பற்றிக் கேலியாகச் சொன்ன இவர் "புதுயுகம் பிறக்கிறது" என்ற சஞ்சிகையை வெளியிட்டவர் அவரோடு பரிமாறிக்கொண்ட கருத்துக்கள் என்றும் மறக்க முடியாதவை.

அடுத்தவர் திருவனந்த புரத்தைச் சேர்ந்த ஹியூபேர்ட் என்ற இளைஞர். இவரிடம் இருந்த ஆத்ம விசாரம் என்னைப் பிரமிக்க வைத்தது. அவருக்கு பின்வருமாறு அறிமுகமானேன். தன்னை யார் என்று அறிகிற வேலையில் ஈடுபடுபவன்தான் உலகிலே பெரிய Creative வேலை செய்கிறான். இவனிடத்தில் பிராமணன் - தலித் என்ற சண்டைகள் எழப்போவதில்லை. காரணம் இவர் பார்வையில் தன்னை அறியாதவர்கள் யாவரும் தலித்துக்களே"

இவை நீங்கலாக ஓர நிகழ்வுகள் என்ற பேருக்கு ஏற்ற வகையில் உண்மையாகவே ஓரமாக நடந்த நிகழ்ச்சிகள் இரண்டு. ஒன்று ஓவியக் கண்காட்சி. இரண்டாவது நாடக அளிக்கை.

(அடுத்த இதழில் முடியும்)



உரையாடிய கலாநிதி கால சுப்பிரமணியம், இவர் தருமு சிவராமுவோடு கடைசிக்

# பத்து சிவகுமாரன்கள் தேவை!

கடந்த நவ.12ம்திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு கருத்துநிலை நூல் பற்றிய கலந்துரையாடல் பேராசிரியர் சந்திரசேகரன் தலைமையில் இடம் பெற்றது. பேராசிரியர் பத்மநாதன், சண்முகலிங்கம், எம்.ஏ.நுஃமான், யோதிலிங்கம், எஸ்.கே.விக்னேஸ்வரன் ஆகியோர் தமது விமர்சனங்களை முன்வைத்ததோடு பலரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

தலைமைதாங்கிய பேராசிரியர் சந்திரசேகரன் அவர்களுக்கு உற்சாகம் அதிகரித்துவிட அவர் கூட்ட நேரத்தின் பெரும்பகுதியை தனது உரைக்கு எடுத்துக் கொண்டு விட்டார். அடுத்து வந்த பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆழமான புலமையாளர்கள் உருவாகி வரும் போக்கு ஒழிந்து வருவதாக கவலைப்பட்டு நீண்ட நேரம் உரையாற்றினார். பேராசிரியர் பத்மநாதன் அவர்களது பேச்சில் பல்கலைக்கழகங்கள் 'வித்துவப் புலமை' யின் வறுமைக்கு காரணமான 'ஒருமொழிஅறிவு' பற்றி தன் பேச்சை நீட்டிவிட்டுச் சென்றது பின்னால் பேச வந்தோருக்கு நேரப் பற்றாக்குறையை ஏற்படுத்தி விட்டதான உணர்வை ஏற்படுத்தியது. சண்முகலிங்கம் அவர்கள் தமது உரையில் பேராசிரியர் சிவத்தம்பியின் ஆய்வு முறையில் ஒரு சார்புத்தன்மை பிற்காலங்களில் ஏற்படுவதை அவரது கட்டுரைகள் காட்டுகின்றன என்று தெரிவித்தார். சிவத்தம்பி அவர்களது கட்டுரைகள் விளங்காமைக்கு காரணம் அவர் ஆழமான ஆய்வுகட்கு அவசியமான கலைச்சொற்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றியும் விளக்கிச் செல்வதனால் ஏற்படுகின்றது என்று குறிப்பிட்டு, இந்த விடயங்கள் பற்றி எழுத எம்மிடையே யாரும் இல்லை என்று குறிப்பிட்டார். தமிழ் இலக்கிய திறனாய்வு மற்றும் கலாசார, பண்பாடுகளை மொழியாக்கம் செய்வதில் கே.எஸ்.சிவகுமாரன் தனது பங்கை ஆற்றி வருவதும் கே.எஸ்.சிவகுமாரன்களைப் போன்று பத்து சிவகுமாரன்கள் தோன்றி இச்சிக்கலைப் போக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சண்முகலிங்கம், எம்.ஏ.நுஃமான், சி.அ.யோதிலிங்கம், என்.கே.விக்னேஸ்வரன் ஆகியோர் சிவத்தம்பி அவர்களது நூல் தொடர்பாக குறிப்பிட்ட கருத்துக்கள் தொடர்பாகவும் இறுதியில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பதிலுரை ஆற்றினார்.

இந்த நூல் தொடும் விடயம் தொடர்பாக ஒரு நூலுக்கான நோக்குடன் எழுதப்படவில்லை என்பதால் அதில் இயல்பாகவே வரக்கூடிய குறைகளுடன், விமர்சனங்கள் குறிப்பிட்ட விடயங்களையும் தான் கணக்கில் எடுத்துள்ளதாகவும், இவற்றில் ஒரு சில விடயம் தொடர்பாக விரைவில் வெளிவரவுள்ள நூல்களிரண்டில் விரிவாக எழுதியுள்ளதாகவும் குறிப்பிட்டார். தனது வாழ்வில் 30க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டிருந்தும் இதுவரை எந்த நூலுக்கும் இல்லாத விதத்தில் குமரன் வெளியீட்டகத்தின் இந்த நூலுக்கு இப்படி ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது தனக்கு மிக மகிழ்வூட்டுகிறது என்றும் தெரிவித்தார்.

குறிப்பு: இக்கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரைகளில் ஒன்றான சி.அ.யோதிலிங்கத்தின் கட்டுரை அடுத்த இதழில் வெளியாகும்.

# நூற்குறிப்பு

~ வேலோன்

எழுபதுகளில் எமது நாட்டில் ஏற்பட்ட சமூக, அரசியல் மாற்றங்களின் தாக்கங்களால் வேறுபட்ட பிரதேசங்களிலிருந்தும் வீறுகொண்டு பலர் புனைகதைத் துறையில் பிரவேசித்தனர். புதிய பரிமாணத்தை எட்டிய படைப்பிலக்கியத்திறன் கொண்டவர்களாக பட்டியலிடத்தக்க சட்டநாதன், குப்பிளான் ஐ.சண்முகன், சாந்தன், அ.யேசுராசா, நந்தினி சேவியர், உமா வரதராசன், எஸ்.எல்.எம். ஹனிபா, வல்லை.ந.அனந்தராஜ், போன்றவர்கள் தமது அனுபவங்களின் கலை நேர்த்தி மிக்க வெளிப்பாடுகளை வெளிக்கொணர ஆரம்பித்தனர். தேசியப் பத்திரிகைகளை விட மல்லிகை, வசந்தம், சுடர், திசை போன்றவையே இத்தகையோரது வருகைக்கு களமமைத்துக் கொடுத்தன.

எண்பதுகளில் ஈழத்து இலக்கியப் பரப்பிலே அரசியல் சார்ந்த படைப்புகள் முனைப்புப் பெற மேற்படி கதைஞர்கள் வழியாகக் கூர்ப்படைந்தவர்களே கால்கோலிட்டனர் எனலாம்.

இதே காலகட்டத்தில் காதல் மற்றும் காம உணர்வுகளைத் தமது புதுமுக காலக் கதைகளின் கருப்பொருளாக்கி, காலப் போக்கில் சமுதாய முற்போக்கு நடவடிக்கைகளைத் துாண்டத்தக்க வகையில் கதைகளை நகர்த்தி தமது அனுபவங்களை இயல்புடனும், உயிர்ப்புடனும், உணர்ச்சி அன்னியோன்னியத்துடனும் சித்திரிப்பதில் கரிசனை கொண்டவர்களாக இன்னொரு சாரார் விளங்கினர். இத்தகையவர்களுள் ஒருவராக இனங்காணப்பட்ட அன்ரன் செல்வக்குமார் கடந்த கால்நூற்றாண்டு காலங்களாகத் தானெழுதிய அறுபது சிறுகதைகளுள் பன்னிரண்டினைத் தொகுத்து "சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்" எனும் நூலாக தற்போது வெளிக்கொணர்ந்துள்ளார்.

> **சமுதாயத் தோப்பில் சாய்ந்த தென்னைகள்**
> சிறுகதைத் தொகுதி
>
> ஆசிரியர்
> செல்வகுமார்
>
> வெளியீடு:
> சிந்தியா வெளியிட்டாளர்கள்
> புத்தளம்
>
> விலை: 125.000

செல்வக்குமாரிடம் கதை சொல்லும் ஆற்றல் பழுதின்றி இருக்கின்றது என்பதற்கு இத்தொகுதியில் இடம்பெற்ற "சொந்தமண்", "கோடுகளைத் தாண்டாத கோலங்கள்" போன்ற கதைகள் சாட்சிகளாக அமைகின்றன.

விடுமுறையைக் கழிப்பதற்காக லண்டனிலிருந்து தன்மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் தான் பிறந்த மண்ணுக்கு வரும் அவன், அங்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்ற "சொந்தமண்" கதையானது வாசகரினுள் பல சாதகமான கேள்விகளை எழுப்பி அதிக

## காத்திரமான படைப்புகள் அடுத்த தொகுதியை அணிசெய்ய வேண்டும்!

அழுத்தத்தையும் செல்வாக்கினையும் பெற




முனைகின்றது.

மேய்ச்சலுக்குப் போன மாடுகள் தெருப் புழுதியைக் கிழப்பிக் கொண்டு போயின. அதன் பின்னால் ஒரு சிறுவன் மாடு போட்ட சாணியை கையால் அள்ளிக் கடகத்துள் போடுவதைப் பார்த்த அவனது பிள்ளைகள் அதிர்ந்து போய் "ஓ வட் எ ஹெல்... வைகாண்ட் ஹீ வெயர் க்ளவுஸ்" என்று கேட்ட கேள்வி அம்மண்ணில் இருபது ஆண்டுகளாகப் புரண்டு உருண்டு விளையாடிப் பொழுது போக்கித் திரிந்த அவனுக்கு வேதனையைக் கொடுக்கின்றது.

அந்நிய தேசம் சென்று நிரந்தர வதிவிட அனுமதி கிடைத்த பின்பும் சொந்த மண்ணை நேசித்த இரண்டக நிலையில் வாழும் முன்னைய தலைமுறையினையும் சொந்த மண்ணிலேயே தரித்து நிற்க விரும்பாத புதிய தலைமுறையினையும் இக்கதையில் தெளிந்த ஓவியமாக சித்திரித்துள்ளார் செல்வக்குமார். அனுபவ உலகின் தீவிரமும், வெளிப்படுத்தும் முறைமையும் முனைப்படைந்து, புலம் பெயர்ந்த மனிதனின் வாழ்வில் ஏற்படும் தலைமுறை மற்றும் கலாசார மாற்றமானது உணர்வுக் குறியீடாக இங்கு பதிவாகியுள்ளது.

இதுபோலவே முஸ்லிம் சமுதாயத்துக்கிடையில் வாழ்ந்து அவர்களோடு பழகியதில் செல்வக்குமார் எழுதிய 'கோடுகளைத் தாண்டா கோலங்கள்" என்பதுவும் கணிப்புகள் வரும் கதையாகத் திகழ்கின்றது.

தன்னைக் காதலித்த நிஷாம், அவனுடன் சவூதியில் வேலை செய்த கொழும்பு நண்பனின் சகோதரியையும் சொத்துக்களையும் பெற்றுக் கொண்டு அன்றிரவு பிரான்ஸ் பயணமாகின்றான் என்ற செய்தி பௌசிகாவின் காதுகளுக்கும் எட்டுகிறது.

'சலிம் மாமா! 'காவின்" எழுத வந்த உதுமாலெப்பையிடம் சொல்லி நிஷாம் பெயருக்கு யாசீன் ஓதச் சொல்லுங்க" என்றாள் நிதானமாக, போன்ற வரிகள் படிமங்கள், குறியீடுகள் மூலம் கதை சொல்லும் முறைமையில் செல்வக்ருமாருக்கு உள்ள ஈடுபாட்டினை உதாரணப்படுத்தத் தக்கனவாய் அமைகின்றன.

ஆனாலும் புனைகதை இலக்கியப் போக்கின் உணர்திறன் முறைமையில் முக்கிய மாற்றம் நிகழ்ந்த காலகட்டமான கடந்த கால் நூற்றாண்டினை ஊடறுத்து வரும் இச்சிறுகதைத் தொகுதியில் இன்றைய போர்க்காலத் தன்மைகள் ஒருகதையிலாவது பதிவு செய்யப்படாததும், நூலின் அமைப்பும், அட்டைப்படமும் அவற்றிற்கோர் அந்தஸ்தினைக் கொடுக்கின்ற இக்காலகட்டத்தில் அதற்கு மறுதலையாக இந்நூலினைப் பொறுத்த வரையில் அவை அமைந்திருப்பதுவும் சிறுகதைத் தோப்பில் இத்தொகுப்பினை இந்த நிமிடம் வரை "சாய்ந்த தென்னையாகவே" பேண வைத்துவிடுகின்றன.

உன்னத இலக்கியங்களாவன ஆத்மார்த்த தளத்தில் வேர்கொள்பவையாக அமைக்கின்றன. அந்த ஆத்மார்த்த தளத்தை இனங்கண்டு அதில் கட்டியெழுப்பப்படும் இலக்கியமே நூற்றாண்டு கடந்தும் பேசப்படுவதாய் அமைகின்றது என்பதை செல்வக்குமார் போன்றோர் கவனத்தில் கொள்வது நன்மை பயக்க வல்லது.

அந்த வகையில் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கொண்டு காத்திரத்துடன் இளவாலையூர் அன்ரன் செல்வக்குமார் சமகாலத்தில் படைக்கும் ஆக்கங்கள் அவரது அடுத்த தொகுதியை அணி செய்ய வேண்டும் என்ற கோகிலா மகேந்திரனின் கூற்றில் நூற்றுடன் நூறு வீதம் எனக்கும் உடன்பாடுண்டு.

○

## இவ்வார நிகழ்ச்சிகள்

### பாரதி

திரைப்படக் காட்சியும் **ஆய்வரங்கமும் கலந்துரையாடலும்**

*தலைமை:* டொக்டர்.எம்.கே.முருகானந்தன்

*ஆய்வு செய்வோர்:*
எஸ்.கே.விக்னேஸ்வரன்
எஸ்.சிவக்குமார்
சோ.தேவராஜா

*காலம்:* நவம்பர் 19, 2000 - ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:* பிற்பகல் 3.30 மணி

*இடம்:* பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்
இல: 58, தர்மராம வீதி,
கொழும்பு - 06
*ஒருங்கிணைப்பு:* விபவி கலாசார மையம்

### அங்கயன் கைலாசநாதனின் சிறுகதைகள்

மதிப்பீடு

*தலைமை:*
வ.இராசையா

*மதிப்பிடுவோர்:*
மு.பொன்னம்பலம்
எஸ்.சித்ராஞ்சன்
என்.காண்டீபன்
ரி.தேவகொளி

*காலம்:* நவ. 25 பி.பகல் 3.30 மணி

*இடம்:* பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்
இல: 58, தர்மராம வீதி,
கொழும்பு - 06

"எக்ஸில்"

வாசக/எழுத்தாளர்களுக்கு

பேரினவாத அரசிற்கெதிராய் எழுந்த தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது தமது சுயநிர்ணய உரிமையை வேண்டி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தது. காலப்போக்கில் தமிழ் பேசும் முஸ்லிம்களின் தனித்துவத்தை நிராகரிக்கும் பெருங் கதையாடலாய் இத்தமிழீழக் கோசம் மாறிப்போனது சோகமான வரலாறு.

அது மட்டுமன்றி வைச, வேளாள கருத்தியலால் கட்டுண்ட தமிழ்த் தேசியம், முஸ்லிம்களின் வாழ்வுரிமையையே கேள்விக்குள்ளாக்கி வடக்கிலிருந்து ஒரு லட்சம் முஸ்லிம்களை தென்னிலங்கை நோக்கி விரட்டியடித்ததோடு கிழக்கில் பாரிய படுகொலைகளை நிகழ்த்தி முஸ்லிம்களின் இருப்பையே அச்சுறுத்தியது. இந்நிலையில் இலங்கை முஸ்லிம்கள் தங்களை ஓர் தேசிய இனமாக அடையாளம் காண்பதோடு தங்கள் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்தி வருகின்றார்கள்.

மேற்படி இனசுத்திகரிப்பு நடத்தப்பட்டு இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தோடு பத்துவருடங்கள் கடந்து விட்டமையை நினைவில் நிறுத்தி எக்ஸிலின் அடுத்துவரும் 11வது இதழை "முஸ்லிம் தேசியத்தின் முழுமையான குரல்களாக" பதிவு செய்ய எண்ணுகிறது.

எனவே முஸ்லிம் தேசியமானது கடந்து வந்த பாதையின் வரலாற்று நிகழ்வுகள், சம்பவங்கள் ஆய்வு பார்வைகள், ஓவியங்கள், நிழல்படங்கள்... என்பவற்றோடு இலங்கை முஸ்லிம்களின் வாழ்நிலை பதிவுகளாக ஆக்க இலக்கியப் பிரதிகளையும், இலக்கிய விமர்சனங்களையும் உங்களிடமிருந்து வேண்டி நிற்கிறோம். டிசம்பர் இறுதி வாரத்திற்குள் அனைத்து விடயதானங்களும் எமக்குக் கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கப்படுவது விரும்பத்தக்கது.

தொடர்பு முகவரி:-
EXIL
B.P.204
92604 Asnieres Cedex
France
E-mail : exil-inba@infonie.fr

குறித்த எக்ஸிலின் 100 பக்கங்களும் முஸ்லிம் தேசியத்தின் முழுமையான குரல்களாக பதிவு செய்யப்பட வேண்டுமென்பதால் எமது தொடர் கட்டுரைகள், பத்திகள் யாவும் அடுத்த இதழில் தற்காலிகமாக இடை நிறுத்தப்படுகிறது என்பதை வாசகர்கட்கு முன்கூட்டியே அறியத்தருகிறோம்.

## தேவை:ஒரு கிழக்குத்...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் பேரினக்கட்சி தான் ஆட்சியமைக்கும் என்ற நிலைமை 1994ம் ஆண்டில் காணப்பட்டது. இத்தனித்துவம் அவர் பாராளுமன்றத்தில் முஸ்லிம் இனத்திற்காக துணிவுடன் குரல்கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கியது.

இத்தனைக்கும் வழிவகுத்தது தமது சொந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமைத்துவத்தை அவர் கொண்டிருந்தமை தான் என்றால் மிகையாகாது. அவ்வாறான தனித்துவத்தை ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ஃரப் போன்று அதே பிரதேசத்தில் பிறந்து வளர்ந்து பிரச்சினைகளைப் பூரணமாகப் புரிந்து கொண்ட ஒருவரால் தான் தொடர்ந்து பாதுகாக்க முடியும். அவ்வாறான தனித்துவத்தை உருவாக்கக்கூடிய முஸ்லிம் சனத்தொகைச் செறிவு கிழக்கு மாகாணத்தில் மட்டும் தான் உள்ளது. வேறு எந்தப்பிரதேசத்திலும் கிடையாது. இதுவே யதார்த்தமாகும்.

கிழக்கிலிருந்து தான் முஸ்லிம்களின் தலைமைத்துவம் உருவாக வேண்டுமென்ற மறைந்த எம்.எச்.எம். அஷ்ஃரப் அவர்களின் நிலைப்பாட்டை ஒரு பிரதேசவாதமாகக் கொண்டால் அது பெருந்தவறான முடிவாகும். ஏனெனில், தனித்து முஸ்லிம்களின் வாக்குகளினால் மட்டும் பாராளுமன்றப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்கூடிய முஸ்லிம் பெரும்பான்மைச் செறிவு வடக்குகிழக்கு மாகாணங்களில் மட்டுமே உண்டு என்பதைக் கடந்தகாலப் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், இன்று வடக்கில் அச்செறிவு கிடையாது. கிழக்கில் மட்டுமே அது தொடர்ந்து காணப்படுகின்றது. எனவே எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இலங்கை

முஸ்லிம்கட்கும் பேரின ஆளும் சமூகத்தினரால் அநியாயங்கள் நடைபெறும் போது அதனைத் தட்டிக் கேட்கக்கூடிய தைரியம் கிழக்கிலிருந்து உருவாகும் ஒரு தலைமையினாலேயே முடியும். வடகிழக்கிற்கு அப்பால் இருந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் பேரின சமூத்தினரின் வாக்கிலும், தங்கியிருப்பதனால் அவ்வாறான ஒரு தைரியத்தை அப்பகுதிகளில் இருந்து உருவாகும் தலைமைத்துவத்திற்கு வழங்க மாட்டாது.

முன்னர் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்ட சில உதாரணங்கள் இதனை ஊர்ஜிதப்படுத்தப் போதுமானவையாகும். எனவே, வட-கிழக்கில் வாழும் முஸ்லிம்களினதும், வட-கிழக்கிற்கு அப்பால் வாழ்ம் முஸ்லிம்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அவர்கட்கு எதிரான அநியாயங்கள் நிறுத்தப்படவேண்டுமானால், அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால், பூரணமாக முஸ்லிம்களினால் தெரிவு செய்யப்பட்ட தலைமை கிழக்கு மாகாணத்தில் இருந்து உருவாகுதல் வேண்டும் எனலாம்.

இந்த வகையில் ஜனாப் எம்.எச்.எம். அஷ்ஃரப் அவர்களினால் உருவாக்கப்பட்டு பேணிப்பாதுகாக்கப்பட்ட தனித்துவம் தொடர்ந்து நிலைக்க வேண்டுமானால், முஸ்லிம்களின் தலைமைத்துவம் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலேயே இருக்க வேண்டும். அதுவே ஜனாப் அஷ்ஃரப்பின் விருப்பமாக இருந்தது எனலாம். அவ்வாறான ஒருவரைத்தான் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அங்கீகரிக்கக்கூடும்.

ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ஃரப் அவர்களின் இந்த விருப்பத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் உயர் பீடம் எவ்வாறு நிறைவேற்றப் போகின்றது என்பதைத் தான் முஸ்லிம் சமூகம் எதிர்பார்ப்பதாக இருக்கக்கூடும். முஸ்லிம்களின் தலைமைத்துவத்தைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திலேயே பேணிப் பாதுகாப்பது ஜனாப் எம்.எச்.எம். அஷ்ஃரப் அவர்கட்குச் செய்யும் ஒரு நன்றிக் கடனாகவும் கொள்ள முடியும்.

இருந்தாலும், தற்போதைய சூழ்நிலையில் இதனை உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும் அது எதிர்வரும் மிகக் குறுகிய காலத்தினுள் அவ்வாறு தான் அமைய வேண்டும் எனலாம். அதாவது தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம்களின் தலைமைத்துவம் தற்காலிகமாக கிழக்கு மாகாணத்திற்கு வெளியே அமைந்தாலும், அல்லது அமையக் கூடிய சூழ்நிலை காணப்பட்டாலும், அது கிழக்கு மாகாணத்திற்கு தொடர்ந்து மாற்றப்படக் கூடிய அவசியமும், அவசரமும் முஸ்லிம்கட்கு உருவாகியே தீரும் எனலாம். அல்லாவிட்டால் இலங்கை முஸ்லிம்களின் இன அடையாளமே அழியக் கூடிய ஆபத்து உருவாகும்.

## கோவிந்தனைக் கொன்ற... ...

பாதுகாத்து நின்றதற்காக ஒரு தங்கப் பேனா பரிசை எஸ்ட்மன்ட் பெற்றுக் கொண்டதைப் பற்றி ஒரு பத்திரிகைப் பத்தியில் எழுதுகையில் எனது இக்குறிப்பினைக் கேள்விக்குள்ளாக்கியிருந்தார். என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அன்று பத்திரிகைச் சுதந்திரத்திற்காக அவர் குரல் கொடுத்தத்தில் வேறு சில அவருக்கு சாதகமான அம்சங்களும் இருந்தன. ஆனால், 1939 இல் பேராசிரியரை எதிர்த்து நின்ற இளமைத் துடிப்புடனும் இலட்சிய ஆர்வத்துடனும் இருந்த எஸ்ட்மனுக்கு தனிப்பட்ட ரீதியில் எதையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருந்திருக்கவில்லை.

மூலோயா தோட்டத்தில் நடந்த வேலை நிறுத்தமும் அப்போது நடந்த தொழிலாளி கோவிந்தனது கொலையும் ஒரு பாரிய அரசியல் பிரச்சினையாக மாறியது. முன்பு நடந்த பிரேஸ்கேடில் விவகாரம்போல இதுவும் லங்கா சமசமாஜக் கட்சிக்கு தேசிய அளவில் பாரிய முக்கியத்துவத்தை அளித்தது. மூலோயா பிரச்சினை இன அரசியலுக்கு மேலாக வர்க்கரீதியான அரசியல் பிரதானத்துவம் பெற்றிருந்ததை தெளிவாகக் காட்டியது. பல்கலைக்கழத்தில் அன்று வரை லங்கா சமசமாஜக் கட்சி அரசியலில் எந்த ஆர்வமும் காட்டாதிருந்த அதன்பிறகும் அரசியலில் ஈடுபடாத பல்கலைக்கழக மாணவ அமைப்பின் உறுப்பினர் தெரிவிற்கான தேர்தலில் ஒரு பதவிக்காக போட்டியிட்ட ஒரு மாணவன் திடீரென ஒரு சிவப்புச் சேர்ட் அணிந்துகொண்டு மிகவும் காரமான ஒரு உரையை ஆற்றினான். அவனது உரை இவ்வாறு முடிந்தது. "தோழர் கோவிந்தனது இரத்தம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்கு உரமாகநின்று அதை வளப்படுத்தும்" இன்றுள்ள எந்த ஒரு அரசியல்வாதிகூட தமிழ் தோட்டத் தொழிலாளி ஒருவரது மறைவினை தமது அரசியலுக்காகப் பயன்படுத்த முயலப்போவதில்லை. எந்த ஒரு தென்னிலங்கைக் கட்சியும், அன்று லங்கா சமசமாஜக் கட்சி செய்தது போல் ஒரு தமிழ் தொழிலாளியை சுட்டுக் கொன்ற ஒரு சிங்கள பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஒரு தேசிய அளவிலான எதிர்ப்புக் கிளர்ச்சியைச் செய்யப் போவதில்லை.

இன்று ஒரு கொலைக்காக - அந்தக் கொலை நியாயப் படுத்தப்படக் கூடியதோ இல்லையோ என்ற கேள்விக்காக தேசிய அளவில் ஒரு உணர்வலையை தட்டி எழுப்ப முடியாத அளவுக்கு நாம் ஆயிரக்கணக்கில் உயிர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழலைநோக்கி வளர்ந்து வந்துவிட்டோம்!

ஆனால், 1940களின் நடுப்பகுதியில் பிலிப் குணவர்த்த, கொல்வின் ஆர் டி சில்வா, என்.எம்.பெரேரா, எட்மன்ட் சமரக்கொடி ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டும் லெஸ்லி குணவர்த்தனவை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுமிருந்த (அவர் கைது செய்யப்படாமல் தப்பிக் கொண்டார்) நிலை உருவானதன் பின் கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஒரு தேக்கம் உருவாகி இருந்ததாகவே ஒரு மாணவனது பார்வையில் எனக்குத் தோன்றியது. கட்சி தலைமறைவாகியது. வெளிப்படையான ஒரு சில அசுமாத்தங்கள் மட்டுமே தெரிந்தன. 1941இல் எதிர்பாராத விதமாக லோரன்ஸ் பெரேரா என்னைச் சந்திப்பதற்காக பல்கலைக்கழகத்திற்கு வந்த நாள் வரை இப்படித்தான் இருந்தது. அவரது பெயரை இன்று மிகச்சிலர் மட்டும் தான் அறிந்திருப்பார்கள். ஆனால், நான் சந்தித்த மனிதர்களுள் மிகவும் முக்கியமான குறிப்பிடத்தக்க ஒரு நபர் என்ற காரணத்திற்காக அவர் பற்றிய வரலாற்று தகவல்களை நான் எழுத வேண்டும்.

(முதல் பகுதி முற்றும்)

## பாடசாலை மாணவர்கட்கான சிறுகதை, கவிதைப் போட்டி

பாடசாலை மாணவர்களின் படைப்பிலக்கிய ஆளுமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சரிநிகர் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதற்பரிசு ரூபா 1500
இரண்டாம் பரிசு 1000
மூன்றாம் பரிசு 500

போட்டி விதிகள்:

1. ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களின் சொந்த ஆக்கமாக, இதற்கு முன் எங்கும் வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.

2. ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. கதைகள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.

4. போட்டி முடிவுத் திகதி டிசம்பர் 15,2000

5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

6. அனுப்பப்படும் படைப்புகளில் பெயர் எழுதப்படாமல், தனியான தாளில் பெயர் விபரம் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

ஆசிரியர்
சரிநிகர்
19/04, 01/01 நாவல வீதி,
நுகேகொடை.

## காட்டிக்கொடுக்கும்...

### சிவில் அமைப்புகளின் தேவை

மலையகத்தின் குரல்வளை நசுக்கப்படும்போதும் இளைஞர்கள் கைது செய்யப்படும்போதும் மனிதாபிமான தலையீட்டை மேற்கொள்ள எவரும் இல்லை என்பது அதிர்ச்சிதரும் உண்மையாகும். உள்நாட்டு, வெளிநாட்டு, தொண்டர் நிறுவனங்களோ, மதகுருக்களோ, புத்திஜீவிகளோ, கல்வித்துறையினரோ, எவருமே இந்த மனிதநேயத் தலையீட்டை செய்யத் தயாராயில்லை என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. இதன் உச்சக்கட்டம் தான் சந்திரசேகரன் மாற்றுடை எடுக்க முடியாமல் கைது செய்யப்பட்டமையும், பண்டாரவளைப் படுகொலையில் இருந்து உயிர்தப்பியவர்கள் மாற்றுடையின்றி கட்டிலோடு சேர்த்து கட்டப்பட்டுள்ளமையும் காட்டி நிற்கிறது.

மனித உரிமைகள் குழுக்கள், பிரசைகள் குழுக்கள், மனித நேயத் தலையீட்டை செய்யக் கூடிய அழுத்தக் குழுக்கள் இனிவரும் நாட்களில் மலையகத்தில் நிரந்தரமாக அமைப்பாக இயங்காவிட்டால் மானிட நீதி இங்கே செத்துப் போவதுமட்டுமல்ல ஒரு தேசமே அரச பயங்கரவாதத்தில் சீரழிந்து போகும்.

### அகதிகள் நெருக்கடியும் நிர்க்கதியும்

தலவாக்கலை,வட்டக்கொடை, வட்டவளை, கினிகத்தேனை, பகுதிகளில் அகதிகளாக்கப்பட்ட தமிழ் சிங்கள மக்களில் சிங்கள மக்களுக்கு மட்டும் நிவாரணமும் உதவிகளும் வழங்கிய அரச ஏஜென்சிகள் தமிழ் மக்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்காததோடு அகதிளாக்கப்பட்ட தோட்டத் தொழிலாளருக்கு எவ்விதமான நிவாரணமும் வழங்காததோடு பொலிசாரும், இராணுவத்தினரும் சொந்தத் தோட்டங்களுக்கே விரட்டியடித்துள்ளனர். மேலும் கினிகத்தேனை பிரசித்திபெற்ற திட்டிவாயிலாக இருக்கின்ற நிலையில் உடமைகள் அனைத்தும் இழந்த தமிழர்களை தமது சாம்பல் மேடான இடங்களில் போய் இருக்குமாறு பொலிசார் மிரட்டி வருகின்றனர். இந்நிலையில் அரச அமைச்சர்கள், ஏஜென்சிகள், மலையக பாராளுமன்ற பிரதிநிதிகள் அனைவரும் ஏதோ ஒரு விசித்திரத்தை பார்ப்பதைப்போல் சம்பவங்களை பார்வையிட்டு வருகின்றனரே தவிர உண்மையான அக்கறை கொண்டவர்களாய் தெரியவில்லை.

வன்செயல்கள் நடைபெற்ற ஐந்து நாட்களின் பின்னர் எஸ்.பி. திசாநாயக்கவும், முத்துலிங்கம் ஜெகதீஸ்வரனும், இராதாகிருஷ்ணனும் அகதிகளைப் போய் பார்த்தார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதான போது மௌனித்திருந்த இ.தொ.கா. அவர்கள் காடையர்கள்,குண்டர்கள் என விளாசித் தள்ளியிருந்தது. ஆனால், இ.தொ.கா அமைப்பாளர்களும் ஆதரவாளர்களும் கைதாகத் தொடங்கியவுடன் ஓடிப்போய் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நாடகம் ஆடுகின்றனர்.

பேதமின்றி அச்சமின்றி எழுந்த பெருந்திரள் காட்டிக் கொடுப்பினால் களைப்படைந்து போகாது, ஒன்றுபட்டு போராடிய தொழிலாளரை, இளைஞர்களை, காட்டிக் கொடுத்த ஆறுமுகம் தொண்டமான் தன் கட்சிக்காரர்களுக்கே உதவ முடியாது ஓடியதோடு மலையகம் பற்றி எரியும்போதும், இளைஞர்கள் வகைதொகையின்றிக் கைதாகும் போதும், மௌனித்து நின்று தாத்தா வழியில் சம்மதம் தெரிவித்து பேரினவாத அரச இயந்திரத்தின் பேயாட்டத்துக்கு துண்ண போயிருக்கிறார்.

26 இளைஞர்கள் படுகொலைக்கெதிராக ஆர்த்தெழுந்த மலையகம், 13 இளைஞரை பலிகொடுத்த போது மேலும் கொதிப்படைந்துள்ளது.

வரப்போகும் காலம் மலையகத்தின் பெருந்தீயை மூட்டிவிடும் அந்தப் பெரும் தீயில் காட்டிக் கொடுப்போரும் இனவாதிகளும் பஸ்மமாவர்.

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## மாவீரர் தின உரையும் சமாதானமும்!

வரப்போகும் மாவீரர் தின உரையில் பிரபாகரன் என்ன சொல்லப்போகிறார் என்று எல்லோரும் எதிர்பார்த்த வண்ணம் இருப்பதாக பத்திரிகைச் செய்திகள் எழுதுகின்றன.

இராணுவத் தளபதி கூட அதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் தலைவி சந்திரிகாவின் உரையைவிட சகலரும் அதிக அக்கறையுடன் எதிர்பார்க்கும் பேச்சு பிரபாகரனின் பேச்சுத்தான் என்பது இப்போது பத்திரிகைகளைப் படிக்கும் எவருக்கும் புரிந்துகொள்ள முடியும்.

சமாதானப் பேச்சு முயற்சி எப்படி அமையப் போகிறது என்பதை அறிய இது அவசியம் என்பதே இந்த எதிர்பார்ப்புகளின் அடிப்படை.

ஆக, 'சமாதானம்' இன்று எல்லோரும் ஆசைப்படுகின்ற ஒரு விடயம் என்பது தெளிவு. ஆனால், பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது என்றவுடன் சமாதானத்தை அடைவதற்கு அதை எப்படி நடத்துவது என்று யோசிப்பதைவிட எல்லோரும் இதை வைத்து எப்படி அரசியல் நடத்தலாம் என்று யோசிப்பதாகவே படுகிறது.

புலிகள் தட்டிக் கழிப்பார்கள், இழுத்தடிப்பார்கள் என்ற சந்தேகங்களை முடியுமானளவு பரப்புவதில் அரசியல்வாதிகள் காட்டும் அக்கறையை பேச்சு-வார்த்தை வெற்றி பெறக் கூடியவிதமாக செயற்படுவதில் காட்டுவதாக தெரியவில்லை. எல்லாவற்றையும் தமது சுயநல லாபங்களுக்காக பயன்படுத்திப் பழகிவிட்ட அரசியல்வாதிகளுக்கு சமாதானத்துக்கான புலிகளின் அழைப்பையும் விற்றுப் பிழைக்கலாம் என்று தோன்றுவதில் வியப்பில்லை.

ஆனால், அரசு?

அதற்கு இந்த அரசியல் லாபங்கள் எல்லாவற்றையும் மீறிய கடப்பாடு ஒன்று இருக்கிறது. பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட-வராக பிரபாகரன் தன்னிடம் அறிவித்துள்ளதாக நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார்.

ஆனால், பிரபாகரன் தான் இவ்விடயத்தில் இதய சுத்தியுடன் இருப்பதாக தம்மை நம்ப வைக்க வேண்டும் என்று இராணுவ தலைமை கூறுகின்றது. லெப். ஜெனரல் லயனல் பலகல்லவின் இந்தக் கூற்று இவ்வளவு கால பேச்சுவார்த்தை முயற்சிகளின் .தோல்விக்கு பிரபாகரன் மட்டுமே காரணம் என்பது போல அமைந்திருக்கிறது. அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தை நடத்துவதும், ஒரு சமாதானபூர்வமான முடிவை அடைவதும் தான் நோக்கம் என்பதால் தான் புலிகள் மட்டுமல்லாமல் அனைத்து தமிழ்த்தரப்பும் தொடர்ச்சியாக ஒரு மூன்றாம்தரப்பு மத்தியஸ்த்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. ஆனால், மாறி மாறிவந்த இலங்கையின் அரசுகள் தொடர்ச்சியான அந்தக் கோரிக்கையை புறக்கணித்தே வந்திருக்கின்றன. இதுவே பல முயற்சிகள் தோல்வியுறக் காரணமாயும் இருந்திருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையை முன்மொழிந்தது பிரபாகரன் என்பதால், புலிகள் இராணுவ ரீதியில் பலவீனமாக இருக்கிறார்கள் என்று கருதுகிறது இலங்கை படைத்தரப்பு. பலவீனமான நிலையில் இருந்துகொண்டு தான் பிரபாகரன் பேசக் கூப்பிடுகிறார், தன்படை பலத்தை மீள பலப்படுத்திக் கொள்ளத்தான் அவர் முயல்கிறார் என்று கருதுகிறது இராணுவத் தரப்பு.

உண்மையில், இன்று யுத்தக்களத்தில் நிற்கும் இருதரப்பில் எத்தரப்பும் பலமாக இருப்பதாக சொல்ல முடியாது. இங்கு நாம் பலம் என்று சொல்லும்போது வெறும் ஆள் எண்ணிக்கை, ஆயுதங்களின் அளவு, யுத்த மனோநிலை, அரசியல்பலம் என்ற சகலவிடயங்களதும் கூட்டு என்ற அடிப்படையிலேயே சொல்கிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் புலிகளிடமிருந்து ஆளணி, ஆயுதங்களைவிட, அதிகமாக அரசிடம் இருப்பது இயற்கை தான். ஆனால், இவ்வாறான ஒரு யுத்தத்தில் இவ்விடயங்கள் யுத்தத்தின் நிரந்தர வெற்றியை ஒரு போதும் திர்மா-னிப்பதில்லை. பூகோள நிலைமை, அரசியல்பலம் என்பன இவற்றைவிட முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் இன்று பலவீனமாக இருப்பது புலிகளைவிட அரசாங்கம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் புலிகள் ஒரு ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காக போராடும் 'தார்மீக' பலத்தையும் மக்களின் அனுதாபத்தையும் தம்மகத்தே கொண்டிருக்கிறார்கள். பண்டாரவளை போன்ற சம்பவங்கள் அவர்களது நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துபவையாக அமைந்-துள்ளன. அரசைப் பொறுத்தவரை அது சிங்கள இனவாதிகளது யுத்தத்திற்கான ஆதரவைத்தவிர வேறு ஆதரவு அதனிடம் கிடையாது. இந்த ஆதரவு கூட இராணு-வத்தின் அரசியலுக்கு பலத்தையோ, மனோபலத்தையோ பெரிதாக வழங்கி-விடப்போவதில்லை. வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைத் தாக்கவும் கொல்லவும் வேண்டிய பலத்தை வேண்டுமானால் அது வழங்கலாம். ஆனால், யுத்தத்தினை தொடர்ந்து நடாத்தும் பலத்தை அது பெரிதாக வழங்கிவிடப் போவதில்லை!


சமாதானத்தை விரும்புகிற, அநியாயமாக யுத்தமிட்டுக் கொல்லவும், இறந்துபோகவும் விரும்பாத பல இராணுவ அதிகாரிகள் அரைமனதுடன் இன்று யுத்தக்களத்திற்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், சமாதான முயற்சி இரு இன மக்களுக்கும், நாட்டுக்கும் எல்லோருக்குமே உவப்பான உகந்த நன்மை தரக் கூடிய ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை.

புலிகளும் அரசும் இந்தப்பொறுப்பை உணர்ந்து நிதானமாகவும் சமாதானக் குறிக்கோளை அடையும் இலட்சியத்துடனும், அக்கறையுடன் பேச்சில் இறங்க வேண்டும். அதுதான் இன்றைய இலங்கை மக்களதும் குறிப்பாக தமிழ் மக்களது, வேணவா.

பிரபாகரன் தனது மாவீரர் தின உரையை இந்த வேணவாவை கணக்கில் எடுத்துக்கொண்டு ஆற்றுவர் என நம்புவோமாக!

# வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டு இளைஞர்களின் பரிதாப நிலை!



கடந்த ஜுன் 7ம் திகதியன்று நடராஜா, பாலசிங்கம் என பெயர் குறிப்பிடப்பட்ட இருவர் வவுனியா குட்செட் வீதியில் உள்ள இடைத் தங்கல் முகாமில் படையினரால் கொண்டு வந்து பொலிசாரிடம் ஒப்படைக் கப்பட்டனர். இவர்களின் உடல்நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

பார்வை அற்றவர்களாகவும், வாய்பேச முடியாதவர்களாகவும் உடலில் அடி காயங்களும் கூரிய ஆயுதங்களால் தாக்கிய காயங்களும் காணப்பட்டன. ஜுன் 08 அன்று இடைத் தங்கல் முகாம் பொலிசாரினால் இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஜுன் 12 அன்று மரணமடைந்து விட்டார். இவருடைய சடலம் அடையாளம் காணப்படாது நீண்ட நாள் வவுனியா வைத்திய சாலையிலேயே வைக்கப்பட்டிருந்து. பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

அடுத்த நபர் இரண்டொரு தினங்களின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய-சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் கொழும்பிலிருந்து மீண்டும் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். இவர் இப்பொழுதும் வாய் பேசமுடியா-தவராகவும், கண்பார்வையற்-றவராகவும் இருக்கின்றார். அத்தோடு சித்தசுவாதீனம் அடைந்துமுள்ளார். இவரை வவுனியா வைத்தியசாலை ஊழியர்கள் சிலர் கவனித்து வருவதால் இவரது வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கின்றது.

வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட இவ்விரு-வரையும் மணலாறு மாவட்டத்தில் வைத்து 94ஆம் ஆண்டு படையினர் கைது செய்துள்ளனர். பின்னர் தொடர்ந்து பனாகொட படைமுகாமில் தடுத்து வைத்துள்ளனர். படையினரின் கடுமையான தாக்குதலினால் பாதிக்கப்பட்டிருந்ததால் இருவரையும் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்துள்ளனர். அனுராதபுரத்திற்கு கொண்டு வந்த போது வைத்தியசாலை வட்டாரங்கள் பொறுப்பேற்க மறுத்ததினால் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாமான குட்செட் முகாமில் கொண்டு வந்து கடற்புலிகள் எனக்கூறி விட்டுச் சென்றுள்ளனர். குட்செட் இடைத்தங்கல் முகாம் பொலிஸ் பொறுப்பதிகாரி இருவரும் கடுமையாகப் பாதிக்கப்-பட்டிருந்ததினால் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் கொண்டு வந்து அனுமதித்துள்ளார். இவர்கள் இருவரின் கைது தொடர்பாக அனைத்துலக செஞ்சிலுவை குழுவினர்- மற்றும் மனிதஉரிமை அமைப்புக்கள் படையினர் இருவரையும் கைது செய்து அறிவிக்காமல் வைத்திருந்தது சட்ட விரோதமான காரியம். மறுபுறத்தில் விசாரணைகள் செய்யப்பட்டு இந்த இருவ்ரும் யார்? எனக் கண்டறியப்பட வேண்டும்.

ஜெயபால் எனத் தன்னைச் செல்லிக் கொள்ளும் இந்த இளைஞனை வேறு ஏதோ பெயரைக் கூறியே கொண்டு வந்த படையினர் விட்டுச் சென்றுள்ளனர். வவுனியா வைத்தியசாலையில் இருக்கும் இந்த இளைஞன் யார்? ஏன் இந்த நிலைக்காளானான் என பல கேள்விகளுக்கு விடை கிடைக்-காது. எல்லாம் பிடித்தவர்களிற்கும் சித்திரவதை செய்தவர்களிற்குமே தெரிந்த உண்மை.

எந்த உறவுகளின் கவனிப்பும் இல்லாது வவுனியா வைத்தியசாலையில் இருக்கும் இந்த இளைஞனின் வாயிலிருந்து உரும்பிராய் என்ற சொல்லொ அடிக்கடி வருகின்றது. படையி பற்றிக் கதைத்தால் சுவர்களின் அருகில் சென்று பதுங்கி இனம் புரியாத மொழியில் கத்தி கூச்சலிட்டு பதுங்கி அழுகின்ற கண் தெரியாது, வாய்பேச முடியாது, மனநிலைபாதிப்பு, எ எவராலோ ஆக்கப்பட்ட இந்த இளைஞனை தற்போது வவுனி வைத்தியசாலையில் நல்ல மனம் கொண்ட ஊழியர்கள் கவனிப்பது தேவை உணர்ந்த பணி என்பதா பாராட்ட வேண்டியதே.

- கே.ஆர். வவுனியா

* சிங்கள மக்கள்

என்ன நினைக்கிறார்கள்

தமிழ் மக்களைப் பற்றி ?

பாருங்கள் நவமபர் மாதம் 21 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியை




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!
இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19 /04, 01 /01, நாவல வீதி, நுகேகொட., அச்சுப்பதிவு : நவமக, 66 /04, தர்மாராம வீதி, இரத்மலானை. .15.11.2000